

# உங்கள் குழந்தைகள் உங்கள் குழந்தைகள் அல்ல

கலாநிதி ஜீவகுமாரன்

# உங்கள் குழந்தைகள்
# உங்கள் குழந்தைகள் அல்ல

கலாநிதி ஜீவகுமாரன்

உங்கள் குழந்தைகள் உங்கள் குழந்தைகள் அல்ல
கலாநிதி ஜீவகுமாரன்
முதற்பதிப்பு: மாசி 2023
© வி.ஜீவகுமாரன்
தொலைபேசி :
வடிவமைப்பு : க.பரணீதரன்
வெளியீடு: ஜீவநதி, கலைஅகம், அல்வாய்
பக்கம்: 124
விலை: 600.00
அச்சுப்பதிப்பு: பரணீ அச்சகம், நெல்லியடி.

**Unkal Kulanthaikal Unkal kulanthaikal alla**
**Kalanithy Jeevakumaran**
Address:
First Edition: february 2023
© V.Jeevakumaran
Designed by K.Bharaneetharan
Published by Jeevanathy, Kalai aham, Alvai
Pages: 124
Price: 600.00
Printed at Baranee Printers, Nelliady.
ISBN: 978-624-5881-84-0

ஜீவநதி வெளியீடு - 262

சமர்ப்பணம்

# பொருளடக்கம்

**அத்தியாயம் - 1**

உங்களுடைய குழந்தைகள்

உங்களுடைய குழந்தைகள் அல்ல

**அத்தியாயம் - 2**

நாமும் நம் செல்வங்களும்

**அத்தியாயம் - 3**

அகப்பைக்காம்பு

**அத்தியாயம் - 4**

பிரம்பு தொலைந்தது எங்கே?

**அத்தியாயம் - 5**

அட வீட்டுக்கு வீட்டுக்கு வாசல்ப்படி வேண்டும்

**அத்தியாயம் - 6**

சொன்னது நான் தானா?

**அத்தியாயம் - 7**

உறங்கியபடியே உலாவுகின்ற பெற்றோர்

**அத்தியாயம் - 8**

நான் யார் என்று புரிகின்றதா?

**அத்தியாயம் - 9**

வயித்தில நெருப்பைத் தினம் கட்டயபடி

ஏன் இந்த வெளிநாட்டுச் சீவியம்?

**அத்தியாயம் - 10**

இவர்கள் பிள்ளைபிடிகாறர்களா?

இல்லை ஆபத்பாந்தவர்களா?

# வாழ்த்துரை

குழந்தைகளை தங்கள் செல்வங்களாகவும் வாரிசுகளாவும் முக்கியமாக தமது உடைமைகளாகவும் கருதுகின்ற ஒரு சமூக அமைப்பில் பிறந்து தன் இளமைப் பருவத்தை கழித்து இன்று மேற்கு நாட்டில் வாழும் கலாநிதி ஜீவகுமாரன் "உங்கள்குழந்தைகள் உங்கள் குழந்தைகள் அல்ல" என தான் எழுதிய ஒரு நூலை அனுப்பி என்னிடம் ஒரு வாழ்த்துரை கேட்டிருந்தார்.

மரபுவழிப் பெற்றோருக்கு மிகுந்த ஆச்சரியம் தரும் தலைப்பு இது.

நமது குழந்தைகள் நமது குழந்தைகள் தானே?

இது என்ன புதினம் !

நமது குழந்தைகளை நமது குழந்தைகள் அல்ல என்று இவர் கூறுகிறாரே என பலர் ஆச்சரியமடையக் கூடும்.

நமது குழந்தைகள் நமது குழந்தைகள் என்பது ஒரு மரபாயின், நமது குழந்தைகள் நமது குழந்தைகள் அல்ல என்பது இன்னொரு மரபு.

நமது குழந்தைகள் நமது குழந்தைகள் அல்லன வாயின் பின் அவை யாருடைய குழந்தைகள்? என்ற கேள்வி எழும்.

அதற்கான பதில் அவர்கள் சமூகத்தின் குழந்தை கள் என்பதாகும்.

நாமும் ஒரு குறிப்பிட்ட பெற்றோரின் குழந்தையாக இருந்து பின்னால் சமூகத்தின் குழந்தைகளாக மாறியவர் களே.

இந்த மாற்றத்திற்கு பின்னால் பெரியதோர் மனித

குல வரலாறும் பண்பாட்டு வரலாறும் உள்ளது.

மனித குல வரலாற்றை எடுத்துப் பார்த்தால் பிள்ளைகள் மிகப் பழங்காலத்தில் பெற்றோரின் குழந்தைகளாக அன்றி சமூகத்தின் குழந்தைகளாகவே கணிக்கப்பட்டிருக்கிறார்கள்.

புராதன குழு வாழ்க்கைக்காலத்தில் பிறந்த குழந்தைகள் தாயை மாத்திரமே அறிவார் என்றும் அவர்கள் அக்குழுவின் சொத்து எனவும் கருதப்பட்டனர் என்றும் மானிடவியல் கூறும்.

குடும்ப அமைப்பும் சொத்துரிமையும் வந்தபின்தான் அவர்கள் தனிப்பட்ட பெற்றோர்களின் குழந்தைகள் ஆகிவிட்டார்கள்.

பல்லாயிரக்கணக்கான வருடங்களைத் தாண்டி வந்த மனித குலம் மீண்டும் சமூக வாழ்க்கைக்கு செல்வதன் அடையாளம் தான் குழந்தைகள் பெற்றோரின் குழந்தைகளாக அன்றிச் சமூகக் குழந்தைகளாக மதிக்கப் படுவது.

சமூகக் குழந்தைகளாயின் அவர்கள் சமூகத்தால் வளர்க்கப்பட வேண்டும்.

சமூக உணர்வோடு வளர்க்கப்பட வேண்டும்.

சமூகத்துக்கு பயன்படுபவர்களாக வளர்க்கப்பட வேண்டும்

இப்படி வளர்த்தலை இன்று நவீன கல்வி நிறுவனங்கள் செய்ய முற்படுகின்றன.

விஷேடமாக மேற்கு நாடுகளிலே குழந்தை மையக் கல்வியும் குழந்தைகளோடு சேர்ந்து நாமும் கற்கும் கல்வியும் உருவாகி இருப்பதை நாம் அறிவோம் .

இந்த உலக அனுபவங்களை தமிழ் மக்கள் அறிய வேண்டும் என்ற பேரவாவோடு எழுந்த நூலே கலாநிதியின் இந்த நூலாக எனக்குப் படுகிறது.

மிகச் சுவையாக எழுதப்பட்ட இந் நூலில் கிழக்கின் சிந்தனை யும் மேற்கின் சிந்தனையும் அழகாக இணைகின்றமையைக் காணு கின்றோம்.

நூலாசிரியர் கலாநிதியை யாழ்ப்பாணத்தில் அவரது பல்கலைக் கழகப் பருவத்தில் நான் காணுகின்றேன்.

கதர் ஆடையுடனும் கழுத்தில் ஓர் கறுத்த நாடாவுடனும் மிக எளிமையான தோற்றத்துடனும் நிமிர்ந்த நன்நடையுடனும் நேர்கொண்ட பார்வையுடனும் திமிர்ந்த அறிவு செருக்குடனும் அகண்ட முகத்தின்

பரந்த நெற்றியில் ஒரு பெரியவட்டப் பொட்டுடனும் வந்த ஒரு மாணவி ஞாபகம் வருகிறாள்.

கம்பீரமாக நடந்து வந்த அவளுடைய ஆளுமையான நறுக்கான பேச்சும் சமூக அக்கறையும் என்னைப்பெரிதும் கவர்ந்தன.

அவள் பின்னாளில் டென்மார்க் சென்ற போது தன் மேற்கல்வியை அங்கு தொடர்ந்து அந்த பண்பாட்டில் தோய்ந்து எழுந்தாள்.

பல்வேறு அனுபவங்களை அவள் பெற்றாள்.

இலங்கைத் தமிழ்ப் பண்பாடும் டென்மார்க் பண்பாடும் இணைந்து ஓர் உருவாக அவள் மேல் எழுந்த போது மேற்கைத் தன் வயமாக்கி கிழக்கு மொழியில் பேசுகின்ற ஒரு எழுத்தாளி நம்மிடம் உருவானாள்.

கலாநிதியின் எழுத்துக்கள் இதற்குச் சான்றுகளாகும்.

திறமையான இலக்கியப் படைப்புகளை தந்தவர் அவர்.

அதற்கு அடித்தளம் அவள் அக்காலத்தில் யாழ்பல்கலைக் கழகத்தில் வல்லாரிடம் பெற்ற தமிழ் இலக்கியக் கல்வி

அதனடியாக அவள் நவீன இலக்கியம் படைக்கும் எழுத்தாளி யும் ஆனாள். அவரது படைப்புகள் அந்நாட்டு மொழியிலும் வெளி வந்துள்ளன என அறிகிறோம்.

இருநாட்டு பண்பாட்டுத் தடமும் இரு மொழி அறிவும் உடையவர் களாலேயே இது சாலும்.

கலாநிதியின் இந்நூலில் இரு நாட்டு பண்பாடுகளை மாத்திர மன்றி இரண்டு விதமான எழுத்து நடைகளையும் காணுகிறோம்.

ஒன்று ஆக்க இலக்கியம் சார்ந்த ஒரு நடை.

இன்னொன்று விமர்சனம் சார்ந்த தர்க்க ரீதியான ஒரு நடை.

நூலில் கூறப்படும் விடயங்களும் அவ்வாறே.

மேற்கு அனுபவங்களும் கிழக்கு அனுபவங்களும் இரு வேறு நடை போன்று பிணைந்து இந் நூலுக்கு தனி அழகு தருவது தான் இன் நூலில் பிரதான அம்சம் போல எனக்குப் படுகிறது.

கல்விசார் நூல் ஒன்று காவியமாக மலர்ந்ததனை இங்கு காண்கிறோம்.

புலம்பெயர் நாட்டில் வாழ்வோரில் அதிகமானோர் தாயக பாரம் பரியத்தை அங்கு அதிகம் பேணுபவர்களாக இருப்பதை நான்

அறிந்துள்ளேன் - கண்டும் உள்ளேன்.

ஆனால் காற்று அசைகின்ற பொழுது மரம் அசையாமல் இருக்க முடியுமா?

இல்லையே.

பல மாற்றங்கள் அங்கு ஏற்பட்டுள்ளன எனினும் அங்கு வாழும் பழம் தலைமுறையினர் மரபு பேணுபவர்களே.

குழந்தைகளைக் கட்டுப்பாடாக வளர்த்து உயர்நிலைக்கு கொண்டு வர வேண்டும் என தம்மை அர்ப்பணிப்போர் குழந்தைகளின் மன நிலையை அவர்கள் வளரும் சூழலைக் கவனிக்கத் தவறி விடு கிறார்கள்.

ஆனால் மேற்கு நாட்டை குழந்தை கல்வித் திட்டம் அவ்வாறு இல்லை.

ஒழுங்காக அவர்கள் வளர அது பேருதவி புரிகிறது.

நமது நாட்டிலும் குழந்தைகளை கட்டுப்பாடாக வளர்த்து உயர்நிலைக்கு கொண்டுவர தம்மை அர்ப்பணிக்கும் பெற்றோரையே அதிக காணுகிறோம். கல்வித் திட்டங்களும் அவர்கள் மனதை மாற்றுவதாய் இல்லை.

ஆனால் நாம் வாழும் இந்த யுகம் வித்தியாசமான யுகம்.

மனித உரிமைச் சிந்தனைகளும் முக்கியமா குழந்தை உரிமை சிந்தனைகளும் அதிகமாக பேசப்படுகின்ற யுகம்.

இந்த யுகத்தின் விதிக்கு நாம் தப்ப முடியாது.

உலகத்தோடு ஒட்ட முடியாதோர் பல கற்றும் கல்லாதோரே என்பர் வள்ளுவர்.

தான் சென்று குடியேறிய நாட்டில் கற்ற புதிய சிந்தனைகளை அங்குள்ள மரபுசார் தமிழருக்கும் இங்கு வாழ் தமிழ்ப் பெற்றோருக்கும் கற்றோருக்கும் அறிவிக்கும் முயற்சியாகவே இந்நூல் எனக்கு தெரிகிறது.

மகாகவி பாரதியார்

சென்றிடுவீர் எட்டுத்திக்கும் - கலைச்

செல்வங்கள் யாவும் கொணர்ந்திங்கு சேர்ப்பீர் என்றார்.

கலாநிதி தான் சென்ற திசைகளில் பெற்ற கலைச்செல்வத்தை இங்கு கொண்டு சேர்க்கிறார்.

நான் அறிந்த கலாநிதி பாரதியாரின் பரம பக்தை அவருடைய

புரட்சி கருத்துக்களில் மிகுந்த ஈடுபாடு கொண்டவர் அதுவாகவே வாழ்ந்தவர்.

பாரதியார் கூறிய வழியில்,. தான் பெற்ற கலைச் செல்வத்தை இங்கு கொண்டு வந்து தருகிறார் கலாநிதி.

சிந்தனை வளமும்

இலக்கிய அழகும்

உளவியல் நோக்கும்

எழுத்து நடை அழகும் நூலை தொட்ட இடமெல்லாம் மணக்கின்றன.

கூடவே கலாநிதியின் ஆழமான சிந்தனைகளும் பயணிக்கின்றன.

Doctor of Philosophy எனும் பட்டத்தினை நமது நாட்டில் கலாநிதி பட்டம் என அழைப்பர். இதனை தமிழ்நாட்டில் முனைவர் என்பர்,

தனது பெயரிலேயே கலாநிதி அந்தப் பட்டத்தை கொண்டுள்ளார்.

அந்தப் பட்டமும் அந்தப் பெயரும் அவருக்கு பொருத்த மானவைதான் போல படுகிறது

இத்தனைக்கும் மேலால் அவர் மிகுந்த குரு பக்தி மிகுந்தவர். விமர்சனப்பார்வை கொண்டவர்.

கலாநிதி மென்மேலும் இத்துறைகளில் ஈடுபட்டு அரிய பல நூல்களை நம் தமிழ் சமூகத்துக்கு தர வேண்டும் என மனதார வாழ்த்துகிறேன்.

சி. மௌனகுரு<br>
45/19 இரண்டாம் குறுக்கு<br>
சின்ன உப்போடை வீதி<br>
மட்டக்களப்பு<br>
19.02.2023

# அணிந்துரை

கலாநிதி ஜீவகுமாரன் அவர்கள் கவிதை, கட்டுரை, ஆராய்ச்சிக் கட்டுரை ஆகிய துறைகளில் தடம் பதித்தவர். யாழ். பல்கலைக்கழக பழைய மாணவியான இவர் டெனிகூஷ் மொழியில் கவிதை வடிவில் எழுதிய நாவல் ஷஇப்படிக்கு அன்புள்ள அம்மா; என்ற பெயரில் ஏற்கனவே வெளிவந்து வாசகர்களிடையே பெரும் வரவேற்பைப்பெற்றது.

“உங்களுடைய குழந்தைகள் உங்களுடைய குழந்தைகள் அல்ல; என்ற இந்த நூல் குழந்தை வளர்ப்பு பற்றிய உளவியல் சார்ந்த கட்டுரைத் தொகுப்பாகும்.

நூலாசிரியர், டென்மார்க்கில் குழந்தை வளர்ப்புத் துறையில் படித்து அத்துறையிலேயே வேலைசெய்தவர். அந்தவகையில் அவர் இந்நூலினை எழுதுவதற்கான தகுதியும் அனுபவமும் மிக்கவர்.

கீழைத்தேயப் பெற்றோர்கள் தமது பிள்ளைகளின் மீது அளவுகடந்த பாசத்தை வைக்கிறார்கள். பிள்ளை களுக்கு உயிருண்டு உணர்வுண்டு என்பதை மறந்து அதீத அன்புகொண்டு அவர்கள் நமது உரிமை என்ற நினைப்புக்கு ஆளாகிவிடுகிறார்கள். தாம் இல்லாது தமது பிள்ளைகள் தனித்து இயங்க மாட்டார்கள் என்று பயந்து அவர்களைப் பாதுகாக்கப் புறப்பட்டு விடுகிறார்கள். தமது கூட்டில் தம்மால் உருவாக்கப்பட்ட கூட்டுப்புழுவுக்கு சிறகுகளைத் தாமே கொடுத்துவிட்டு அவர்களைப் பறக்கவிடாது தாமே தமது கைகளில் இறுக்கிப்பிடித்து நசுக்கிவிடுகிறார்கள்;

மேற்குறித்தவாறான பெரும்பாலான கீழைத்தேயப் பெற்றோர்களது பிள்ளை வளர்ப்பு முறைகளில் உள்ள குறைபாடுகளை நிவர்த்தி செய்வதற்கான அணுகு முறைகளைக் கூறுவதாக இந்நூல் அமைந்துள்ளது.

நூலாசிரியர் தனது கருத்துக்கு வலுச்சேர்க்கும் வகையில் உலகப் புகழ்பெற்ற கலீல் ஜிப்ரானுடைய கவிதை வரிகளை எடுத்துக்காட்டுகிறார்:

உங்கள் குழந்தைகள் உங்கள் குழந்தைகள் அல்ல
அவர்கள் இயற்கையின் (கடவுளின்) குழந்தைகள்
உங்கள் குழந்தைகள் உங்கள் மூலமாக வந்திருக்கிறார்களே அன்றி
உங்களிடமிருந்து அல்ல
உங்கள் குழந்தைகள் உங்களுடன் இருந்தாலும்
உங்களுக்குச் சொந்தமானவர்கள் அல்ல
உங்கள் அன்பை நீங்கள் அவர்களுக்குத் தரலாம்
உங்கள் எண்ணங்களை அல்ல
அவர்களுக் கென்று தனிச்சிந்தனைகள் உண்டு
அவர்களின் உடல்களுக்குத்தான் நீங்கள் பாதுகாப்புத் தரமுடியும்
ஆத்மாக்ளுக்கு அல்ல
அவர்களின் ஆத்மாக்கள் நாளைய வீட்டில் வாழ்பவை
அங்கே நீங்கள் செல்ல முடியாது....”

பிள்ளைகளின் வளர்ச்சிக்கட்டங்கள் யாவை என்பதைக்கூறி அவ்வளர்ச்சிக் கட்டங்களின்போது பெற்றோர் எவ்வாறு நடந்து கொள்ளவேண்டும் என்பதை இந்நூல் விரிவாக விளக்குகிறது.

மேலும், பேற்றோர்கள் பிள்ளைகளை தமது சொத்து எனப் பார்க்காது அவர்கள் தனித்துவமான மனிதர்கள் தனித்துவமான உடல் உள்ள அமைப்பைக் கொண்டு பிறந்துள்ள ஆத்மாக்கள் என்ற ரீதியில் பார்க்க வேண்டும்.

காலதேச வர்த்தமானங்களுக்கு ஏற்ப பிள்ளை வளர்ப்பில் பெற்றோர் தம்மை மாற்றிக் கொள்ள வேண்டும். உணர்ச்சிவசப்பட்டு பிள்ளைகளை அடிக்கப் போவது பெற்றவர்களின் பலவீனத்தையே பறை சாற்றுகின்றது.

அளவுக்கதிகமான செல்லமும் அதிகாரமும் பெற்றவரிடையே ஒற்றுமையின்மையும் குழந்தைகளைப் பெரிதும் பாதிக்கின்றது.

உளவியல் ரீதியாகப் பிள்ளைகளின் மூளை வளர்ச்சி என்ன என்பதன் மூலம் நமது பிள்ளைகளை எவ்வாறு புரிந்து கொள்ளலாம்

புலம் பெயர் தேசத்தில் பெற்றவர்களும் அவர்களது குழந்தை

களும் எவ்வாறு கலாசார சிக்கல்களை எதிர்கொள்கின்றனர்

பெற்றோர் பிள்ளைமேல் அளவுக்கதிகமாக உரிமை கொண்டாடினால் அவர்களுக்கும் பெற்றோருக்குமான உறவு அழிவுப் பாதையை நோக்கியே செல்லும்.

பெற்றோர்கள் இவ்வுலகை விட்டுச் செல்லும்பொழுது தமது அன்பையும் அறிவையும் மட்டுமே குழந்தைகளுக்காக விட்டுச் செல்ல முடியும். காரணமற்ற அந்த அன்பானது பெற்றோருக்கும்சரி பிள்ளைகளுக்கும்சரி சொர்க்கமும் நரகமும் ஆகும்.

மேற்குறிப்பிட்டவாறான கருத்துக்கள் பொதிந்த இந்நூல் பிள்ளைவளர்ப்பு முறையில் பெற்றோர்கள் கடைப்பிடிக்வேண்டிய முறைகளை எடுத்தியம்புவதோடு பெற்றோருக்கும் பிள்ளைகளுக்கும் புரிதலை உண்டாக்கும் ஒரு பாலமாகவும் விளங்குகிறது. ஒவ்வொரு பெற்றோரிடத்தும் இருக்கவேண்டிய கைநூல் இது.

படித்துப் பயன்பெறவும் பாதுகாத்துப் பேணவும் ஏற்ற இந்த நூலை ஆக்கித்தந்த கலாநிதி ஜீவகுமாரன் பாராட்டுக்குரியவர்.

**தி. ஞானசேகரன்**

**(ஞானம் பிரதம ஆசிரியர்)**

# முன்னுரை

“உங்கள் குழந்தைகள் உங்கள் குழந்தைகள் அல்ல ” என்ற இந்த நூலை நான் எழுதுவதற்கான பின்னணி எனது வாழ்க்கை ஓட்டத்தில் என்னுள் ஏற்பட்ட எனது அடையாள மாற்றமே காரணம் எனலாம்.

நாம் பிறந்தது முதல் இறக்கும் வரை தினம் தினம் புதிய விடயங்களைக் கற்றபடியே வாழ்கின்றோம். அத்தகைய கற்றலானது நூலறிவாகவும் அனுபவ அறிவாக வும் அமைகின்றது. அந்த வகையில் முதலாம் வகுப்பு முதல் பல்கலைக்கழகம் வரை இலங்கையில் படித்தவை யும் புலம் பெயர்ந்து டென்மாக் நாட்டில் படித்தவையும் எனது சிந்தனையிலும் அடையாளத்திலும் பல மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளன.

டென்மார்க்கில் நான் படித்த படிப்பை ஆங்கிலத் தில் மொழி பெயர்த்தால் (pedagogue) எனக் கூறுவார்கள். தொட்டில் முதல் சுடுகாடு வரையிலான மனித வாழ்வில் புரிந்துணர்வு, பராமரிப்பு, அன்பு, அறிவு என்பன அவசிய மான வாழ்வாதாரங்களாக உள்ளன. அவை சம்பந்தப் பட்ட அறிவைப் பெற்றுக் கொள்வதும் அதை நடைமுறைப் படுத்துவது மான தொழிற்கல்விப் படிப்பே அதுவாகும். அதிலும் குறிப்பாகக் குழந்தை வளர்ப்புத் துறை முக்கியமானது. மூன்றரை வருடங்கள் அக்கல்வியைப் படிக்க வேண்டும். அத்துடன் இருகலாசார ஆசிரியர் ஆவதற்காக ஒரு வருடம் என மொத்தம் நான்கரை ஆண்டு கள் கற்ற அக்கல்வியும் அந்தத் துறையில் பணிபுரிந்த அனுபவமும் என்னுள் பல சிந்தனை மாற்றங்களை உண்டாக்கின.

அத்துடன் டென்மார்க்கில் மொழி பெயர்ப்பாள

ராகக் கடமை ஆற்றிய அனுபவங்களும் சேர்ந்து கொள்ள என் அடையாளமும் அனுபவமும் மாற்றம் பெற்றது. ஏற்கனவே இருந்த வலது இடது கண்களுடன் சேர்ந்து எனக்கு மூன்றாம் கண்ணாக ஒரு குழந்தைக் கண் கிடைத்தது. அதன் மூலமாக என்னுள் எழுந்த சிந்தனைகளைக் கட்டுரைகளாக எழுதி உங்கள் பார்வைக்கு வைத்துள்ளேன்.

பெற்றவருக்கும் பிள்ளைகளுக்குமான உறவில் சிக்கல்கள் ஏற்பட என்ன காரணம் என்பதும் அந்தக் கேள்விக்கான விடை தேடலுமே இந்த நூல் உருவாகக் காரணமாக இருந்துள்ளது. குழந்தைகளின் பிரச்சனை என்பது குழந்தைகளின் பிரச்சனை மட்டுமல்ல அது பெற்றவரதும் பிள்ளை வளரும் சூழலையும் உள்ளடக்கியதே. அந்த வகையில் இந்த நூலில் பின்வரும் வினாக்களுக்கு விடை காண முயன்றுள்ளேன்.

1.வீடுவளவு, காணி, கார் போன்ற சொத்துக்கள் போன்று குழந்தைகளையும் நமது சொத்துக்களாகக் கருதுவது சரி தானா?

என்னுடைய சொத்து என்ற நிலையிலிருந்து விலகிக் குழந்தை களைத் தனிப்பட்ட மனிதர்களாகவும் தனிப்பட்ட ஆத்மாக்களாகவும் எவ்வாறு நோக்குவது ?

2.உளவியல் ரீதியாகக் குழந்தைகளின் வளர்ச்சிக் கட்டங்களை எவ்வாறு புரிந்து கொண்டு பெற்றவர்கள் வளர்க்க வேண்டும்?

3.அடித்து வளர்ப்பது சரியா? அடிக்காமல் எப்படி வளர்ப்பது?

4. கட்டுப்பாடுகள் குழந்தை வளர்ப்புக்கு ஏன் அவசியம்?

5.நாம் விழிப்புணர்வு உள்ள பெற்றவர்களாக எப்படி இருப்பது?

6.புலம்பெயர் தேசங்களில் வாழும் பொழுது நமது மக்கள் எவ்வாறு பலகலாச்சாரச் சிக்கல்களைப் புரிந்து கொள்வது?

7.நமது பிள்ளைகளை நாம் நன்றாக வளர்க்கவில்லை என்றால் புலம்பெயர் தேசத்து அரசாங்கம் பிள்ளைகளைப் பெற்றவரிடமிருந்து எவ்வாறு பிரித்து எடுக்கின்றது? ஏன் பிரித்தெடுக்கின்றது?

8.உங்கள் பிள்ளைகள் உங்கள் பிள்ளைகள் அல்ல என்ற கூற்றை எவ்வாறு புரிந்து கொள்வது?

மேற்கூறப்பட்ட வினாக்களுக்கு விடைகாண முற்பட வேண்டு மானால் நமக்கும் குழந்தைகளைக் குழந்தைகளாகப் பார்க்கும் குழந்தைக் கண் வேண்டும். மாற்றங்களையும் மாற்றுக் கருத்துக்களையும் சீர்தூக்கிப் பார்க்கும் பக்குவம் வேண்டும். கால மாற்றங்களை உள்வாங்கியே கலாச்சாரங்கள் வளர்ந்து வந்துள்ளன. இந்த இயற்கை

விதியை நாம் நமது குழந்தைவளர்ப்புக் கலையிலும் பின்பற்ற வேண்டியது அவசியமாகும்.

உண்மையான பிரச்சினைகளைக் கற்பனைக் கதைகள் மூலம் வாசகர்களுக்குப் புரிய வைக்க முயற்சி செய்துள்ளேன். தொழில் சம்பந்த மாக உண்மைச் சம்பவங்களை வெளியிடுவது சட்டப்படி குற்றமாகும்.

இந்த நூல் எழுதப்பட்ட களம் டென்மார்க்காக அமைந்துள்ளது. நான் வாழ்கின்ற சூழலில் இருந்து எழுதுவதே யதார்த்தமாக அமையும் என்பதில் வாசகர்களுக்கும் மாற்றுக் கருத்துக்கள் இருக்காது என்றே நினைக்கின்றேன்.

## நன்றிக்குரியவர்கள் :

எனது எழுத்துக்களுக்கு ஒலி வடிவம் தந்த தபேந்திரன் அண்ணாவுக்கு என் நன்றிகள்.

இந்நூலில் எழுத்துப்பிழைகள் பார்த்தும் நூலுக்கு அணிந்துரை தந்தும் உதவிய சாகித்தியரத்னா டாக்டர் திரு ஞானசேகரன் அவர்களுக்கு என் நன்றிகள் . எனக்கும் என் கணவருக்கும் அவர் இலக்கியத் தந்தையாக அமைந்தது எம் பாக்கியமே.

தாரமும் குருவும் தலைவிதிப்படி என நம் முன்னோர்கள் பழமொழி கூறுவதுண்டு. அந்த வகையில் என்றும் என் சிந்தனைகளின் ஊற்றுக்களாக என்னை வழி நடத்தும் எனது குருமார் பேராசிரியர்கள் திரு மௌனகுரு, திருமதி சித்திரலேகா மௌனகுரு இருவருக்கும் என் நன்றிகள். மேலும் இந்த நூலுக்கு தன் ஆசியுரையைத் தந்த பேராசான் மௌனகுருவுக்கு மீண்டும் என் நன்றிகள்.

மேலும் இந்த நூலின் கருப் பொருளை நான் எழுத முற்பட்ட போது என்னுள் ஒரு தயக்கம் இருந்தது. யாரையும் குறை சொல்வதாக இது அமையக் கூடாது என்று நினைத்தேன். அந்த நேரத்தில் எனது தோழிகள் எல்லோரும் எழுது எழுது என ஊக்கம் தந்தனர். அவர்கள் அனைவருக்கும் என் நன்றிகள்.

என்னை தூக்கி வளர்த்து அன்பை அள்ளித்தந்த என் பெற்றவர்கள், மற்றும் உறவினர்களுக்கும். என்னைத் தாயாக்கித் தாய்மையை உணர வைத்த என் இரட்டை மகள்மாருக்கும் என் இரு மரு மக்களுக்கும் பேரப்பிள்ளைகளுக்கும் சம்பந்திமாருக்கும் நண்பர் களுக்கும் என் நன்றிகள். என்னைச் சுற்றியுள்ள உறவுகளினால்

கிடைக்கும் அன்பு என் எழுத்துக்களுக்கு உரம் சேர்க்கின்றது.

எல்லாவற்றிற்கும் மேலாக என்னையும் என் எழுத்தையும் நேசித்து எழுத்துலகில் என்னையும் தன்னுடன் கூடவே கூட்டிச் செல்லும் என் கணவர் ஜீவகுமாரனுக்கும் என் நன்றிகள்.

மேலும் இந் நூலை ஆத்மார்த்தமான உணர்வுடன் அழகாகப் பதிப்பித்து வெளியிட்ட ஜீவநதி பதிப்பக உரிமையாளர் சகோதரன் திரு பரணீதரன் அவர்களுக்கும் அவர் சக்தியாகிய விஷ்ணுவர்த்தனி அவர்களுக்கும் என் நன்றிகள் உரித்தாகுக. தமது பொன்னான சேரத்தைச் செலவு செய்து இந்த நூலை வாசிக்கப் போகும் வாசகர்களுக்கும் என் நன்றிகள் உரித்தாகுக.

அன்புடன்

திருமதி கலாநிதி ஜீவகுமாரன்

டென்மார்க்.

# அத்தியாயம் - 1

## உங்களுடைய குழந்தைகள்
## உங்களுடைய குழந்தைகள் அல்ல

**வருடம்.2022.**

நானும் என் டெனிஷ் தோழி சுசானாவும் அடிக்கடி கதைப்பதுவும் மகிழ்வதுவும் பகிர்வதுவும் எம் இருவரதும் பேரக்குழந்தைகளைப் பற்றியதாகவே எப்பொழுதும் இருப்பதுண்டு. எமது உலகமும் அவர்களே என்பதிலும் எந்த மாற்றுக் கருத்துக்கும் இடமில்லை.

சுசானாவின் வீடு அவளது மகள் வீட்டுக்கு அருகில் இருந்தது. நானும் என் கணவரும் பிள்ளைகளின் வீடுகளுக்குத் தொலைவில் வசித்து வந்தோம். டென்மார்க்கில் இப்போது கோடை விடுமுறைக்காலம். சுசானா நேற்றுக் கேக்குடன் வந்து தனது விடுமுறைக்கான மகிழ்ச்சியை எம்முடன் பகிர்ந்து கொண்டாள்.

“இனி என்ன நீ உன் பேரப்பிள்ளைகளுடன் விடுமுறையைக் கொண்டாடு” என்றேன்.

“இல்லை இல்லை அவர்கள் பக்கத்தில் இருந்தாலும் நான் அவர்களைத் தொந்தரவு செய்வதில்லை.அவர்கள் கேட்காது நான் எந்த உதவியும் செய்வதுமில்லை. அவர்கள் வாழ்வை அவர்கள் வாழ விடவேண்டும். 18 வயதுக்குப் பின்பு அவர்கள் வேறு நான் வேறு. அவர்களது சுதந்திரத்தில் நாங்கள் தலையிடுவது சரியில்லை” என்றார்.

“அவர்களது பிள்ளைகள் அவர்களுடன் இருப்பதைப் பார்த்து நான் மகிழ்வேன். பேரப்பிள்களுக்கு நான் அம்மம்மாவே தவிர அம்மா அல்ல” என்றாள்.

“அவர்கள் வேறு நாட்டுக்கு விடுதலைக்குப் போகவுள்ளனர். நானும் என் கணவரும் வேறு நாட்டுக்குப் போகவுள்ளோம்” என்றாள். இவளது இக்கூற்று என்னை ஒரு உசுப்பு உசுப்பியே விட்டது. எப்படி இப்படிப் பாசமில்லாது கதைக்கிறாள் என நினைத்தேன்.

**வருடம்.1960.**

எமது ஊரில் (அனலைதீவு) குழந்தைகள் பிறந்து முதலாவது மாதம் முடிந்ததும் துடக்குக் கழிவு என்ற சடங்கு நடக்கும் - அதன் பின்பு குழந்தையைக் கோவிலுக்குக் கொண்டு செல்வார்கள். அந்த வேளை சிலர் குழந்தையைக் கடவுளுக்கு விற்றுப்பின் வேண்டும் ஒரு சடங்கைச் செய்வார்கள். என்னையும் நான் பிறந்து ஒரு மாதம்முடிய எங்கள் ஊரில் உள்ள ஆச்சிகோவிலில் (அம்மனை ஆச்சி என்பது எமது ஊர் மரபு) அம்மனுக்கு விற்று வேண்டினார்கள்.இதனை மையமாக வைத்து என் அம்மா எப்பொழுதும் “நீ எங்கட பிள்ளையல்ல நீ சாமியிட பிள்ளை” எனக் கூறுவா. இந்த நிகழ்வு மூலம் அவர்கள் தமது பொறுப்பைத் துறந்தனர் என்பது அர்த்தமில்லை. என்னை அவர்கள் தமது ஒரு சொத்து என நினைக்காது எனக்கு முழுச் சுதந்திரமும் தந்து வளர்த்தனர்.

என்ர பிள்ளை என்ர பிள்ளை என்று சொல்லும் போது பெற்றவர்களாகிய நாம் நம்மையும் அறியாது நமது பிள்ளைகள் மீது அளவு கடந்த பாசத்தை வைக்கின்றோம்.இந்த வேளைகளில் பிள்ளைக்கு உயிர் உண்டு உணர்வு உண்டு என்பதை மறந்து அதீத அன்பு கொண்டு அதன்மீது நமக்கே உரிமை உண்டு என்ற நினைப்புக்கு வருகின்றோம். நாம் இல்லாது நம் குழந்தை தனித்து இயங்காது எனப் பயந்து எப்பொழுதும் அவர்களைப் பாதுகாக்கப் புறப்படுகிறோம். நம்மையும் அறியாது 24 மணி நேரமும் பொலிஸ் வேலை செய்கின்றோம். நமது கூட்டில் நம்மால் உருவாக்கப்பட்டகூட்டுப்புழுவுக்குச் சிறகுகளை நாமே கொடுத்துவிட்டு அவர்களைப் பறக்கவிடாது நாமே நம் கைகளில் இறுக்கிப் பிடித்து நசுக்கிவிடுகிறோம். நம் குழந்தைகள் நம்மிலிருந்து உருவான வண்ணத்துப் பூச்சிகள்.

**வருடம்.1988**

எனக்கு இரட்டைப் பெண்குழந்தைகள் பிறந்தனர். தெய்வங்களே பிள்ளைகளாகப் பிறந்துள்ளனர் என அப்பா அம்மா கடிதம் எழுதினர். டென்மார்க்கில் கோவிலில் பிள்ளைகளைக் கடவுளுக்கு விற்று வேண்டும் சடங்கு செய்ய முடியவில்லை. ஆனால் நான் வைத்தியசாலையில் இருந்த பொழுது உலகப் புகழ்பெற்ற கவிஞர் கலீல் ஜிப்பிரானுடைய கவிதை ஒன்றை வைத்திய சாலையின் செய்திப் பலகையில் ஒட்டி இருந்தார்கள். அதிலிருந்த செய்தி என் அம்மாவின் குரலாக மீண்டும் என்னைக் கைப்பிடித்தது. உங்கள் குழந்தைகள் உங்கள் குழந்தைகள் அல்ல. அவர்கள் சாமியின் பிள்ளைகள் என்பதே அந்தச் செய்தியாகும்.

கலீல் ஜிப்ரானுடைய கவிதை பின்வருமாறு இருந்தது:

உங்கள் குழந்தைகள் உங்கள் குழந்தைகள் அல்ல.

அவர்கள் இயற்கையின்(கடவுளின்) குழந்தைகள்.

உங்கள் குழந்தைகள் உங்கள் மூலமாக வந்திருக்கிறார்களே அன்றி உங்களிடம் இருந்து அல்ல.

உங்கள் குழந்தைகள் உங்களுடன் இருந்தாலும் உங்களுக்குச் சொந்தமானவர்கள் அல்ல.

உங்கள் அன்பை நீங்கள் அவர்களுக்குத் தரலாம். உங்கள் எண்ணங்களையல்ல.

அவர்களுக்கு என்று தனிச்சிந்தனைகள் உண்டு.

அவர்களின் உடல்களுக்குத்தான் நீங்கள் பாதுகாப்புத் தரமுடியும் ஆத்மாக்களுக்கு அல்ல.

அவர்களின் ஆத்மாக்கள் நாளைய வீட்டில் வாழ்பவை அங்கே நீங்கள் செல்ல முடியாது. உங்கள் கனவுகளிலும் கூட நீங்கள் செல்லமுடியாது.

அவர்களைப் போலிருக்க நீங்கள் முயற்சி செய்யலாம். ஆனால் அவர்களை உங்களைப் போல் ஆக்கிவிடாதீர்கள். வாழ்க்கை பின் திரும்பிச் செல்லாது.

நேற்றுடன் ஒத்துப் போகாது. நீங்கள் வில்கள் உங்களிடம் இருந்து எய்யப்படும் உயிருள்ள அம்புகளே குழந்தைகள்.

அம்பு எதை அடைய வேண்டும் என்ற இலக்கை வில் தீர்மானிக்காது. அம்பை எய்பவன்தான் தீர்மானிப்பான். அம்பை எய்பவன் இயற்கையே.(கடவுளே). நீங்கள் அல்ல. நீங்கள் வெறும் வில்தான்.

இவ்வாறாகக் கலீல் ஜிப்ரான் தனது கவிதையில் குழந்தைகள் பற்றிய வித்தியாசமான ஒரு சிந்தனையை முன்வைத்துள்ளார்.

1902ஆம் ஆண்டு இக்கவிதையை கலீல் ஜிப்ரான் எழுதியுள்ளார்.

என் அம்மா பிறந்தது 1932 ஆம் ஆண்டு. இதைப் படித்து அவர் என்னைச் சாமியின் பிள்ளை என்று கூறவில்லை. தொலைக் காட்சி வசதிகள் இல்லாத அந்தக் காலத்தில் தினமும் மாலை வேளைகளில் தமது சுற்று வட்டாரத்தில் இருந்த வயதானவர்களுக்கு அம்மா மகாபாரதம் இராமாயணம் போன்ற நூல்களை வாசித்துக் காட்டுவது வழக்கமாக இருந்தது. இதனால் தத்துவார்தமான சிந்தனைகள் அவரது பேச்சிலும் செயலிலும் இருந்தன. 1902 ஆம் ஆண்டு கலீல் ஜிப்ரான் எழுதியதை யாரோ ஒரு டெனிஷ்காரர் 1988ஆம் ஆண்டு டென்மார்க்கின் மிகப்பெரிய வைத்தியசாலையில் அதுவும் பிரசவவாட்டில் ஒட்டியுள்ளார். அது என் கண்களில் பட்டு இதயத்தில் குடிபுகுகின்றது.அன்று முதல் அதுவே என்

குழந்தை வளர்ப்பின் வேதமாக மாறிவிடுகின்றது.கூடவே அப்பாவும் அம்மாவும் பிள்ளைகளைக் கடவுளர்களாகவே நினைத்துக் கடிதங்கள் எழுதிவந்தனர். என் மாமியாரும் தான் தன் பேரப்பிள்ளைகளைக் கோவில் களுக்குக் கூட்டிப் போவது போலக் கற்பனை செய்து கும்பிடுவகாக எழுதுவா. ஒட்டு மொத்தத்தில் என் பிள்ளைகள் என் பிள்ளைகள் அல்ல, கடவுளின் பிள்ளைகள் (இயற்கையின் பிள்ளைகள்) என்ற எண்ணம் வேர்விட்டு விட்டது. தொடர்ந்து டென்மார்க்கில் குழந்தை வளர்ப்புத் துறையில் நான் படித்து வேலையும் செய்யத்தொடங்க அந்தச் சிந்தனை வளர்ந்து மரமாகிப் பூத்துக் காய்க்கத் தொடங்கியது.

**வருடம்.2022.**

இப்போது என்னைச் சாமியின் பிள்ளை என்று சொன்ன என் அப்பா அம்மா என்னுடன் இல்லை. காலம் தன் கடமையைச் செய்தபடி ஓடிக் கொண்டுள்ளது. எம் பிள்ளைகள் திருமணம் முடித்து தத்தம்

குடும்பங்களில் வாழ்கின்றனர். புகுந்த வீட்டாருடன் அவர்கள் ஒற்றுமையாக உள்ளபோது எனக்கும் கணவருக்கும் மகிழ்ச்சியாக இருக்கின்றது. எங்கள் பிள்ளைகள் எங்களைவிட்டுப் பிரிந்து விட்டனர் என்ற நினைப்பு இல்லை. மாறாக தத்தம் வாழ்க்கையை வாழப் புறப்பட்டுவிட்டனர் என்ற மகிழ்வே இருக்கின்றது. பிள்ளைகள்

ஒருநாள் போன் எடுக்கவில்லை என்றால் கவலை வருவதில்லை.

மாறாக எமக்குப் போன் எடுக்க நேரமில்லாத அளவுக்கு அவர்கள் தத்தம் வாழ்க்கையில் கால்பதித்து நடக்கத் தொடங்கிவிட்டனர் என நினைப்போம். நமது நாற்று வேறு இடத்தில் வேர்விடத் தொடங்கி வளர்கின்றது. அதைப் பிடுங்கிப் பார்த்து வளர்ந்து விட்டதா இல்லையா என அடிக்கடி சோதனை போடப்படாது. இயற்கை விதிப்படி அது நன்கு வளரும். எங்களது பட்டாம்பூச்சிகள் பறப்பதைப் பார்த்து மகிழலாம். ஆனால் அவற்றைப் பிடித்துப்பிடித்து நம் கைகளுள் பொத்தி வைக்க முடியாது. இறுக்கிப் பொத்தினால் அவை நசிந்து போகும்.

எமது பிள்ளைகள் எம்மைப் போல இருக்க வேண்டும். நாம் சொல்வதையே கேட்கவேண்டும் என்ற நினைப்பு வரும் போது

அவர்கள் கடவுளின் பிள்ளைகள் என்ற நிலை இல்லாது அவர்கள்

நமது பொம்மைகள் என்ற நிலை உருவாகும். நான்...எனது... என்ற ஆணவமும் அதீத அன்பும் அவர்கள் நமது சொத்து என்ற எண்ணங் களும் ஒன்றுகூடி அங்கே குருஷேத்திர யுத்தம் உருவாகும். நான் என்பதை யும் எனது என்பதையும் நாம் கைவிடாதவரை நாமும் மகிழமுடியாது

.அவர்களும் வாழமுடியாது.

நான் இதை எழுதும் பொழுது என் தோழி சுசானா என்னருகில் வருகிறாள். “கொஞ்சம் பொறு கலா, நீ என்னைக் கல் நெஞ்சக்காறி என எழுதாதே என்கிறாள்.”

“எனக்கும் என் பிள்ளைகளும் பேரப்பிள்ளைகளும்தான் உலகம். அவர்களுக்கு என்ன உதவி எப்பொழுது தேவை என்றாலும் நான் ஓடிப்போய்ச் செய்யத் தயாராக உள்ளேன். ஆனால் அவர்கள் கேட்காது செய்ய மாட்டேன்.

நான் என் பேரப்பிள்ளைகளுக்கு அம்மம்மாவே தவிர அம்மா அல்ல. என் பிள்ளை தன் பிள்ளைக்கு அம்மாவாக இருக்கும் ஆனந்தத்தை யும் பொறுப்பையும் நான் தட்டிப்பறிக்க மாட்டேன். என் பிள்ளை தன் பிள்ளைக்கு அம்மாவாக இருக்கும் உரிமையை நான் எடுக்கமாட்டேன். நமது பிள்ளைகள் நமக்குப் பிள்ளைகளாக இருந்த காலம் முடிந்து அவர்கள் தமது பிள்ளைகளுக்கு அம்மாவாக அப்பாவாக வாழும் காலம் வந்துவிட்டது. அவர்கள் அந்த வாழ்க்கை வாழ நாம் இடம்விட்டுக் கொடுக்க வேண்டும்.”

இப்படி ஒரு பெரிய பிரசங்கத்தை நடத்தினாள் சுசானா.

## கலாசார வேறுபாடும் குழந்தை வளர்ப்பின் புதிய பரிமானமும்

புலம்பெயர் நாடுகளில் தனிமனித சுதந்திரம் முதன்மைப்படுத்தப் படுகின்றது. இதனால் தத்தம் வேலைகளைத் தாமே செய்யும் பக்குவத்தை இந்தச் சமுதாய மக்கள் வளர்த்துக் கொண்டுள்ளனர். பெற்றோராகிய நாம் சொல்லும் அறிவுரைகளை அவர்கள் ஏற்கத் தயாராக இல்லை. நாம் தான் அதீத பாசம் கொண்டு அவர்கள் சுதந்திரத்தில் மூக்கை நுழைத்துப் போட்டுச் சிரமப்படுகிறோம்.

மேலும் குழந்தைகளை நாம் ஒழுங்காக வளர்க்கின்றோமா என அரசாங்கம் கண்காணித்து வருகின்றது. பாலர் பள்ளிகள் முதல்

உயர்தரப் பாடசாலைகள் தொடக்கம் இந்த மேற்பார்வை உள்ளது.

இப்படியான நிலையில் நாம் நமது பிள்ளைகளுக்கு நமது நாட்டுப்

பிள்ளைவளர்ப்பு முறையைக் கையாள முடியாதுள்ளது.

பிள்ளைகளுக்கு அடித்துத் திருத்துவது சட்டப்படி குற்றமாகும்.

நாம் நமது பிள்ளைகளுக்குச் சாப்பாட்டைத் தீத்துவதை ஒரு கலாசார விழுமியமாகக் கொண்டுள்ளோம். ஆனால் மேலை நாடுகளில் குழந்தை தானே உண்பதனால் தான் என்ற நினைப்பையும் தன்னால் சாப்பிட முடியும் என்ற தன் நம்பிக்கையையும் தன் முனைப்பையும் பெறுகின்றது என்பார்கள். குழந்தையின் மூளைவளர்ச்சி பெருகுகின்றது. உளவியல் முறைப்படியும் அவர்களது கூற்றுச் சரியானதே.

குழந்தைகளைப் பெற்றார் அடிக்கிறார்கள் என அரசாங்கம் அறியுமிடத்துப் பெற்றவர்களுக்குச் சட்டப்படி தண்டனை கொடுக்கப்படு கின்றது. அத்தண்டனையானது பெற்றவரைச் சிறைக்கு அனுப்பியும் பிள்ளைகளைப் பெற்றவரிடமிருந்து பிரித்தும் விடுகின்றது. இவ்வாறு பிரிக்கப்பட்ட பிள்ளைகள் அரசாங்கத்தாரால் பொறுப்பெடுக்கப் படுகின்றனர். சில பிள்ளைகள் குழந்தைக் காப்பகங்களிலும் சில குழந்தைகள் வேறு தகுதியான (அரசு நியமிக்கும்) பெற்றாரினால் வளர்க்கப்படுகின்றனர்.

இவ்வாறான நிலையில் உங்கள் பிள்ளைகள் உங்கள் பிள்ளைகள் அல்ல என்ற கூற்று கலீல் ஜிப்ரானது கவிதையை நம்மை நினைக்க வைக்கின்றது. அவர்கள் தனித்தன்மை மிக்க ஆத்மாக்கள்.

அவர்களை வழிநடத்தும் பொறுப்பு மட்டுமே பெற்றவரது கடமை. உரிமை கொண்டாட எமக்கு உரிமை இல்லை. உரிமையை நாம் கையில் எடுக்கும் பொழுது நம் குழந்தைகள் நமது உடைமை நமது சொத்து என்ற நினைப்பு மேல் எழுந்து அதிகாரம் செய்யத் தொடங்குகின்றது. எனது வீடு, எனது காணி, எனது பணம், எனது அடையாளம், எனது உலகம்... அவ்வாறே எனது பிள்ளை என்ற நிலை உருவாகும் பொழுது நாமாகவே ஊரவரது கண்களை நமது வீட்டுக்கு விருந்துக்குக் கூப்பிடுகின்றோம். ஊரவரது எதிர்பார்புக்கும் எமது எதிர்பார்ப்புகளுக்கும் இடையில் சிக்கிக் குழந்தைகள் தமது தனித்துவத்தை இழந்து விடுகின்றனர். மற்றவர்கள் என்ன நினைப்பார்கள் என்ற நினைப்பு வரும் பொழுது நம்மையும் மறந்து நம்மையும் இழந்து நமது குழந்தைகள் மீது நாமே முட்கிரீடங்களை வைத்துச் சிலுவை சுமக்கும்படி உத்தரவிடுகின்றோம். அண்மையில் இந்தியாவில் ஒரு தாய் தனது இரு குழந்தைகளுக்கு உணவில் நஞ்சு கலந்து கொடுத்து அவர்களைக் கொலை செய்த செய்தி ஒன்றை வாசித்தேன். வறுமை காரணமாக அக்குழந்தைகள் திருடியிருந்தனர். தனது மானம் மரியாதை போய்விட்டது என்றதும் திருட்டு அறமற்றதும் என்ற அதீத அறக்கோட்பாடானது அவர்களைத் திருத்துவதை விட்டுவிட்டு அவர்களைக் கொல்லுமளவுக்கு அத்தாயின் தாய்மையைக் கொலை

செய்து அதன் மூலம் அவர் புத்தியைக் கத்தியாக்கிவிட்டது. இவ்வாறான நிலையில்தான் சாதி மதம் என்ற பெயரில் வளர்ந்த பிள்ளைகளின் திருமணச் சுதந்திரம் பறிக்கப்பட்டுப் பின்பு அதற்காக நிகழ்த்தப்படும் ஆணவக் கொலைகளுக்குப் புனிதப்பட்டங்கள் கொடுக்கப்படுகின்றன...

நாம் பெற்ற பிள்ளைகள் நமது விருப்பப்படி வாழவில்லை என்றவுடன் எம்முடன் துக்கமும் கோபமும் அவமானமும் கூட்டுச் சேர்ந்து எம்மை இருத்தி எழுப்புகின்றன. பின்பு நாம் பிள்ளைகளை இருத்தி எழுப்புகிறோம். அவர்களில் சிலர் பொம்மையாக வாழ ஒத்துப் போகின்றனர். சிலர் பெற்றவரை எதிர்த்து வாழப்புறப்பட்டுப் சமுதாயத் தாரினால் தள்ளி வைக்கப்படுகின்றனர். இப்படியாகப் பலப்பல தடைகளை நமது பிள்ளைகள் கடந்து வளரவேண்டியுள்ளனர். புலம்பெயர் தேசங் களில் அரசாங்கம் அவர்களின் உரிமைகளைப் பாதுகாக்கப் பல சட்டங்களை நடைமுறைப்படுத்துகின்றது.

எங்கட பிள்ளைகள் என்று பெற்றவர் சொல்ல...

இல்லை இல்லை அவர்கள் கடவுளின் பிள்ளைகள் என ஆன்மீக வாதிகள் சொல்ல...

இல்லை இல்லை அவர்கள் இயற்கையின் பிள்ளைகள் எனத் தத்துவவாதிகள் சொல்ல...

நிறுத்துங்கள் உங்கள் புலம்பலை அவர்கள் அரசாங்கத்தின்

பிள்ளைகள் என அரசாங்கமும் மனித உரிமைச் சட்டங்களும் சொல்ல...

அப்போது நாங்கள் யார் எனப் பிள்ளைகள் தவிக்க...

இந்தப் பூமி சுற்றியபடியே உள்ளது.

நம் குழந்தைகளின் உலகைப் பற்றிய அறிதலும் புரிதலும் நம் அனைவருக்கும் அத்தியாவசியமானது...

# அத்தியாயம் - 2

## நாமும் நம் செல்வங்களும்

இன்று ஞாயிற்றுக் கிழமை.

வீடு துப்புரவாக்கி உடுப்புக்களும் தோய்த்து முடித்தால்தான் திங்கட்கிழமை காலை கால்களில் சக்கரங்களைப் பூட்ட சரியாக இருக்கும். இப்படி நினைப்பில் இருந்த என்னை என் தோழியின் தொலைபேசி தடுத்து நிறுத்தியது.

உயர்தரப் பரீட்சையில் நல்ல சித்தி பெற்ற மகன் வைத்தியத் துறையில் படிக்க மறுத்ததினால் வந்த சிக்கல்களைப் பற்றிய புலம்பலாக இருந்தது அவள் புலம்பல். மகனை நன்கு திட்டித் தீர்த்த பின்பு அதற்காகக் கவலைப்பட்டு என்னிடம் சொல்லி அழுகின்றாள் என் தோழி. நாம் நமது குழந்தைகளை எல்லையற்ற அன்புடன் நேசிக்கின்றோம். ஆனால் நமது எதிர்பார்ப்புக்களைப் பிள்ளைகள்நிறைவேற்ற முடியாத பொழுது வேதனைப் படுகின்றோம்... கோபப்படுகின்றோம்... அவர்களைத் திட்டித்தீர்க்கின்றோம்.

இதற்குக் காரணம் என்ன?

1.குழந்தைகள் பற்றிய அறியாமை (குழந்தை வளர்ப்புப் பற்றிய உளவியல் ரீதியான புரிதலின்மை)

2.ஊரவர் பிள்ளைகளுடன் நமது பிள்ளைகளை ஒப்பிடுவது

3.நமது சொந்த விருப்பங்களைப் பிள்ளைகள் பூர்த்தி செய்யாமை

4.ஊரவர்களின் முன்பு நமது தராதரத்தை உயர்த்திக் காட்டப் பிள்ளைகளைப் பயன்படுத்துதல்.

5.பிள்ளை ஊரார் போற்றும் பிள்ளையாக இல்லாத போது பெற்றவர்கள் குற்ற உணர்வைச் சுமக்க வேண்டி ஏற்படுவது.

6.பிள்ளைகளும் தனி மனிதர்கள் என்ற கருத்துப் பெற்றவர் சிந்தனையில் இல்லாது இருப்பது.

7.கூட்டு உறவு நிலை.(symbiosis)

ஒரு குழந்தை பிறந்து எட்டு மாதங்கள் வரை தானும் தாயும் ஒன்றே என நினைக்கும். அதற்குப் பசித்து அழும்போது தாய் உணவு கொடுக்கிறாள். நித்திரை வரும் போது தாலாட்டுகின்றாள்.

குழந்தையைத் தூக்கி வைத்திருக்கின்றாள். ஆனால் குழந்தை தானாக நடக்கத் தொடங்கும் போது தாய் வேறு தான் வேறு என உணர்கின்றது. தன்னால் தாயின் உதவியின்றிப் பல செயல்களைச் செய்யத் தொடங்கும் போது அதன் மனமும் உடலும் வளர்ச்சியடை கின்றன. பிள்ளைகள் வளர்ந்த பின்பும் பெரும்பாலான பெற்றவர்கள் இந்த கூட்டு நிலையில் இருந்து விடுபடுவதில்லை.

இந்தப் புரிதல் இல்லாத இடத்தில் பிள்ளைகளுக்கான உரிமைகள் பற்றியோ அல்லது குழந்தைகளுக்கான ஜனநாயகம் பற்றியோ கதைக்க முடியாது.

இவ்வாறான பல காரணங்களினால் குழந்தை வளர்ப்புப் பற்றிய விழிப்புணர்வு குறைந்து வந்துள்ளது. ஆதிகால ரோமப் பேரசின் கீழ் பல விரும்பத்தகாத குழந்தைகள் கொல்லப்பட்டதை வரலாறு தெரிவிக் கின்றது. பிறந்த குழந்தை உடனே வளர வேண்டும் தமது எதிர்பார்ப்புக் களைப் பூர்த்தி செய்ய வேண்டும் என்று அவர்கள் எதிர்பார்த்தனர். குழந்தைகளின் வளர்ச்சி பற்றய விஞ்ஞான ரீதியான விளக்கங்கள் அந்தக் காலங்களில் இருக்கவில்லை.

ஆனால் இன்று அவ்வாறு இல்லை. விஞ்ஞான வளர்ச்சியும் தொடர்புச் சாதனங்களும் வளர்ச்சியடைந்து விட்டன. புதுப் புது டிசைன்களில் உடுப்புக்கள் போட வேண்டும். மேக்கப் அழகாகப் போட வேண்டும். நாகரீகமாக இருக்க வேண்டும். ஒரு முறை ஒரு விழாவுக்குப் போட்ட உடுப்பை மறு முறை வேறு விழாவுக்குப் போடப்படாது எனப் பலப்பல விதமாக நாகரீகம் பற்றிப் பேசும் நமது தாய்மார்கள், பிள்ளைகள் வளர்ப்பில் மட்டும் பழைய கொள்கைகளைப் பின்பற்றுவது ஏன் என்று புரியவில்லை.

தமது தாய் தந்தையர் தம்மை வளர்த்தது போலவே தாமும் தம் பிள்ளைகளை வளர்பதாகக் கூறுவார்கள். அதுவும் சரிதான். எல்லோரது ஆழ்மனதிலும் இந்தப் பதிவுகள் இருந்து நம்மை வழிநடத்துகின்றன. ஆனாலும் காலத்துக்குக் காலம் சட்டங்கள் மாறுகின்றன. அதனை நாம் மறந்து விடுகின்றோம்.

பிள்ளைகளை அடிப்பது சட்டப்படி குற்றச் செயலாகும். பிள்ளைகள் நமது சொத்துக்கள் என உரிமை பாராட்டுகின்றோம். பிள்ளைகள் ஒரு நாட்டின் சொத்து எனச் சட்டம் சொல்கின்றது. 1989ஆம் ஆண்டு ஐக்கிய நாடுகள் சபையில் குழந்தைகளுக்கான உரிமைச்சாசனம் வெளியிடப்பட்டது.

அதன் அடிப்படைக் கொள்கைகள் பின்வருமாறுள்ளன.

1. வயது 18 நிரம்பாத அனைவரும் குழந்தைகளே.
2. எல்லாக் குழந்தைகளும் சமமாக நடத்தப்பட வேண்டும்.
3. எல்லாக் காலங்களிலும் பேரிடர் காலங்களிலும் குழந்தைகளுக்கு முதலிடம் வழங்கப்படவேண்டும்.
4. இந்தக் குழந்தைகள் சாசனத்தில் 54 விதிகள் எழுதப்பட்டுள்ளன.
5. எல்லா உரிமைகளையும் தொகுத்துப் பார்த்தால் அவை பின்வருமாறு அமைகின்றன.

- குழந்தைகள் உயிர் வாழ்வதற்கான உரிமை.
- அவர்களது வளர்ச்சிக்கான உரிமை.
- பாதுகாப்பு உரிமை.
- தன் சுற்றுச் சூழலில் பங்கு பெறும் உரிமை.

கடிகாரத்தின் ஓட்டத்துடன் போட்டி போட்டு ஓடும் இன்றய வாழ்க்கைச் சூழலில் இவ்வாறான சிந்தனைகள் நமக்கு புலனாவதில்லை. புரிந்தாலும் புரிந்ததைச் செயற்படுத்த நேரம் கிடைப்பதில்லை.எது எப்படியானாலும் வளமான குழந்தைகளை உருவாக்குவது நமது தலையாய கடமை.

## குழந்தை வளர்ப்பு முறைகள்

பொதுவாக உலகிலுள்ள பெற்றவர்களின் வளர்ப்பு முறைகளைக் கொண்டு அவர்களை மூன்று விதமாகப் பிரித்துப் பார்க்கலாம்.

1. சர்வாதிகாரமான வளர்ப்பு முறையைப் பின்பற்றுவோர்.
2. ஜனநாயக வளர்ப்பு முறையைப் பின்பற்றுவோர்.

3. அதி கூடிய சுதந்திரத்தைப் பிள்ளைகளுக்குக் கொடுத்து வளர்ப்பவர்கள்.

1. சர்வாதிகாரமான வளர்ப்பு முறையைப் பின்பற்றுவோர்:

சர்வாதிகாரமான பெற்றோர் பிள்ளைகள் சொல்வதைச் செவிமடுக்க மாட்டார்கள். பிள்ளைகள் முடிவெடுப்பதானாலும் ஏன் எதற்கு என விளக்கம் கேட்பார்கள். இவர்கள் பயந்த சுபாபமுள்ள குழந்தைகளை உருவாக்குவார்கள். இவர்களது குழந்தைகள் தன்னம்பிக்கை இல்லாத மனிதர்களாக வளர்வார்கள்.

சர்வாதிகாரமான பெற்றோர் தமது குழந்தைகள் தமது சொத்து என நினைப்பார்கள். எனது வீடு எனது காணி எனது கார் என்பது போல எனது பிள்ளையும் எனது சொத்து எனச் சொந்தம் கொண்டாடுவார்கள். இங்கு பிள்ளையின் கருத்து மையப்படுத்தப்பட மாட்டாது. பெற்றவரின் விருப்பு வெறுப்பே இங்கு முதன்மைப்படுத்தப்படும். இப்படியான பெற்றோர் அவர்களது குழந்தைகள் வளர்ந்து பெரியவாரான பின்பும் அவர்களது பிள்ளைகளின் குடும்பவிடயங்களில் தலையிட்டுப் பின் மருமக்கள் பேரப்பிள்ளைகள் பூட்டப்பிள்ளைகள் வரை தமது ஆதிக்கத்தை நிலை நாட்டுவார்கள். சிலவேளை அன்பு பாசம் எல்லாவற்றையும் பகடைக் காயாகப் பயன்படுத்தித் தாங்கள் நினைத்ததை செய்து முடிப்பார்கள். இங்கு பெற்றவரின் உரிமை பேசு பொருளாக இருக்கும். பிள்ளைகளின் உணர்வுகள் மதிக்கப்படாது மறைக்கப்படும்.

2. ஜனநாயக வளர்ப்பு முறையைப் பின்பற்றுவோர்.

ஜனநாயக முறையைப் பின்பற்றும் பெற்றோர் பிள்ளைகளின் பேச்சுக்குச் செவிமடுப்பார்கள். எது சரி எது பிழை எனக் கலந்து ஆலோசித்து முடிவு எடுப்பார்கள். பிள்ளைகளின் உணர்வுகளுக்கு மதிப்புக் கொடுப்பதன் மூலம் தன்னம்பிக்கையுள்ள பிள்ளைகளை உருவாக்குவார்கள். தன்னம்பிக்கை உள்ள பிள்ளைகளை உருவாக்கிய தன் பயனாக சக மனிதர்கள் மீது மதிப்பும் நம்பிக்கையும் உள்ள மனிதர் களாக இவர்களது பிள்ளைகள் வாழ்வார்கள். இத்தகைய பெற்றோர் அவர்களது பிள்ளைகள் வளர்ந்த பின்பு அவர்களது குடும்பத்தில் தலையிட மாட்டார்கள். மக்கள் மருமக்கள் பேரப்பிள்ளைகள் ஆகியோரது

சுதந்திரங்களில் தலையிடமாட்டார்கள். உரிமையைத் தள்ளி வைத்துப் பிள்ளைகளின் உணர்வுகளுக்கு மதிப்புக் கொடுப்பார்கள்.

3. அதி கூடிய சுதந்திரத்தைப் பிள்ளைகளுக்குக் கொடுத்து வளர்ப்பவர்கள்.

இவ்வகையான பெற்றவர்கள் முடிவு எடுக்கும் திறன் அற்றவர்கள். இங்கு பிள்ளைகளே பெற்றார்போல நடந்து கொள்வார்கள். பிள்ளைகள் பெற்றவர் மீது மரியாதையாக நடக்க மாட்டார்கள். குடும்பத்தில் பிள்ளைகளே தலைவராகும் பெழுது

அதிகூடிய பெருமிதமும் அகங்காரமும் அவர்களிடம் உண்டா கின்றது. மற்றவர்களைவிடத் தாமே உயர்ந்தவர்கள் என்ற எண்ணம் வந்துவிடுகின்றது. பெற்றவரின் விருப்பு வெறுப்புக்கள் உணர்வுகள் இங்கே கணக்கெடுக்கப்படமாட்டாது. இத்தகைய பிள்ளைகள் சமுதாயத்திலும் சக மனிதர்கள் மீது மரியாதை உள்ளவர்களாக நடக்க மாட்டார்கள். சக மனிதர்களை நம்பவோ அவர்களது உணர்வுகளுக்கு மதிப்புக் கொடுப்பவர்களாகவோ இருக்க மாட்டார்கள்.

மேலே குறிப்பிடப்பட்ட மூன்று வகையான பெற்றோரிலும் சில குடும்பங்களில் தாயும் தகப்பனும் ஒற்றுமையாக இல்லாது இருப்பதும் உண்டு. குழந்தைகளை வளர்க்கும் பொழுது தாயும் தந்தையும் ஒத்த கருத்துள்ளவர்களாக இருப்பது அவசியம். அவ்வாறு இல்லையானால் குழந்தைகள் நல்வழியில் வளரமுடியாது போய்விடுவார்கள். பெற்றவரது ஒற்றுமையின்மையைப் பயன்படுத்தித் தமக்கெனத் தப்பான பாதையில் பயணிப்பார்கள்.

இதுவரை கூறியவற்றைப் பார்க்குப் பொழுது குழந்தை வளர்ப்பு என்பது பெரிய கடல் போன்று தெரியலாம். ஆனாலும் அதே கடல் நீர்தான் மேகங்களில் பயணித்து மழையாகி நதியாகி கிணறு குளம் குட்டை எனப் பூமி எங்கும் பரந்து பயன்தருகின்றது.

நமக்குத் தாகசாந்தி தந்து நம்மை வாழவைக்கின்றது. அவ்வாறே குழந்தை வளர்ப்பு என்ற கருப்பொருளும் அங்கிங்கெணாதபடி எங்கும் பரந்து நம்மை வாழவைக்கின்றது.

# அத்தியாயம் - 3

## அகப்பைக்காம்பு

நான் டென்மார்க்குக்குப் புலம் பெயர்ந்து 36 ஆண்டுகள் முடிந்துவிட்டன. மண்சட்டி விறகு பன்னாடை கூம்பாளை சுளகு அகப்பை போன்ற பல அடுப்படிப் பொருட்களை நினைத்துப் பார்க்கவோ அவை மீட்டுத்தரும் அழகிய நினைவுகளை அனுபவிக்கவோ நேரம் இல்லாது வாழ்க்கை ஓடியபடியே இருந்தது. நேற்று ஒரு மொழி பெயர்ப்பு வேலைக்காக நகரசபைக்குச் சென்றிருந்தேன்.அங்கிருந்து வந்தது முதல் அகப்பைக்காம்புகள் கரண்டிகள் கத்திகள் எல்லாம் என்னைச் சுற்றிச்சுற்றி வலம்வந்தபடி இருக்கின்றன.

விடயம் இது தான். ஒரு தாய் தனது எட்டு வயதுப் பிள்ளைக்கு அகப்பைக் காம்பால் அடித்துள்ளார். அந்தப்பிள்ளை அதனை வகுப் பாசிரியரிடம் சொல்லியுள்ளார். வகுப்பாசிரியர் அவ்விடயத்தைப் பள்ளி முதல்வரிடம் கூறவும் சட்டப்படி அவ்விடயம் நகரசபைக்கு அறிவிக்கப்பட்டு அது வழக்காகி விசாரணைக்கு வந்தது. தாயாருக்கு டெனிஷ்மொழி தெரியாது என்பதனால் என்னை மொழிபெயர்புக்காகக் கூப்பிட்டனர்.

நான் மொழிபெயர்ப்பாளராக வேலை செய்யத் தொடங்கிக் கனகாலம். ஆனாலும் இப்பொழுது கொஞ்சக் காலமாக இவ்வாறான அடி பாட்டு வழக்குகளை அதிகம் சந்திக்கின்றேன். மொழி என்று நோக்கு மிடத்து அது தமிழ் டெனிஷ் ஆங்கிலம் போன்ற மொழிகள் என்பதையும் தாண்டிப் புரிதலை உண்டாக்கும் ஒரு கருத்துத் தொடர்புச் சாதனமாக மொழி அமைகின்றது என்பதை நாம் கருத்தில் கொள்ளவேண்டும்.

அத்தகைய புரிதல்கள் உண்டாவதற்கு நாம் குழந்தைகளின் உலகத்தைக் குழந்தைகளின் பார்வையில் பார்க்க வேண்டும். மேலும் கண்களால் மட்டுமல்லாது இதயத்தாலும் விஞ்ஞான ரீதியாகவும் பார்க்க வேண்டும்.

**குழந்தைகளின் மொழியும் பெற்றவரின் மொழியும்**

காட்டுமிராண்டிகளாக வாழ்ந்தகாலத்து மக்களிடம் மொழியின் பயன்பாடு குறைவாக இருந்தது. காலம் செல்லச் செல்ல மொழியின் வளர்ச்சியும் அதன் மூலமாக அன்புப் பரிமாற்றங்களும் நடைபெறத் தொடங்கின. நாகரீகம் வளர்ந்து மனிதனும் வாழ்வில் பலவிதமான பரிணாம வளர்ச்சிகளைப் பெற்று விட்டான்.

அந்த வகையில் குழந்தை வளர்ப்பிலும் மொழி என்பது மிக மிக முக்கியமான ஒரு தொடர்புச் சாதனம் என்பதை யாரும் மறுக்க முடியாது. நாம் எவ்வாறு நமது குழந்தைகளுடன் கதைக்கின்றோம். எப்படி எமது அன்பை அவர்களுக்குப் புரிய வைக்கின்றோம் என்பதில்தான் எமது உறவும் குடும்பமும் கட்டி எழுப்பப்படுகின்றன. சுவாசிக்கக் காற்று உண்ண உணவு உடுக்க உடை எவ்வளவு முக்கியமோ அதேயளவு அன்புப் பரிமாற்றமும் அதற்கான மொழியும் மிக மிக அவசியம்.

மொழிப்பரிமாற்றத்தின் முக்கிய நோக்கம் கருத்துப் பரிமாற்றமே.

நாம் பரிமாறும் கருத்தானது உரியவரிடம் முறையாகச் சேரவேண்டும். அதை உரிய முறையில் அனுப்புவதும் கொடுப்பதும் எவ்வளவு முக்கியமோ அதே அளவு முக்கியம் அச் செய்தியானது பெற்றுக்கொண்டவரைத் திருப்திப்படுத்தியதா என அறிவதும் ஆகும். சாப்பாடு பரிமாறும் பொழுது நாம் செலுத்தும் அக்கறையும் அன்பும் கருத்துப் பரிமாற்றதுதிலும் இருக்கவேண்டும் - இங்கு கருத்தில் கொள்ளப்பட வேண்டிய சில விடயங்கள் முக்கியமானவை.

1.சமமான மரியாதையுடன் இருதரப்பினரும் நடந்து கெள்ள வேண்டும்.(பேசிக் கொள்ளும் இருவரும்.)

2.அன்பான இயல்பான சூழல் இருத்தல் வேண்டும்.

3.சொல்லப்படுவதைக் காது கொடுத்துக் கேட்க வேண்டும்.

4.நமது சிந்தனையை எங்கோ வைத்துக் கொண்டு பேச்சில் ஈடுபடுதல் கூடாது.

பொதுவாக நாம் நமது குழந்தைகளுடன் பேசும் பொழுது நமது எண்ணங்களில் பக்கத்து வீட்டார் உறவினர்கள் நண்பர்கள் எதிரிகள் எனப் பலப்பலர் வந்து தமது கருத்துக்களைச் சொல்வது போல் நாமே கற்பனை செய்து கொள்கின்றோம்.இந்தச் சூழ்நிலையில் நாம் நம்மை இழந்து மற்றவர்களின் எண்ணங்களை எமது குழந்தைகள் மீது திணிக்கின்றோம்.

“நீ சோதனையில் முதலிடத்தில் சித்தி பெறவில்லை என்றால் ஊரெல்லாம் நம்மைப் பார்த்துச் சிரிக்கும். வெளியே தலைகாட்ட முடியாது”. எனப் பலவாறு சொல்லிக் குற்ற உணர்வைப் பிள்ளைகளுக்குக் கொடுக்கின்றோம்.நமது உரையாடல் முடிந்தபின்பு பிள்ளையின் மனதில் அப்பா அம்மா இருவரது உருவங்களும் மறைந்து அந்த இடத்தில் ஊரவரும் உறவினரும் வந்து குடிபுகுந்து விடுவார்கள். காலப்போக்கில் நம் குழந்தை நம்மை மறந்து தன்னையும் மறந்து ஊரவரின் பேச்சுக்காக வாழும் மனிதனாக மாறிவிடும். இப்படி வளரும் குழந்தைகள் தமது எண்ணங்களை தமது மனத்தை எல்லாம் மற்றவர்க்குத் தாரை வார்த்துக் கொடுத்துவிட்டுத் தமக்கெனத் தனித்துவம் அற்றவர்களாக எடுத்த எடுப்பில் எடுபடுபவர்களாக மாறித் தம்மையும் தொலைத்துத் தம் குடும்பத்தையும் தொலைப்பார்கள்.

5.கருத்துப் பரிமாற்றம் என்ற நோக்கத்தில் நாம் மெழியைப் பற்றிச் சிந்திக்கும் பொழுது மொழிக்குப் பல அவதாரங்கள் உள்ளன என்பதை நாம் கண்டு கொள்ளமுடியும்.

1.பிறந்த குழந்தை அழுவதும் ஒரு மொழியே. ஆறு மாதம் ஆகும் பொழுது குழந்தை எல்லாப் பொருட்களையும் வாயில்வைக்கும்.விரல் சூப்பும் .இங்கேதான் குழந்தை தன் வாயுடன் தானே கதைத்து உலகைப் புரிகின்றது. கையில் கிடைத்தது அம்மாவுடைய தங்கத் தாலியா அல்லது வேறு ஏதுமா எனப் புரிய ஆசைப்படுகின்றது. காரணம் என்ன?. குழந்தையின் நரம்பு வளர்ச்சி ஆரம்பத்தில் வாயில்தான் தொடங்குகின்றது. வாயில் வைக்கும் பொருட்களைப் பகுத்து அறிவதன் மூலம் நரம்புகள் ஊடாக அப் பொருள் பற்றிய செய்தி மூளைக்குக் கடத்தப்படுகின்றது. குழந்தையின் மூளை இயங்கத் தொடங்குகின்றது. இதை உணராது நாமும் 6 மாதக் குழந்தைக்குக் கையில் உறைகளைப் போடுவது அல்லது விரலுக்கு வேப்பெண்ணெய் போடுவது எனப் பல தடைகளைப் போடுகின்றோம்.

ஆறு மாதம் முடிய குழந்தை கையிலுள்ள நரம்புகளுடன் கதைக்க ஆரம்பிக்கின்றது.எதைக் கொடுத்தாலும் உடனே பிடித்துக் கொள்கின்றது. தூக்கி வைத்திருப்பவரின் மூக்குக் கண்ணாடி

அப்பாவின் பேனா அம்மாவின் தோடு என எல்லாவற்றையும் ஆராய்து பார்த்து அது சம்பந்தமான செய்திகளை மூளைக்கு அனுப்பு கின்றது.இந்தக் காலகட்டத்தில் விரல் சூப்பும் பழக்கம் குறைந்து

விடுகின்றது.

ஒன்றரை வயதாகும் பொழுது பெரும்பாலும்

பொருட்களை எடுத்து எறிகின்றது. காரணம் என்ன?. இப்பொழுது குழந்தையின் காது நரம்புகள் வளர்ந்து வேலை செய்யத் தொடங்கு கின்றன. பொருட்களை எடுத்து எறிவதனால் உண்டாகும் ஒலிகளைக் குழந்தை பரிசோதனை செய்து பார்க்கின்றது. கதிரை மேசைகளைத் தள்ளி விளையாடுகின்றது. சும்மா சும்மா சத்தம் போடுகிறாயா எனக் கூறி நாமும் குழந்தைகளைத் திட்டுகின்றோம்.

இப்பொழுது குழந்தைகள் ஒலிகளுடன் தமது மொழி அறிவை வளர்க்கின்றார்கள்.

இரண்டு வயதுக்குப்பின்னர் ஒரு இடத்தில் இருக்கமாட்டார்கள். இப்பொழுது இவர்களது தசை தரம்புகள் வளர்ச்சியடையத் தொடங்குகின்றன. அவற்றி மூலம் தமது உடலை எவ்வாறு பாவிக்கலாம் என முயற்சி செய்கின்றனர். இங்கே

விளையாட்டு ஒரு மொழியாக அமைகின்றது. விளையாட்டின் மூலமும் அனுபவங்கள் மூலமும் இவர்களது மூளை வளர்கின்றது.

2.உடல்மொழி

மேலே கூறப்பட்ட குழந்தை மொழிகளைவிடவும் பெரியவர்கள்

பாவிக்கும் வேறு ஒரு மொழி உள்ளது. அதுதான் உடல்மொழி. சொற்கள் எதுவும் இன்றிக் கருத்துக்களைப் பரிமாறுவது உடல்மொழியா கின்றது. உடலின் நிலைகள் சைகைகள் கண்களின் அசைவுகள் சிரித்த முகம் கோபமான முகம் முறைத்த பார்வை என இப்படிப் பலவிதமாக உடல் மொழிகளை நாம் காணமுடியும். பெற்றவர்களின் ஒவ்வொரு உடல் மொழிகளையும் குழந்தைகள் புரிந்து கொள்வார்கள். தொடுவது அணைப்பது முத்தம் கொடுப்பது என்பன உடல் மொழியின் அழகான அவசியமான வகைகளாகும். இனிமேல் பிழைக்கவே முடியாது என்று கருதப்பட்ட மாற்றுத்திறனாளிக் குழந்தைகளை வைத்து ஒரு ஆய்வு கூடத்தில் ஒரு பரிசோதனையை ரஷ்யாவில் நடத்தினார்கள். இரு அறை களில் எந்தப் புலன் உணர்வுகளும் அற்ற குழந்தைகளைத் தொட்டிலில் தனித் தனியாகப் படுக்க வைத்தனர். ஒரு அறையிலுள்ள குழந்தைகளைத் தடவித் தடவிப் பார்த்தனர். மறு அறையிலுள்ள குழந்தைகளை அவர்கள்

தொட்டும் பார்க்காது பரிசோதனை செய்தனர். சோதனை முடிவில் தொடுதல் உணர்வும் அரவணைப்பும் கிடைக்காத குழந்தைகள் இறந்தனர். மாறாக தொடுதல் உணர்வுகள் கிடைக்கப் பெற்ற குழந்தைகள் உயிருடன் இருந்தனர். இவ்விடத்தில் தொடுதல் அரவணைத்தல் என்பன எவ்வாறு ஒரு வித அன்பு மொழியாக அமைந்திருந்தன என்பதை நாம் உணரமுடிகின்றது.

ஒருமுறை குழந்தைகளை அடிப்பது பற்றிய ஒரு கலந்துரையாடல் நடந்த பொழுது ஒருவர் கூறினர். “நாங்கள் எல்லோரும் அடி வேண்டி வளர்ந்ததினால் தான் இன்று நன்றாக வாழ்கிறோம்” என்று. நான் கூறினேன் அடி வேண்டிய பின்பும் உங்கள் அப்பா அம்மா உங்களை அணைத்து வைத்திருந்தனர்.அதனால்தான் இன்றும் அடியின் பாதிப்புக் குறைவாக வாழ்கிறீர்கள் என்றேன்..

இங்குதான் நான் ஆரம்பத்தில் குறிப்பிட்ட அகப்பைக்காம்பு எம்முடன் பேச முற்படுகின்றது.அம்மாவால் அடக்க முடியாது போகும் போது அகப்பைக் காம்பும் அம்மாவின் கையும் தமது மொழியில் தொடர்பு கொண்டு அடக்க முற்பட்டுள்ளன.அகப்பைக் காம்பின் துணை கொண்டு பிள்ளையை அடக்கினாலும் அம்மாக்குப் பூரண திருப்தி கிடைக்கப் போவதில்லை. அருமருந்தான என் செல்வத்தை அடித்துவிட்டேனே எனத் தாய் மனம் வருந்தும். இங்கு பிள்ளைக்கு அம்மாவில் பயம் வரலாம். மரியாதை வரப்போவதில்லை. புரிதல்கள் அற்ற தண்டனைகளால் பிள்ளைகள் திருந்தப் போவதில்லை. நாம் உரத்துக் கத்தும் போதும் அகப்பைக் காம்பையோ பிரம்பையோ எடுக்கும் போதும் பிள்ளைகளின் மூளை அக்கணத்தில் செயல்பட மறுக்கின்றது. ஏதோ ஒரு விதத்தில் அது தப்பு என்று புரிந்தாலும் அது சம்பந்தமான விளக்கம் பிள்ளையின் ஆழ்மனதில் பதியப்படாது போகின்றது.

# அத்தியாயம் - 4

## பிரம்பு தொலைந்தது எங்கே?

இந்த நிகழ்வு நடந்து சுமார் 25 வருடங்கள் இருக்கும் என நினைக் கின்றேன். ஆனாலும் அச்சம்பவம் எனது மனத்தைவிட்டு நீங்காதுள்ளது.

அது ஒரு புதன் கிழமை. நான் வேலை செய்த சிறுவர் பள்ளியில் அன்று குழந்தைகளைச் சுற்றுலா கூட்டிச் செல்லும் தினம். 4 ஆசிரியர்களும் 15 குழந்தைகளுமாகப் புறப்பட்டோம். இக் குழந்தைகள் 6 மாதம் முதல் 3 வயது வரையிலான சிறார்களாவார்கள். நடக்க முடியாத சின்னவர்கள் தள்ளு வண்டிலில் இருத்தப்பட்டனர்.

9.30 மணிக்கு எல்லோரும் நடக்கத் தொடங்கினோம். இரண்டு இரண்டு சிறுவர்கள் ஒருவர் கையை மற்றவர் பிடித்தபடி நேராகவும் சீராகவும் தெரு ஓரமாக அழகாக நடக்கத் தொடங்கினார்கள். வரிசையின் முன்பு ஒரு ஆசிரியரும் இடையே இரு ஆசிரியர்களும் வரிசையின் கடைசி யில் ஒரு ஆசிரியருமாக அமைய எமது ஊர்வலம் ஆரம்பமானது. தெரு எங்கும் இயற்கைக் காட்சிகளைப் பார்த்து ரசித்தபடி ஊர்வலம் நகர்ந்தது.

இடையில் ஒரு விளையாட்டு இடத்தில் ஊர்வலம் நின்றது. ஊஞ்சலாட்டம்-சறுக்கி விழுதல் ஓட்டம் ஆட்டம் பாட்டு எனக் குழந்தைகள் மகிழ்வாக இருந்தனர். நேரம் 11 மணி ஆனதும் மீண்டும் பள்ளிநோக்கி ஊர்வலம் நகர்ந்தது. திட்டமிட்டபடி மீண்டும் மதிய உணவு நேரம் 12 மணிக்கு எல்லோரும் பள்ளியில் இருக்க வேண்டும்.

தள்ளு வண்டிலைப் பிடித்தபடி நடந்து வந்த குட்டிப் பையன் ஒருவனுக்குத் திடீர் என ஒரு ஆசை வந்தது. “நானும் தள்ளு வண்டிலில் இருந்து வரப் போகின்றேன்” எனக் கேட்கின்றான். “உனக்கு வலுவான கால்கள் உள்ளன. நீ நன்றாக நடப்பாய் நடந்து வா” என அவனருகில் வந்த ஆசிரியர் கூறுகின்றார்.

பையன் இப்பொழுது அழத் தொடங்குகின்றான். ஆசிரியர் மீண்டும் சொல்கிறார் “உன்னால் நடக்க முடியும் நடந்து வா” .ஊர்வலம்

இடையில் நிற்கின்றது.

பையனின் பிடிவாதமும் கூடுகின்றது. “நீங்கள் எல்லோரும் பள்ளிக்குப் போங்கள். நானும் பீற்றரும் பிறகு வருகின்றோம்.” இவ்வாறு கூறினார் அவனருகில் வந்த ஆசிரியை. எமது ஊர்வலமும் பள்ளியை வந்தடைந்தது. நாங்கள் எல்லோரும் குளிர் உடைகளை மாற்றிக் கைகளைக் கழுவி மதிய உணவு உண்ணத் தொடங்கினோம். நேரம் 12.30க்கு மேலாகிவிட்டது.எல்லோரது கண்களும் பீற்றரையும் ரீச்சரையும் தேடியபடி இருந்தன.

ஆனால் அங்கே நடுவழியில் ரீச்சர் மரியானாவுக்கும் பீற்றருக்கும் இடையில் ஒரு மௌனயுத்தம் நடந்து கொண்டிருந்தது. நீயா நானா என இருவரும் தமது பலத்தைக் காட்டியபடி இருந்தனர். மரியானா கோவத்தை வரவழைக்கவில்லை. கம்பு தேடி எடுக்கவில்லை. உரத்துக் கத்தவில்லை.

ஆனால் அன்பாகவும் தெளிவாகவும் நிதானமாகப் பீற்றருக்குச் சொல்லிவிட்டார். “நான் உன்னுடன் இருக்கின்றேன் நீ உன் நிலைமையைப் புரிந்து கொள். நீ சிந்தித்து உன் முடிவைக் கூறும் வரை நாம் இந்தத் தெருவோரமாகவே இருப்போம்” என்று.

மௌனயுத்தம் தொடர்ந்தது. நேரம் ஓடியபடி இருந்தது. நேரம் இப்பொழுது ஒரு மணியாகப் போகின்றது. பீற்றர் தனது பிடிவாதத்தைக் கைவிட்டு மரியானாவின் கையைப் பிடிக்கின்றான்.

“மரியானா நாம் இனிப் பள்ளிக்குப் போவோமா” எனக் கேட்கின்றான்.

“சரி வா உனக்குப் பசிக்கின்றதா எனக்கும் பசிக்கின்றது.” எனக் கதைத்தபடி ஒருவர் கையை ஒருவர் பற்றியபடி மீண்டும் பள்ளியை வந்தடைகின்றனர்.

மேலே கூறப்பட்ட நிகழ்வின் மூலம் பலம் என்பது தடியிலோ பிரம்பிலோ அகப்பைக் காம்பிலோ அல்லது நாம் பெரியவர்கள் உரத்த குரலில் கத்துவதிலோ திட்டுவதிலோ நுள்ளுவதிலோ இல்லை என்பதைப் புரிந்து கொள்ளலாம். இங்கு மரியானாவின் பொறுமையும் தான் ஒவ ஆசிரியர் என்ற அவரது முதிர்ச்சியான சிந்தனையும் தான் அவரது வெற்றிக்குக் காரணமாக அமைந்தது.

சாதாரணமாக நமக்குக் கோபம் வரும்போது நாம் யார் நமது ஆளுமை என்ன நமது மதிப்பு என்ன என்பதை மறந்து நாமும் சிறு பிள்ளைகள் போன்று அவர்களுடன் போட்டி போட்டுக் கோபப்படுகின்றோம்.

நம்மால் நமது பிள்ளையைத் திருத்த முடியாது என்ற நினைப்பில் நாம் அடி தடி என வன்முறையில் இறங்கி விடுகின்றோம். உண்மையில் பலம் அற்றவர்களே கோபப்படுவார்கள். தன்னம்பிக்கை அற்றவர்கள் தள்ளாடு வார்கள். தமது ஆளுமையாலும் பேச்சுத்திறத்தாலும் பிள்ளைகளுக்குப் புத்தி சொல்ல முடியாதவர்களே தமது கைகளையும் பிரம்புகளையும் நம்புகின்றனர்.

நான் பெரியவன் என் பிள்ளை சிறியது அதனை எனக்குச் சமமாகத் தண்டிப்பது தப்பு என்ற விளக்கம் நமக்கு வருவதில்லை. அடியாத மாடு படியாது ...நானும் அடி வேண்டித் தானே படித்தேன். பக்கத்து வீட்டார் அடிச்சு அடிச்சுத்தானே அவர்கள் பிள்ளைகள் டாக்டர் ஆனார்கள்..

இப்படி எல்லாவிதமான கதை வசனங்களைத் துணைக்கு இழுத்த படி நாம் நமது பிள்ளைகளை வளர்க்கின்றோம். கூடு கட்டி குஞ்சுகளை வளர்கும் எந்தப் பறவையும் தனது குஞ்சுகளின் இறக்கைகளைக் கட்டிப் போட்டு வேடிக்கை பார்ப்பதில்லை.

தன்நம்பிக்கை குறைந்த பெற்றவர்களே தமது பிள்ளைகள் மீதும் நம்பிக்கை வைக்காது அவர்கள் வளர்ந்து பெரியவர்களான பின்பும் தமது இடுப்பை விட்டு இறக்காமல் துன்பப் படுகின்றனர்.

பெற்றவர்கள் வளைந்து கொடுக்கக் கூடிய குணம் உள்ளவர்கள் என்பதைக் குழந்தை உணர்ந்து கொண்டால் அவர்களைத் தான் ஆட்டிப்படைக்கலாம் என நினைத்துக் குழந்தை பிடிவாதம் பிடிக்கும். முடிவு எடுப்பதில் திடமும் தீர்மானமும் உள்ள பெரியவர்களாகப் பெற்றவர்கள் இருப்பது மிக மிக அவசியமாகும். தவறு என ஒரு விடயத் தைச் சொன்னால் சொல்லப்பட்ட இந்தக் கருத்தில் நிதானமும் நியாயமும் இருத்தல் அவசியம். நேற்று ஒரு கருத்தைச் சொன்ன அம்மாவை நாளை மறு கருத்தைச் சொல்வதற்குத் நானே தயார்ப்படுத்தலாம் எனக் குழந்தை தப்புக் கணக்குப் போடலாம். எப்படி அம்மாவை ஏமாற்றலாம் எனச் சிந்திக்கலாம்.

எதற்காக நாம் பிள்ளைகளை அடிக்கின்றோம்?

எப்போது அடிக்கின்றோம்?

நம்மால் கட்டுப்படுத்த முடியாதபோது நமது பலத்தை இழந்து உணர்ச்சி வசப்பட்டு நமது வாய் மொழியை நம்பாது உடல் மொழியை அதாவது கையைப் பாவிக்கின்றோம். இங்கே நமக்குத் துணைக்குப்

பிரம்பைக் கூப்பிடுகின்றோம்.வன்முறையை நாமே வீட்டுக்குக் கூட்டி வருகின்றோம்.

நமது வீட்டுக்குக் குடிபுக வந்த வன்முறையானது நமது குழந்தைகளுக்குத் தோழன் ஆகின்றது. அடி தானே அடித்தால் அடித்து விட்டுப் போகட்டும் என்று குழந்தைக்குச் சொல்லிக் கொடுக்கும்.

முதல்முறை துப்பாக்கிக்குப் பயப்படும் ஒரு மனிதன் பின்பு அடுத்தமுறை துப்பாக்கியைக் கண்டால் அதை ஒரு விளையாட்டுப் பொருள் போன்று நினைக்கத் தொடங்குவான். அவ்வாறே வீட்டில் அடி வேண்டி வளரும் குழந்தை வன்முறை என்பதைப் பெருமையாகவும் அதுவே வீரம் எனவும் தப்புக் கணக்குப் போடுகின்றது.

நாளடைவில் தனது வன்முறையைத் தனது பள்ளித் தோழர்களிடமும் தெருவில் வருவோர் போவோரிடமும் காட்டுகின்றது. இந்த வளர்ச்சியானது பின்பு இக்குழந்தையை போதைப் பொருள் பழக்கத்திற்கும் கூடாத நட்புக்களிடமும் கூட்டிச் செல்கின்றது.

இதுவே நாளடைவில் சமுதாயத்தில் வன்முறை வெடிக்கக் காரணமாகின்றது. பள்ளிக்குப் போகும் சின்னஞ்சிறு குழந்தைகளைக் கூட பஸ்ஸ/டன் கொழுத்திவிடச் சொல்கின்றது. அன்பு பாசம் என்பவற்றைக் குழிதோண்டிப் புதைக்கின்றது. என்ன குற்றம் செய்தாலும் அதற்காக மனவருத்தம் இல்லாத மனிதர்களாக இக்குழந்தைகளை வளர்த்து விடுகின்றது. அகிம்சை என்பது மிகப் பலம் பொருந்திய ஆயுதம் என்பதை நாம் மறந்துவிடுகின்றோம்.

புத்தர் வாழ்ந்த காலத்தில் அங்குலிமால் என்ற கொலைகாரன் வாழ்ந்தான். அவன் 1000 மனிதர்களைக் கொல்வதாகச் சபதம் எடுத் திருந்தான். அவன் தான் கொலை செய்த மனிதர்களின் கட்டை விரல்களை மாலையாகப் போட்டபடி கொலை செய்வதற்காக மனிதர்களைத் தேடி அலைந்தபடி இருந்தான். அங்குலிமால் இருந்த காட்டுப் பகுதியைப் புத்தர் கடந்து செல்ல வேண்டியிருந்தது. அனைவரும் புத்தரை அவ்வழியால் போகவேண்டாம் எனத் தடுத்தனர். ஆனாலும் புத்தர் அவன் இருந்த பாதையில் பயணப்பட்டார். புத்தரைக் கண்ட அங்குலிமால் அவரை வெட்ட வந்தான். வெட்ட வருபவனைப் பார்த்துப் பயப்படாத புத்தரைக் கண்டு வியந்தான் அவன். “உங்களுக்கு ஏதாவது இறுதி ஆசை இருந்தால் கூறுங்கள்” என்றான் அங்குலிமால். இந்த மரத்தின் கிளையை வெட்டு என்றார் புத்தர். அவனும் வெட்டினான். வெட்டியதை மீண்டும் மரத்தில் ஒட்டு என்றார் புத்தர். இதைத் தன்னால் செய்ய முடியவில்லை எனக் கூறித்

தன் தவறுக்கு மன்னிப்புக் கேட்டான் அம்புலிமால். உன்னால் வெட்ட முடியும் என்ற செயலை மட்டும் வைத்துக் கொண்டு நீ பெரிய வீரன் என்று எவ்வாறு கூறுவாய் எனக் கூறி அம்புலிமாலது அறியாமையையும் விழிப்புணர்வற்ற வாழ்க்கை முறையையும் புத்தர் நல்வழிப்படுத்தினார். இந்தக் கதையில் வரும் அம்புலிமால் போன்றே வன்முறையால் பிள்ளைகளைத் திருத்தலாம் என நினைப்பவர் வாழ்வும் அமைந்துள்ளது. வன்முறை என்பது வெற்றிக்கான பாதை அல்ல என்பதை நாம் புரிந்து கொள்ளலாம். வெட்டப்பட்ட மரக்கிளை போன்றதே நம் குழந்தைகளின் உள்ளமும் உணர்வுகளும். வன்முறையானது நமது வீட்டை மட்டுமன்றி உலகையே அழித்து விடுகின்றது.

நல்ல பெற்றோர் நல்ல குழந்தைகளை நாட்டுப்பிரஜைகளாக ஆக்க வேண்டிய கடப்பாடுடையவர்கள். நாம் நல்ல பெற்றாராக இருப்பதற்கு எவ்வாறு எம்மைச் செம்மைப்படுத்திக் கொள்ளவேண்டும் என்பதைப் பற்றிச் சிந்திக்க வேண்டும். கற்றல் என்பதற்கும் எம்மை நாமே புடம் போட்டுக் கொள்வதற்கும் வயது எல்லை தேவையில்லை. கற்றலாவது எம் இறுதி மூச்சு உள்ளவரை தொடரப்பட வேண்டிய ஆரோக்கியமான நிகழ்வாகும்.

## அமிர்தம் ஏன் நஞ்சானது?

குருசேஷத்திரம் மரண ஓலங்களையும் இரத்த வெள்ளத்தையும் தாங்கமுடியாது துடித்தபடி இருந்தது.

அந்த நேரத்திலும் காந்தாரியின் கண்களைக் கட்டியிருந்த அந்தக் கறுத்தத் துண்டு அகற்றப்படவில்லை. மாறாக அவள் கண்ணீரில் அது நனைந்தபடி இருந்தது. ஏற்கெனவே கண்களை இழந்த திருதராஷ்டினன் பிள்ளைப்பாசத்தில் தனது அறிவுக் கண்களையும் இப்பொழுது இழந்திருந் தான். கணவனுக்காகத் தன் கண்களைத் தியாகம் செய்த காந்தாரி நிலையும் அவ்வாறே. பிள்ளைப் பாசத்தில் அவளும் துடித்தபடி இருந்தாள்.

"நீங்கள் நம் பிள்ளைகளுக்கு அதிக செல்லம் கொடுத்துக் கெடுத்துவிட்டீர்கள்." காந்தாரி புலம்பினாள்.

"இல்லையில்லை நீ தான் தேவையில்லாது கண்களைக் கட்டிக் கொண்டு அவர்களைக் கட்டுப்பாட்டுடன் வளர்க்காது விட்டுவிட்டாய்", திருதராஷ்டிரன் மறுதலித்தான்.

"இப்பொழுதாவது உங்கள் கண்களின் கட்டை அவிழ்த்து

விடட்டுமா மகாராணி” நானும் டென்மார்க்கில் இருந்து நடுங்கிய குரலில் கேட்கின்றேன்.

“இல்லையில்லை” எனக் கூறிக் காந்தாரி ஓலமிட்டு அழுதாள்.

இது கனவா இல்லை நனவா நானும் நித்திரையின்றிப் புலப்புகின்றேனா எனப் புரியவில்லை.

நேரத்தைப் பார்த்தேன் இரவு இரண்டு மணி. வெளியே மழை கொட்டியபடி இருந்தது. போர்வையை இழுத்து மூடியபடி மீண்டும் உறங்கி விட்டேன்.

அந்த அடர் வனத்தில் பாண்டவர்களான பீமன் அருச்சுனன் நகுலன் சகாதேவன் ஆகிய நால்வரும் கிருஷ்ணருடன் இருந்தனர்.

கலியுகம் எப்படி இருக்கப் போகின்றது என்ற வினா அவர்கள் மனதைக் குடைந்தபடி இருக்கவே அதைப் பற்றிக் கிருஷ்ணரிடம் கேட்டனர். அவர் நான்கு திசைகளிலும் நான்கு அம்புகளை வீசினார். அந்த அம்புகள் விழுந்துள்ள இடத்திற்கு ஒவ்வொருவரும் ஒவ்வொரு திக்காகச் சென்று பாருங்கள். அங்கு காணும் காட்சிகளை என்னிடம் வந்து கூறுங்கள் நான் கலியுகம் எப்படி இருக்கும் என விளக்குகிறேன் என்றார்.

நால்வரும் நான்கு திசைகளை நோக்கிப் புறப்பட்டனர். அவர் களில் சகாதேவன் ஒரு வித்தியாசமான காட்சியைக் காண்கின்றான். ஒரு பசு அப்பொழுது தான் ஈன்ற சின்னஞ்சிறு கன்றுக் குட்டியை நக்கியபடி இருந்தது. பார்ப்பதற்குப் பாசம் ஊற்றெடுக்கும் அந்தக் காட்சியைக் கண்டு தன்னை மறந்து பார்த்தபடியே நின்றான். அந்தப் பசு தன் கன்றுக் குட்டியை நக்குவதை நிறுத்தாது தொடர்ந்து நக்கியபடியே இருந்தது. அது நக்க நக்கக் கன்றுக் குட்டியின் தோல் உரிந்து அதிலிருந்து இரத்தம் வழிந்தபடி இருந்தது.

இந்தக் காட்சியை அவன் கிருஷ்ணரிடம் வந்து கூறினான்.

“சகாதேவா கலியுகத்தில் பெற்றவர்கள் பிள்ளைகள் மீது அளவு கடந்த பாசத்தை வைத்துச் செல்லம் கொடுப்பார்கள். அவர்களைக் கண்டிப்பாக வளர்க்கமாட்டார்கள். அதனால் பிள்ளைகள் தாய்தந்தையர் போன்றும் தாய்தந்தையர் பிள்ளைகளைப் போன்றும் நடந்து கொள் வார்கள். பிள்ளைப் பாசம் அவர்கள் கண்களை மறைத்து அவர்களை நல்வழிப்படுத்த விடாது. நீதி நியாயம் நல்லது கெட்டது தெரியாது பிள்ளைகள் வளர்வார்கள்.” எனக் கிருஷ்ணர் கூறினார்.

“அப்படித்தான் அம்மாப்பாசமும் அதிகமானால் சிக்கல்தான்” எனக் கூறிச் சிரித்தான் பீமன்.

“என்ன பீடிகை போடுகிறாய் பீமா” என்றார் கிருஷ்ணர்

“அம்மாவின் சொல்லைத் தட்டப்படாது என நினைத்துத் தானே நாங்கள் ஐவரும் பாஞ்சாலியை மணந்தோம். பெற்றவர் சொல்லக் கேட்பதிலும் ஒரு தர்மம் வேண்டும் அல்லவா மைத்துனா எனக் கூறினான் பீமன்.

“உண்மைதான், எதற்கும் ஒரு எல்லை உண்டு .அந்த எல்லை மீறப்படாது இருந்தால் மட்டுமே எல்லோருக்கும் நன்மை உண்டாகும்.” அர்ச்சுனன் அதை ஆமோதித்தான்.

இவ்வாறு இவர்கள் கதைத்துக் கொண்டிருந்தபோது கிருஷ்ணா கிருஷ்ணா எனக் கத்தியவாறு திரௌபதி ஓடிவருகின்றாள்.

எதற்காக ஓடிவருகிறாய் சகியே? கிருஷ்ணன் கேட்கின்றார்.

“நமது ராச்சியத்தில் தாய்மார்கள் எல்லோரும் கண்களைக் கட்டியபடி தம் பிள்ளைகளுக்கு உணவு ஊட்டுகிறர்கள் வந்து பார் கண்ணா” எனக் கூறுகின்றாள். எனது ஊரிலும் இப்படித்தான் கண்ணா வா வா வந்து பார் என நானும் கூறுகிறேன்..

“வருகிறேன் வருகிறேன்”, எனச் சிரித்தபடி கூறிய கிருஷ்ணன் திடீர் என மறைந்து விடுகிறார். “கிருஷ்ணா... கிருஷ்ணா”, எனக் கத்தியபடி நானும் ஓடுகிறேன்..

தலைமாட்டில் அலாரம் கூவியபடி இருந்தது. கண்டது கனவுதான் என்றாலும் மூளை மிகத் தெளிவாக இருந்தது.

கனவிலே திரௌபதி கூறியபடி நாமும் பிள்ளைப்பாசம் என்ற கறுத்தத் துண்டினால் நமது கண்களைக் கட்டியபடியே வாழ்ந்து நமது பிள்ளைகளைக் கெடுக்கிறோம் எனப் புரிந்து கொண்டேன்.

எனது நினைவலைகள் சுமார் 30 வருடங்கள் முன்னோக்கி ஓடியது.

அப்பெழுது நான் குழந்தைப் பராமரிப்புப் பயிற்சிக்காக ஒரு பள்ளியில் வேலைக்கு அமர்த்தப்பட்டிருந்தேன். நேரம் மாலை ஐந்து மணியிருக்கும். வேலை முடிந்து பெற்றவர்கள் தமது பிள்ளைகளை வீட்டுக்குக் கூட்டிப்போவதற்காக வந்தபடி இருந்தனர்.

4வயது நிரம்பிய மாயா மட்டும் தாயாரைக் காணவில்லை என அழுதபடியே இருந்தாள். அவள் புலனை மாற்றுவதற்காக நான் காட்டிய

எந்த விளையாட்டுக்களும் அவளது அழுகையை நிறுத்தவில்லை.

எனது மூளை குறுக்காலே சென்றது. குளிர்சாதனப் பெட்டியருகில் சென்று ஒரு ஐஸ்கிறீம் குச்சியை எடுத்து மாயாவிடம் கொடுத்தேன். மாயாவின் அழுகை நின்றது. அப்பெழுது மாயாவின் அம்மா உள்ளே வந்தார். பிள்ளையைக் கண்டு மலர வேண்டிய அவரது முகம் கடுகடுப்பாக மாறியது.

நான் அவரருகில் சென்று வணக்கம் சொன்னேன். பதில் வணக்கம் சொன்னார். மாயாவுக்கு யார் ஐஸ்கிறீம் கொடுத்தது எனக் கேட்டார். நானும் பெருமையாக நான்தான் என்றேன்.

“என் பிள்ளைக்கு எதுக்கு ஐஸ்கிறீம் கொடுத்தீர்கள்” அவர் கேட்டார்.

“அழுகையை நிற்பாட்ட” என்று கூறினேன்.

“இல்லையில்லை அவளுக்கு நீங்கள் லஞ்சம் கொடுத்துக் கெடுத்துவிட்டீர்கள். இனி எப்பொழுதும் அழுதால் ஐஸ்கிறீம் கிடைக்கும் என அவள் நினைப்பாள். நாங்கள் எமது பிள்ளைகளுக்கு வெள்ளிக் கிழமைகளில் மட்டும் தான் இனிப்புப் பண்டங்கள் கொடுப்போம். இப்பொழுது நீங்கள் அந்த விதியை மீறி விட்டீர்கள். இது தப்பு” என என்மீது குற்றப் பத்திரிகை வாசித்தார்.

நமது கலாசாரத்தில் மிகவும் சாதாரணமாக நடக்கும் ஒரு நிகழ்வு டெனிஷ் மக்கள் மத்தியில் வேறு விதமாகப் பார்க்கப்பட்டது. இங்கே தான் வரம்புகள் எல்லைகள் கட்டுப்பாடுகள் எனக் கூறக்கூடிய ஒரு சொற் பதத்தை நாம் புரிந்து கொள்வது அவசியமாகின்றது.

# அத்தியாயம் - 5

## அட வீட்டுக்கு வீட்டுக்கு வாசல்ப்படி வேண்டும்

அட வீட்டுக்கு வீட்டுக்கு வாசற்படி வேண்டும்.....சென்ற அத்தியாயத்தில் குழந்தை வளர்ப்பில் கட்டுப்பாடு என்ற விடயம் பற்றிக் கூற முற்பட்டேன். அதைப் பற்றி நினைத்த போது கிழக்கு வாசல் படத்திற்கு வாலி அவர்கள் எழுதிய பாடல் ஒன்று நினைவில் வந்தது

அட வீட்டுக்கு வீட்டுக்கு வாசற்படி வேணும் தெருக் கூத்துக்கும் பாட்டுக்கும் தாளக்கதி வேணும்

தல வாசலில்லா வீடும்

ஒரு தாளமில்லாக் கூத்தும்

தத்தித் தரிகிட தரிகிட ததிங்கிணத்தோம்.

நாட்டுக்கு எல்லை

வளவுக்கு வேலி

வீட்டுக்குச் சுவர் கதவு வாசல் என்பது போல

குழந்தை வளர்ப்புக்குக் கட்டுப்பாடுகள் மிக மிக அவசியமானவை யாகும்.

பாத்தி கட்டப்பட்ட பயிர்

வேலி போடப்பட்ட தோட்டம்

எல்லைகள் போடப்பட்ட அன்பு கட்டுப் பாடான குழந்தை வளர்ப்பு என்பன ஆரோக்கியமானவையும் அவசியமானவையுமாகும்.

### எல்லை போடுவது என்பது ஒரு கலை

கட்டுப்பாடுகள், எல்லைகள் விதிமுறைகள் என்பன குழந்தை வளர்ப்பில் மிக முக்கியமான அம்சங்களாகும். அன்பு என்பதை குழந்தை வளர்ப்பில் இதயம் எனக் கொண்டால் கட்டுப்பாடு என்பது முதுகெலும்பு

போன்றது எனக் கொள்ளலாம்.

வீட்டில் உடுப்புக்கள் அல்லது பொருட்கள் ஒழுங்கின்றி இருந்தால் அவற்றைப் பாவிப்பது சிரமமாக இருக்கும். அவற்றை ஒழுங்காக அடுக்கி வைத்தால் தெளிவாக அழகாகப் பாவிப்பதற்கு இலகுவாக இருக்கும். அவ்வாறே கட்டுப்பாடுகள் உள்ள குழந்தை வளர்ப்பும் பெரியவர்களுக்கும் சரி குழந்தைகளுக்கும் சரி ஒருவரை ஒருவர் புரிந்து கொள்ள இலகுவாக இருக்கும். தப்பு எது சரி எது என்பதைப் புரியவும் கட்டுப்பாடுகள் உதவுகின்றன. யார் யார் எவர் எவர் எப்படி இருக்க வேண்டும் என்பதையும் இதன் மூலம் உணரமுடியும். ”பரமசிவன் கழுத்திலிருந்து பாம்பு கேட்டது கருடா சௌக்கியமா?” இருக்கும் இடத்தில் இருந்து கொண்டால் எல்லாம் சௌக்கியமே!

கருடன் சொன்னது என்ற கண்ணதாசனுடைய பாடல் வரிகள் இந்தக் கருத்துக்கு விளக்கம் கொடுப்பதாக அமைகின்றது. ஒவ்வொரு வீட்டிலும் ஒவ்வொரு பாடசாலையிலும் ஒவ்வொரு நாட்டிலும் சில சட்ட திட்டங்கள் நடைமுறையில் இருக்கும். களவு, கொலை, கொள்ளை என்பனவற்றைத் தடுப்பதற்கு இச் சட்டங்கள் உதவிபுரிகின்றன. குழந்தைகள் நல்லது கெட்டது தெரிந்து வளர்வதற்கு இந்தக் கட்டுப்பாடுகளும் எல்லைகளும் உதவுகின்றன. இரவு வரும் பொழுதுதான் பகலின் அருமையும் பகல் என்ற ஒன்று இருந்தது என்பதும் நமக்குப் புரிகின்றது.

வீட்டில் பெரியவர்களும் பிள்ளைகளும் சேர்ந்து சமைப்பது, வீடு பெருக்குவது, உடுப்புக்களைத் தோய்ப்பது, எடுத்த பொருட்களை எடுத்த இடத்தில் வைப்பது சத்தம் போட்டுக் கதைக்காதது, கெட்ட வார்த்தை சொல்லி ஒருவரை ஒருவர் திட்டாதிருப்பது அல்லது அடிக்காமலிருப்பது போன்ற நடைமுறைகள் எழுதப்படாத சட்டங்களாக வீடுகளில் இருப்பதை நாம் அறிவோம். ஒரு வீடு வீடாக இருப்பதற்கும் உறவுகள் அன்பாக இருப்பதற்கும் பிள்ளைகள் நன்றாக வளர்வதற்கும் இப்படியான சட்டங்கள் உதவுகின்றன.

மேலும் தத்தமது வீடுகளில் மட்டும் அல்லாது வேறு இடங்களிலும் எவ்வாறு நடந்து கொள்வது என்பதைக் கற்றுக் கொள்ளலாம். நாம் வேறு ஒருவரது வீட்டுக்குப் போனால் அந்த வீட்டு வாசலில் நிற்போம். பின்பு வரவேற்பு அறைக்கு அழைத்துச் செல்லப்படுவோம். மாறாக அந்த வீட்டின் படுக்கையறைக்கோ சமையல் அறைக்கோ நாமாக உடனடியாக உள்ளிட மாட்டோம். அத்தகைய கட்டுப்பாடுகளும் எல்லைகளும் நம்மையும் நம் குழந்தைகளையும் சமூகத்தில் நல்ல பிரஜைகளாக உருவாக்க உதவுகின்றன.

## ராசா யார்? மந்திரி யார்?

தலை இருக்க வால் ஆடுது என ஒரு பழமொழி நமது மூத்தவர்கள் சொல்ல நாம் கேட்டிருப்போம். குடும்பத்தின் நிர்வாகத்தில் யார் யாருக்கு அதிகாரங்கள் எவ்வாறு பகிர்ந்தளிக்கப் பட்டுள்ளன என்பது மிக முக்கியமான விடயமாகும்.

அத்தகைய அதிகாரப் பரவலாக்கத்தின் மூலம் குடும்ப உறுப்பினர்களிடையே மரியாதையும் அன்பும் பரிமாறப்பட்டு நல்ல நிர்வாகக் கட்டமைப்பு உருவாகும். அப்பாவின் கடமைகளும் உரிமைகளும் அதிகாரமும் இப்படித்தான் இருக்கும் என்ற தெளிவான புரிதல் பிள்ளைகளுக்கு இருப்பது அவசியமாகும். அவ்வாறே அம்மாவின் அதிகாரமும் அதற்கான மரியாதையும் எவ்வாறு இருக்க வேண்டும் எனப் பிள்ளைகள் புரிந்திருப்பது மிக மிக அவசியமாகும்.

சில குடும்பங்களில் அப்பாவின் தலைமை இருக்கும். சில குடும்பங்களில் அம்மாவின் தலைமை இருக்கும். ஆனால் வீட்டின் சிம்மாசனம் என்னிடம் உள்ளது அதனால் நானே ராசா நானே ராணி என்ற நிலையில் அப்பாவை அம்மா மட்டம் தட்டி மரியாதையில்லாது நடத்துவவோ அம்மாவை அப்பா மரியாதையில்லாது நடத்துவதோ தப்பாகும். இப்படி நடப்பதனால் குழந்தைகள் வீட்டில் எவர் அதிகாரத்தில் உள்ளார்களோ அவர்கள் பக்கம் சார்ந்திருந்து மற்றவரை மரியாதை யில்லாமல் நடத்துவார்கள்.

“அப்பாவா அவர் அப்படித்தான். அம்மாவா அவாக்கு என்ன தெரியும்?” என்பன போன்ற வசனங்களைக் குழந்தைகள் பேசுவதைக் கேட்டிருப்போம். இத்தகைய சிந்தனைகள் ஆரோக்கியமான குடும்பத் தைக் கட்டி எழுப்பாது. மாறாகக் குடும்ப நிர்வாகத்தில் குழப்பம் நிறைந்து விடும்.அதனால் பிள்ளைகளுக்குத் தெளிவின்மை உண்டாகும். மரியாதை அன்பு எல்லாம் தொலைந்து போகும்.

அண்ணண், தம்பி, அக்கா, தங்கை, பாட்டா, பாட்டி, மாமா மாமி பெரியப்பா பெரியம்மா சித்தப்பா சித்தி போன்ற உறவுகளுக்கு எவ்வாறு மரியாதை கொடுத்து நடத்துவது என்பதைப் பிள்ளைகள் நம்மிடம்தான் கற்றுக் கொள்கின்றனர். அம்மா குடும்பத்துடன் ஒரு விதமாகவும், அப்பா குடும்பத்துடன் ஒரு விதமாகவும் வேறுபாட்டுடன் பழகும் ஒருவித அரசியலைப் பிள்ளைகள் பெற்றவர்களிடம் இருந்துதான் கற்றுக் கொள்கின்றனர்.

அம்மா என்ன சொன்னாலும் கேட்டு அதுவே வேத வாக்காக வாழும் குழந்தைகள் தப்பான கருத்துக்களைத் தாயார் கூறினாலும் அது சரியானது என்றே நம்புவார்கள். காரணம் குழந்தைகளைத் தாலாட்டித் தூங்க வைப்பது தாயின் கடமையாகக் காலம் காலமாக இருக்கின்றது. குழந்தையின் மூளையானது தூக்க நிலைக்குப் போகும் போது அதன் ஆழ் மனதைத் திறந்து விடுகின்றது. அந்த நேரத்தில் தாய் சொல்வது அவர்களுக்கு வேதவாக்காகும்.அப்படி வளர்ந்த குடும்பத்தில் தந்தையைப் பற்றித் தாயார் கூறும் புகார்கள் பிள்ளைகளைத் தந்தையின் எதிரிகளாக ஆக்கிவிடுவதுண்டு. அப்படிப்பட்ட பிள்ளைகள் தந்தை தம்மைவிட்டுப் பிரிந்தபின்பும் அவரைப் புரியாதவர்களாகவே இருப்பார்கள். விவாகரத் தான குடும்பங்களில் பிள்ளைகள் அவ்வாறு பந்தாடப்படுவதுண்டு. அப்பாவைப் பற்றிய அம்மாவின் குற்றப் பத்திரிகைகள் அம்மாவைப் பற்றிய அப்பாவின் குற்றப்பத்திரிகைகள் என்பன பிள்ளைகளின் மனதில் பசுமரத்தாணி போன்று பதிந்து விடுகின்றன. வீடு வீடாக இருக்க வேண்டுமானால் மரியாதை கட்டுப்பாடு அன்பு புரிதல் என்பன தெளிவாக அமைந்திருத்தல் அவசியமாகும்.

### கட்டுப்பாடுகளை எவ்வாறு நடைமுறைப்படுத்துவது?

1.நாம் நமது குழந்தைகளுக்கு கட்டுப்பாடுகளைப் பழக்குவதற்கு முன்பு நாம் அதற்குத் தகுதியானவர்களாக நம்மைச் செம்மைப்படுத்திக் கொள்ள வேண்டும். உணர்ச்சிகளுக்கு அடிமையாகிக் கோபப்பட்டு கத்திக் குழறி அடித்துத் திட்டி நம் பிள்ளைகளுக்கு நல்ல பழக்கங்களைப் பழக்கலாம் என நினைப்பது தவறு. அடிப்பதனால் பயத்தை உண்டாக்க லாம். ஆனால் மரியாதையை உண்டாக்க முடியாது. நாம் அடித்தும் கத்தியும் சொல்லும் பொழுதும் அவர்களது மூளையின் செயல்பாடு நிறுத்தப்பட்டுப் பயம் முன்வந்து நிற்கின்றது. இந்த நேரத்தில் பிரச்சனை பற்றிய புரிதல் மூளைக்குப் போவது தடைப்பட்டுப் புரிதல் இல்லாது போகின்றது. ஆதலினால் பெரியவர்கள் நிதானமாகவும் அன்பாகவும் தெளிவாகவும் பிரச்சினையைக் கையாள வேண்டும். குழந்தைகளுக்குப் புரியக்கூடிய வகையில் கதைக்க வேண்டும்.

2.கட்டுப்பாடுகளைப் பழக்குவது என்பது தண்டனைகளைக் கொடுப்பது எனக் குழந்தைகள் தப்பாகப் புரிந்து கொள்ளாமல் இருக்க வேண்டும்.

3.இல்லை என்ற சொல்லுக்கு இல்லை என்பதே அர்த்தம் எனப்

பிள்ளைகள் புரிந்து கொள்ள வேண்டும். உதாரணமாகத் தொலை பேசியைப் பார்த்தபடி சாப்பிடுவது தப்பு என்றால் அதைத் திரும்பத் திரும்ப நடைமுறைப் படுத்த வேண்டும். மாறாகக் கொடுத்தோம் என்றால் நேற்று இல்லை என்று சொன்ன அம்மா இன்று தருகின்றார் எனவே நான் அம்மாவை இருத்தி எழுப்பலாம் எனக் குழந்தை நினைக்கலாம். இந்த இடத்தில் தாயானவள் தெளிவாக இருப்பது மிக மிக அவசியம். மேலும் பெற்றவர்களே பெரியவர்கள் என்பதும் பிள்ளைகளை வழிநடத்தும் உரிமை அவர்களுக்கு உண்டு என்பதையும் குழந்தைக்கு நாம் புரியவைப்பது அவசியமாகும்.

நமது சொந்தப் பிரச்சினைகள் வேலைப்பழு களைப்புப் போன்றவற்றால் நாமும் போராடச் சத்தியற்று நமது கட்டுப்பாடுகளைத் தளர்த்திவிடுகின்றோம். இதனால் குழந்தைகளுக்குக் கட்டுப்பாடுகளின் அர்த்தம் புரியாது போய்விடுகின்றது. தொடர்ந்து இல்லை என்றால் இல்லை என்பதே அர்த்தம் எனப் பிள்ளைகளுக்குப் புரிய வைக்க வேண்டும்.

4.கட்டுப்பாடுகளைக் கடைப்பிடிப்பதில் குழந்தைகளுக்கு மட்டும் பங்கு இல்லை. அது பெரியவர்களுக்கும் உரியது என்பதை நாம் மறந்து விடக்கூடாது. தொலைபேசியைப் பார்த்தபடி சாப்பிடுவது தப்பு எனப் பிள்ளைக்குக் கூறிவிட்டு அப்பா அம்மா தொலைபேசியைப் பார்த்தபடி சாப்பிட்டால் அது எந்த விதத்திலும் நியாயமாகப் படமாட்டாது. பெற்றவர்கள் பிள்ளைகளுக்கு முன்மாதிரியாக நடக்கவேண்டும். பொய் சொல்லப்படாது என நாம் பிள்ளைகளுக்குச் சொல்கின்றோம். ஆனால் அன்றாட வாழ்வில் நாம் எதற்காவது பொய் சொல்வதைக் குழந்தைகள் அறிந்தால்

நாம் பொய் சொல்வது தப்பு எனக் கூறிய அறமானது பொய்த்துப் போகின்றது. மீண்டும் ஒரு முறை பிள்ளைகளிடம் அதை நாம் சொல்லும் பொழுது அவர்கள் அதைச் செவிமடுக்காது போவார்கள்.

நம் கண்களுக்குப் புலப்படாத ஆனாலும் எப்பொழுதும் நம் அருகிலேயே இருக்கும் ஒரு உயிருள்ள புகைப்படக் கருவியே நமது குழந்தைகள். இக்கருத்தை நாம் எப்பொழுதும் மனத்தில் வைத்துக் கொள்ள வேண்டும்.

5.கட்டுப்பாடுகளை விதிப்பது என்பது தண்டனை கொடுப்பது என எம் மனதில் ஒரு நினைப்புண்டு. அப்படியல்ல மாறாக கட்டுப்பாடு களினால் மகிழ்ச்சியும் அன்பும் பெருகவேண்டும்.உதாரணமாக எவரும்

கெட்ட வார்த்தையால் திட்டுவது இல்லை என்ற கட்டுப்பாடு உள்ள ஒரு வீட்டுப்பிள்ளை வேறு ஒரு இடத்தில் ஒருவர் மற்றவரைத் திட்டுவதைக் கண்டால் அடடா நமது வீட்டில் யாரும் என்னை இப்படித் திட்டவில்லையே நான் கொடுத்து வைத்தவன் என நினைத்து மகிழும்.

விளையாடி முடிந்தபின்பு தத்தமது விளையாட்டுச் சாமான்களைத் தாமே ஒதுக்கி வைக்கும் பழக்கம் உள்ள வீடுகளில் அக் குழந்தைகள் தமது விளையாட்டுச் சாமான்கள் மீது மரியாதையும் பொறுப்பும் மிக்கவர்களாக இருப்பார்கள். அக் குழந்தைகளுக்கு ஒரு விளையாட்டுப் பொருளை ஒருவர் பரிசளித்தால் மிகவும் நன்றியுடனும் அன்புடனும் பரிசு கொடுத்தவரிடம் நடந்து கொள்வார்கள்.

6.பிள்ளைகள் தப்புச் செய்தால் தண்டனை கொடுக்கின்றோம். அவர்கள் நல்லது செய்தால் புகழ்ந்து பரிசு கொடுக்கின்றோம்.இதைவிட முக்கியமான விடயம் என்னவென்றால் ஒரு முறை பிள்ளை தப்புச் செய்தால் அது ஏன் தப்பு என்பதையும் அதனால் உண்டாகும் விளைவுகளைப் பற்றியும் பிள்ளைகளுக்குப் புரிய வைக்க வேண்டும்.

7.சில வேளைகளில் பிள்ளைகள் விளையாடும் பொழுது ஒருவருக்கு ஒருவர் அடிப்பார்கள் அல்லது தள்ளிவிடுவார்கள். பொது வாகப் பெண்பிள்ளைகளைவிட ஆண்பிள்ளைகளே அடிபடுவது கூடுத லாக இருக்கும். உணர்ச்சித் தூண்டுதலுக்குக் காரணமான அமிக்டாலா என்னும் மூளைப்பகுதி பெண்களைவிட ஆண்களிடம் அதிகம் உள்ளது. அதனால் ஆண்பிள்ளைகள் கோபப்பட்டு அடிபடுவதும் கூடுதலாக உள்ளது.

அடிக்கடி மற்றவர்களை அடிக்கும் குழந்தைக்கு அது தப்பு என அருகில் சென்று கண்டிப்பாகச் சொல்லலாம். இது முதலாவது படி.

பிள்ளை நமது சொல்லுக்குச் செவிமடுக்காது மீண்டும் மீண்டும் அடிபடலாம். இப்பெழுது அக் குழந்தைக்கு ஒரு தண்டனை கொடுக்க லாம். அதாவது இத்தவறை நிறுத்தும்வரை நீ இந்த இடத்தை விட்டு எங்கும் நகர முடியாது எனக் கூறிப் பிள்ளையை ஒரு குறிப்பிட்ட இடத்தில் அமர வைக்கலாம். எவ்வளவு நேரம் ஆனாலும் தான் செய்தது தப்பு எனப் பிள்ளை உணரும் வரை அந்த இடத்தைவிட்டுப் பிள்ளையை நகரவிடப் படாது. இந்த நேரத்துள் பிள்ளை தனது தவறை உணர்ந்து பெரியவர் களிடம் வந்து மன்னிப்புக் கேட்கலாம். பெரியவர்கள் உன்னிடம் அடி வேண்டிய குழந்தையிடமும் நீ மன்னிப்புக் கேட்க வேண்டும் எனக் கூற வேண்டும். பின்பு இருவரையும் ஒற்றுமையாக விளையாட அனுப்பலாம்.

மன்னிப்புக் கேட்கும் பிள்ளையை அரவணைத்து முத்தமிட்டு மீண்டும் சமாதானம் ஆக்கவேண்டும். கண்டிப்பு எவ்வளவு முக்கியமோ அதேயளவு அரவணைப்பும் அக்கறையும் இருப்பது அவசியமாகும். கீழைத் தேயக் கலாசாரத்தில் அடிவேண்டி வளர்ந்த பிள்ளைகள் நல்லவர்களாக வளர்வதற்கு அடியின் பின் அவர்களுக்குக் கிடைக்கும் அரவணைப்பே காரணமாகலாம். இல்லை எனில் தண்டனையினால் தனித்து விடப்படும் குழந்தைகள் முன்னேற்றம் அடைய வாய்ப்பு இல்லை.

கட்டுப்பாடு விதிப்பதில் பெரியவர்கள் சிறியவர்களுக்கிடை யிலான கருத்துப் பரிமாற்றம் மரியாதை கொடுப்பதாகவும் பெறுவதாகவும் அமைய வேண்டியது அவசியமாகும். தமது உணர்வுகளுக்குப் பெற்றவர்கள் மதிப்புத் தருகிறார்கள் என்பதைக் குழந்தை உணரும் பொழுது அது தனது தவறையும் உணரும் தன்மையைப் பெறுகின்றது. கூடவே தண்டித்தாலும் கண்டித்தாலும் தன்னை நல்வழிப்படுத்தத் தனது பெற்றவர்கள் உள்ளார்கள் என்ற பாதுகாப்பு உணர்வு அவர்களிடம் உருவாகின்றது.இப்படிப் பட்ட சூழலில் வளரும் பெழுது குழந்தைக்குத் தன்னம்பிக்கை வளர்கின்றது. தன்னம்பிக்கை உடைய பிள்ளை பிறரிடமும் நம்பிக்கையுடனும் அன்புடனும் பழகி நல்ல சமுதாயத்தை உருவாக்குகின்றது.

8.சில வேளைகளில் நாம் நமது குழந்தைகள் தப்புச் செய்யாது இருந்தாலும் அதைப் புரியாது அவர்களைத் தண்டித்துவிடுவதுண்டு.

அண்ணண் தம்பி அக்கா தங்கைச் சண்டைகளில் பெரும்பாலும் மூத்த பிள்ளையான அண்ணணை அல்லது அக்காவை நாம் பொறுப்பாக இருக்கவேண்டியது நீயல்லவா எனக் கூறித் திட்டுவோம். ஆனால் அது தவறு என எமக்குத் தெரிந்தவுடன் பிள்ளைகளிடம் நாமே மன்னிப்புக் கேட்க வேண்டும். மனிதர்கள் என்றால் பிழைவிடுவது இயல்பு என்றும் அதற்காக வருந்தி மன்னிப்புக் கேட்பதே முறை என்றும் நாம் நமது குழந்தைகளுக்கு முன்மாதிரியாக இருந்து காட்ட வேண்டும்.

9.பிள்ளைகளின் குழப்படிகள் பற்றிய புரிதல் பெற்றவர்களுக்கு இருப்பது அவசியம். சில வேளைகளில் இரண்டு வயதுக் குழந்தை தான் தண்ணீர் குடிக்கும் கப்பில் உள்ள தண்ணீரை ஆட்டி ஆட்டி ஊற்றி விளையாடும். இங்கே குழந்தை இதைக் குழப்படி என நினைத்துச் செய்வதில்லை. கப்பில் உள்ள நீரானது ஆட்டுவதனால் என்ன ஆகின்றது எனப் பரிசோதனை செய்கின்றது. இப்படிப்பட்ட குறும்பு வேலைகள் மூலம் தனது மூளை நரம்புகளுக்கு வேலை கொடுக்கின்றது. இவற்றைப்

பெற்றவர்கள் புரிந்து கொண்டு நடக்க வேண்டும். சில குழந்தைகள் சுவரில் கிறுக்குவார்கள்.அவர்களிடம் கிறுக்குவதற்குச் சுவர் வேண்டாம். வா உனக்கு இதற்கு வேறு பேப்பர் தருகிறேன் எனக் கூறலாம்.

10.கட்டுப்பாடுகள் என்பன கவலையைக் கொடுப்பனவாக அல்லாது மகிழ்ச்சியைக் கொடுப்பனவாகவே நமது பாரம்பரியத்தில் வந்துள்ளன. புலன் அடக்கம், விரதம் இருப்பது என்பன எல்லாமும் இவ்வாறானவையே. டென்மார்க் மக்கள் வெள்ளிக்கிழமைகளில் மட்டுமே பெரும்பாலான வீடுகளில் பிள்ளைகளுக்கு இனிப்புக் கொடுப்பார்கள். இதுவும் வெள்ளிகளில் மாமிசம் உண்ணாது இருப்பதைப் போன்ற ஒரு நிகழ்வே. பெரிய வெள்ளிக் காலங்களில் கிறிஸ்தவர்கள் விரதமிருப் பார்கள். ரம்ழான் காலங்களில் முஸ்லீம் மக்கள் விரதம் இருப்பார்கள். கந்தசஷ்டி நவராத்திரி ஏகாதசி தினங்களில் இந்துக்கள் விரதம் இருப் பார்கள். இவை அனைத்தும் புலன் அடக்கத்தையும் அதனால் வரும் மகிழ்வையும் நமக்குத் தருகின்றன. திருமணம் என்பதும் ஒருவனுக்கு ஒருத்தி என்பதும் ஒரு கட்டுப்பாட்டைக் குறித்த சடங்காக உள்ளது. இதை நாம் மகிழ்வாக ஏற்றுக் கொண்டாடுகின்றோம். அவ்வாறே எல்லைகளும் கட்டுப்பாடுகளும் மனித வாழ்விலும் குழந்தை வளர்ப்பிலும் பிரிக்க முடியாத அங்கங்களாக உள்ளன.

## அத்தியாயம் - 6

# சொன்னது நான் தானா?

இந்த நிகழ்வு டென்மார்க்கில் நடந்து சுமார் இருபது வருடங்களுக்கு மேலாக இருக்கும் என நினைக்கின்றேன். ஆனாலும் அந்த நிகழ்வு என் மனதில் ஏற்படுத்திய தாக்கம் இன்று வரை வலியைத் தருவதாகவே இருக்கின்றது. அது ஒரு ஓய்வு நேரப்பள்ளி. ப ாடசாலை முடிந்த பின்பு பெற்றவர்கள் வந்து பிள்ளைகளைக் கூட்டிப் போகும் வரை பிள்ளைகள் விளையாடி ஓய்வு எடுக்கும் ஒரு இல்லம். நான் அங்கு ஆசிரியராகப் பணிபுரிந்த காலம் அது. பிள்ளைகளுடன் சேர்ந்து விளையாடுவது சமைப்பது கைவேலைகள் செய்வது என எல்லோரும் மகிழ்வாக இருப்போம்.

அங்கு சங்கர் என்ற இரண்டாம் வகுப்பில் படித்த பிள்ளை அடிக்கடி வயிற்றுவலி எனக் கூறிச் சாப்பிடாமல் இருந்தான். அன்று எல்லாப் பெற்றோரும் வந்து தத்தமது பிள்ளைகளைக் கூட்டிச் சென்றபடி இருந்தனர். நேரம் ஐந்து மணியான பொழுது பெரிதாகச் சத்தம் போட்டு அழத்தொடங்கிவிட்டான். பிள்ளைக்கு வயிற்று வலியாக இருக்கலாம் என நினைத்து அவனது பெற்றோர்களுக்குப் போன் எடுக்கப் போனேன்.

“அம்மா அப்பாக்குப் போன் போட வேண்டாம் கலா என்றான்” (பெரியவரானாலும் மரியாதையாகப் பெயர் சொல்லிக் கூப்பிடுவது இங்கு இயல்பு)

“ஏன் அப்படிக் கூறுகின்றாய். உன்னைப் பற்றிய தகவலை அவர்களுக்கு அறிவிக்க வேண்டும். அறிவிக்காது விட்டால் அது சட்டப்படி குற்றம் சங்கர்” என நான் கூறினேன்.

“நீங்கள் போன் அடித்தாலும் யாரும் எடுக்க மாட்டார்கள்” எனக் கூறி அழுதான்.

நான் அவனை அணைத்தபடி “ஏன் இப்படிச் சொல்கின்றாய்” எனக் கேட்டேன்.

அப்பாவும் அம்மாவும் அடிக்கடி சண்டை போடுவார்கள். அம்மா தினமும் அழுவா. நான் நேற்று வீட்டுப் பாடம் செய்யவில்லை. படிக்கவோ பள்ளிக்குப் போகவோ விருப்பமில்லை என்று அம்மாவிடம் சொன்னேன். அம்மா மீண்டும் அழுதார். தன்ர தலையில தானே அடித்தார்.

நீ படிக்காமல் மொக்குப் பிள்ளையாகப் போ. ஆனால் நீ பள்ளியால வீட்ட வரும் பொழுது நான் வீட்ட இருக்கமாட்டன். நான் செத்துப் போவன். அல்லது காணாமல் போய்விடுவன் எண்டு சொன்னவா. எனக்கு வீட்ட போகப் பயமாக இருக்குது. பாருங்கோ அப்பா அம்மா இதுவரை என்னைக் கூப்பிட வரயில்லையே." எனக் கூறி சங்கர் அழுதான்.

நாங்கள் கதைத்துக் கொண்டிருந்த பொழுது சங்கரின் அப்பாவும் அம்மாவும் மகனைக் கூட்டிச் செல்வதற்காக வந்தனர். சங்கர் தாயாரை இறுகக்கட்டிப் பிடித்தபடி மீண்டும் அழுதான். நடந்த நிகழ்வுகளை நான் விளக்கிக் கூறினேன். தாயாரின் கண்களும் பணித்தன.

"அடக் கடவுளே! நான் ஏதோ கோபத்தில் யோசிக்காமல் கதைத்து விட்டேன். என்ர பிள்ளையை விட்டுவிட்டு நான் எங்க போகப் போறன். அப்பிடிச் செத்து நான் சொர்க்கம் போனாலும் என்ர மனுசனும் பிள்ளை யும் இல்லாத இடம் எனக்குச் சொர்க்கமாகாதே." எனக் கூறி அழுதார்.

"இதுக்குத் தான் பிள்ளையிடம் அடிக்கடி கத்திக் கதைக்காதே எண்டு நான் அடிக்கடி சொல்வது. இப்ப பார் அது எங்க வந்து நிக்குது" என தகப்பனார் தாயார் மீது குற்றப் பத்திரிகை வாசித்தார்.

அவர்களை வழியனுப்பிய பின்பு அன்று இருந்த ஆசிரியர்களின் கூட்டத்தில் இந்தச் சம்பவத்தை நான் கூறினேன். இந்த நிகழ்வைப் பதிவு செய்ய வேண்டியது எனது கடமையாகும். பதிவு செய்யாது விட்டால் அது சட்டப்படி குற்றமாகும். இதன் மூலம் சங்கரின் வளர்ச்சியில் அரசு அக்கறை கொள்ளத் தொடங்குகின்றது. குடும்பத்தில் அவனுக்குக் கிடைக்கும் அன்பும் அரவணைப்பும் நன்றாக உள்ளதா என்பதை கல்விக் கூடமும் அரசாங்கமும் கவனிக் தொடங்குகின்றன.

தொடர்ந்து வரும் நாட்களில் அவனது நடவடிக்கைகளை ஆசிரியர்கள் கவனித்து வருவார்கள். வீட்டில் பெற்றவரின் சண்டை அவனைத் தொடர்ந்து பாதிக்குமிடத்து இந்தப் பிரச்சனை நகரசபைக்கு அறிவிக்கப்படும். அங்குள்ள ஆலோசனைக் குழு பெற்றவர்களை

அழைத்து விசாரிக்கும். பெற்றவர்களுக்கு உளவியல் ரீதியாக ஆலோசனைகள் கொடுக்கப்படும். இந்த நிலையில் அரசாங்கத்தின் உதவியைப் பெற்றுப் பெற்றவரும் குழந்தையும் நலம் பெறலாம்.

அவ்வாறு அல்லாது குடும்பத்தில் பெற்றாரிடம் வன்முறை போதைப் பழக்கம் மனநோய் என்பன இருந்தால் குழந்தையின் வளர்ச்சியையும் பாதுகாப்பையும் நோக்கமாகக் கொண்டு அரசாங்கம் பெற்றவரிடம் இருந்து குழந்தையைச் சட்டப்படி பிரித்து எடுத்து வேறு இடத்தில் வளர வைக்கும். இப்படியான நடவடிக்கையின் மூலம் அரசானது உங்கள் குழந்தைகள் உங்கள் குழந்தைகள் மட்டும் அல்ல அவர்கள் சமுதாயத்தின் விலைமதிக்க முடியாத சொத்துக்கள் என்பதைப் பறைசாற்றுகின்றது.

மேலே குறிப்பிடப்பட்ட நிகழ்வின் மூலம் நாம் ஒரு விடயத்தை உணர முடிகின்றது. சங்கரின் பெற்றோர் சங்கர் மீது மிகுந்த அன்பும் அக்கறையும் கொண்ட பெற்றவர்களாகவே இருக்கின்றார்கள். ஆனால் குடும்பத்தில் அடிக்கடி சண்டை பிடிக்கின்றனர். அதன் தாக்கத்தால் தாயார் மனவழுத்தத்துக்கு  ஆளாகித் தான் என்ன சொல்கிறேன் என்ற விழிப்புணர்வு இல்லாது அந்தக் கடுமையான கவலையான வசனத்தைக் கூறியிருக்கலாம். அல்லது எந்த ஒரு மனவழுத்தமும் இல்லாது சங்கரை வெருட்டிப் படிப்பிக்க அந்த வசனத்தை ஒரு ஆயுதமாகப் பயன்படுத்தி யிருக்கலாம். எது எப்படியோ சங்கர் இதனால் பாதிக்கப் பட்டுள்ளான்.

பெற்றவர்கள் சிலவேளை நினைப்பது ஒன்றாகவும் சொல்வது வேறு ஒன்றாகவும் அமைந்து விடுவதுண்டு. இப்படிப்பட்ட செயற்பாடு களுக்கு  நம் ஆழ்மனதில் பதிந்திருந்து நம்மையும் அறியாமல் நம்மை ஆட்டிப்படைக்கும் அந்த சக்தி என்ன? எதற்காக நாம் இப்படி நடந்து கொள்கின்றோம் என்பதைத் தெளிவாகப் புரிந்து கொள்ள இமேக்கோ திரப்பி (IMAGO) என்ற ஒரு சிகிச்சை முறை பற்றி அறிந்து கொள்வது மிக மிக அவசியமாகும்.

Harville Hendrix ,Helen Lakelly Hunt என்ற அமெரிக்கத் தம்பதி களினால் எண்பதாம் ஆண்டு காலப்பகுதியில் உருவாக்கப்பட்ட ஒரு குடும்பநலச் சிகிச்சை முறையே இமேக்கோ திரப்பியாகும். ஐ அயபழ என்பது ஒரு இத்தாலியச் சொல். அதன் அர்த்தம் படம் என்பதாகும். நமது ஆழ்மனதில் நம் சிறுபராயத்தில் நடந்த நிகழ்வுகள் காட்சிப் படங்களாகப் பதிந்துள்ளன. நம்மைச் சீராட்டி வளர்த்த பெற்றோர் உறவினர்கள்

அவர்களிடமிருந்து கிடைத்த அனுபவங்கள் உணர்வுகள் என்பவற்றை நாம் நமது அடிமனதில் பதிவு செய்து வைத்துள்ளோம். இத்தகைய பழைய பதிவுகள் தற்போது நாம் வாழும் வாழ்வில் எத்தகைய தாக்கங்களை உண்டாக்குகின்றன என்பதே இவர்களது ஆய்வின் கண்டுபிடிப்பாக அமைந்துள்ளது.விழிப்புணர்வுடைய குடும்பம் விழிப்புணர்வுடைய குழந்தை வளர்ப்பு என்பன இவர்களது ஆய்வுக் களங்களாக அமைந்தன. இத் தம்பதிகள் இருவரும் உளவியலாளர்களாகப் பணிபுரிந்தனர். இதனால் களப்பணி செய்வதற்கும் ஆய்வுகள் செய்வதற்கும் பல மனிதர்களின் வாழ்க்கைச் சிக்கல்களைப் பரிசோதனைக்கு எடுத்துக் கொள்ள இவர்களுக்கு இலகுவாக இருந்தது.

இயற்கையின் விதிகளை இவர்கள் கவனத்தில் கொண்டு அதனைப் பின்வருமாறு GIVING THE LOVE THAT HEALS என்ற தமது நூலில் குறிப்பிடுகின்றனர்.

உலகத்தில் படைக்கப்பட்ட உயிரினங்கள் ஒவ்வொன்றும் வெவ்வேறு வடிவிலும் அமைப்பிலும் படைக்கப்பட்டுள்ளன. அதுபடியால் தான் சிங்கம் வேறு புலி வேறு வரிக்குதிரை வேறு மனிதர் வேறு என எம்மால் பகுத்தறிய முடிகின்றது. உதாரணமாக வரிக்குதிரைகள் வரிக்குதிரைகள்தான் என்று கண்டு கொள்ளப்படுவதற்கு இந்த வேறுபாடுகள் காரணமாகின்றன.

ஆனாலும் ஒவ்வொரு தனிப்பட்ட வரிக்குதிரைகளும் தத்தமது தனிப்பட்ட பண்புகளில் ஏதோ ஒரு வேறுபாடு கொண்டவையாகவே பிறந்திருக்கின்றன. சாதாரணமாகப் பார்க்கும் போது நமது கண்களுக்கு இத்தகைய வேறுபாடு தெரிவதில்லை.

ஆனால் கூட்டமாக வரிக்குதிரைகள் நிற்கும் போது ஒரு அம்மா வரிக்குதிரையால் தனது குட்டியைக் கண்டு கொள்ள முடிகின்றது. அவ்வாறே குட்டி வரிக்குதிரையும் தனது அம்மா யார் என்று கண்டுகொள்கின்றது. இவ்வாறாகவே மனிதர்களும் தமது குழந்தைளிடம் ஏதோ ஒருவித படிமங்களையும் தம் இயல்புகளையும் காலங்காலமாகக் கையளித்து வருகின்றனர். அதனால் நாம் எல்லோரும் மனிதர்களாக இருந்தாலும் நமது பெற்றவர்களிடம் இருந்து பெற்றுக் கொண்ட இயல்புகளின் படியே உலகத்தைப் பார்க்கின்றோம்.இதனால்தான் நாம் எவ்வாறு வளர்க்கப்பட்டோமோ அவ்வாறே நமது குழந்தைகளையும் வளர்க்கின்றோம்.

நாம் ஒருவரை வாழ்க்கைத் துணையாகத் தெரிவு செய்யும் பொழுது ஏதோ ஒரு விதத்தில் நமது துணையிடம் நமது பெற்றவர்களின் பண்புகள் இருப்பதனால் தான் நம்மையும் அறியாமல் நாம் அவர்களிடம் ஈர்ப்புக் கொள்கின்றோம் என இவர்களது ஆய்வில் இவர்கள் எடுத்துரைக்கின்றனர். பெரும்பாலும் ஆரம்பத்தில் இருந்த அந்த ஈர்ப்பு நாளாக நாளாகக் குறையத் தொடங்குகின்றது. உதாரணமாக மனைவி தன் தாயைப் போல இருப்பாள் என நினைக்கும் கணவன் அவள் அவ்வாறு இல்லை என்பதை உணரத் தொடங்கும் போது எதிர்பார்ப்புக்கள் ஏமாற்றங்களாக மாறுகின்றன. அவ்வாறே தனது கணவன் தனது தந்தையைப் போல என நினைத்த மனைவியும் அவர் அவ்வாறு இல்லை என அறிந்ததும் ஏமாற்றமடைகின்றாள்.

ஆனால் கணவன் மனைவி இருவருக்குமே தாம் அப்படி நினைத்துத் தான் சண்டைபிடிக்கின்றோம் என்ற விழிப்புணர்வு இருக்காது. காரணம் இத்தகைய நினைப்புக்கள் அவர்களது ஆழ்மனதின் ஆதிக்க லீலைகளே. "எங்கட குடும்பத்தில அப்படிச் செய்வார்கள். உங்கட குடும்பத்தில இப்படிச் செய்வார்கள்" எனப் பிரித்துப் பார்க்கத் தொடங்கு வார்கள். கருத்து வேறுபாடுகளும் எதிர்பார்ப்புக்களும் கூடிக் கும்மாள மடித்துக் குடும்பத்தில் குழப்பதில் பகையையும் வெறுப்பையும் கொண்டு வருகின்றன.

மேலும் நம் ஆழ்மனதில் பதிவாகியுள்ள எமது குழந்தைப் பருவ நிராசைகள் நம்மையும் அறியாது நம் குழந்தைகள் மீது ஆதிக்கம் செலுத்துகின்றன. நம்மை வளர்த்தெடுத்த நம் பெற்றவர்களின் எதிர்பார்புக்களை நம்மால் நிறைவேற்ற முடியாது போகலாம். அல்லது நமது சொந்த ஆசைகள் நிராசைகளாகப் போயிருக்கலாம்.அத்தனை நிராசைகளும் நம் ஆழ்மனதில் குடிகொண்டிருந்து நமது பிள்ளைகளை நம்மையும் அறியாது ஆட்டிப்படைக்கின்றன. இத்தகைய சூழலில் நாம் நமது குழந்தைகளை நாமாகவே நினைக்கின்றோம்.நான் வேறு என் குழந்தை வேறு எனது ஆசைகள் நிராசைகள் என்பன வேறு வேறு என நினைக்க மறந்து பாசம் என்ற பெயரில் அவர்களைக் கட்டிப் போடு கின்றோம். சில வேளை இத்தகைய ஆசைகள் மூலம் பிள்ளைகளுக்கு நல்ல படிப்பை நல்ல எதிர்காலத்தை நாம் கொடுக்க முடியும்.

ஆனால் அத்தகைய ஆசைகளைப் பிள்ளைகளினால் நிறை வேற்ற முடியாது போனால் நம் பிள்ளைகள் மீது நம்மையும் அறியாது

கோபப்படுகின்றோம். உதாரணமாக ஒவ்வொரு குழந்தையும் ஒவ்வொரு தனித்தன்மையுடனும் தனிப்பட்ட திறமைகளுடனுமே பிறக்கின்றனர். சில குழந்தைகள் கணிதத் திறமை மிக்கவராக இருப்பார்கள். சில இசையில் வல்லவர்களாகவும் சிலர் மொழித்திறன் மிக்கவர்களாகவும் வேறு சிலர் விளையாட்டு வீரர்களாகவும் இருப்பார்கள். ஆனால் நாம் எதிர்பார்க்கும் திறமை அவர்களிடம் குறைவாக இருந்தால் நம்மால் அந்த ஏமாற்றத்தைத் தாங்கமுடியாது துன்பப் படுகின்றோம். உதாரணமாக எனது அப்பா தன் இளம் பராயத்தில் தனது தாயை இழந்தவர். தாயின் பாசத்தையும் அந்த இழப்பையும் நான் பிறந்தபின்பு என்மீது வைத்து என்னை மிகவும் செல்ல மாக வளர்த்தார். அவர் தன் இளவயதில் அவரது தாய் மாமன் டாக்டர் சோமசுந்தரம் என்பவருடன் சிங்கப்பூரில் இருந்தார். அவரது மாமா அந்தக் காலத்தில் மிகவும் பிரபலமான சத்திர சிகிச்சைவல்லுனராகப் பிரசித்தி பெற்றிருந்தார். அப்பாவால் அப்போது டாக்டராக முடியவில்லை. அங்கு அவர் ஆசிரியராகவே பணிபுரிய முடிந்தது.

தாய் மாமன் மீது அன்பு கொண்ட அப்பா மனதில் தனக்குப் பிறக்கும் குழந்தையும் அவரைப் போல ஒரு பிரபல டாக்டராக வேண்டும் என்ற எண்ணம் விதைவிடத் தொடங்கியது. மாமனார் இறந்தபின்பு அவரது கோட்டை நினைவுச் சின்னமாகச் சிங்கப்பூரில் இருந்து கொண்டு வந்து பத்திரமாக இலங்கையில் வைத்திருந்தார்.

அவர் அம்மாவைத் திருமணம் செய்து நான் பிறந்து வளரும் வரை அக் கோட்டு அவரது பழைய ரங்குப்பெட்டியில் இருந்தது. நானும் தம்பிமாரும் வளர்ந்து விளையாட்டு வயதில் வந்த பொழுது அக் கோட்டை எடுத்து எமக்குப் போட்டு விளையாட வைப்பார். தனது தாய்மாமனின் பிரிவை ஈடுகட்டவும் தனது நிராசையை ஆசையாக்கி கனவு கண்டு மகிழ்ந்தார். என்னால் கணக்குப் பாடத்தில் சிறந்து விளங்கவோ அவர் விரும்பியபடி டாக்டராகவோ முடியவில்லை. எனக்கு இலக்கியம் பிடித்தது. அதுவும் கைவந்தது. படித்தேன். ஆனால் நான் அவரது விருப்பப்படி படிக்க முடியாது போனது அவரை மிகுந்த மனவழுத்தத்துக்கு ஆளாக்கியது. பரீட்சைப் பெறுவேறுகள் வரும் காலங்களில் அவர் தன்னையே மறப்பதுண்டு. செருப்புப் போட மறந்து ஆபீசுக்கு வெறுங்காலுடன் செல்வார். மிகவும் பலவீனமாக இருப்பார். பயத்தினால் அடிக்கடி வயிற்றுப் போக்கு வந்து சிரமப்படுவார். இரத்த அழுத்தம் கூடி அவதிப்படுவார்.ஆனாலும் தன் முயற்சியில் சற்றும் மனம் தளராத விக்கிரமாதித்தன் மீண்டும் முயற்சி செய்த கதை போன்று அப்பாவும் தன்

பிள்ளையை டாக்டராக்க வேண்டும் என்ற முயற்சியில் இறங்கி என் சின்னத் தம்பியை டாக்டராக்கினார்.இந்த விடயத்தில் என் அப்பாவின் சிறு வயது ஆசையானது ஒரு நல்ல நிலையை எட்டிப்பிடித்தது.ஆனாலும் ஒரு சங்கீத வித்துவான் இசைமீது நாட்டமில்லாத அல்லது பாடவே வராத தன் பிள்ளையைப் பெரிய பாடகனாக்க வேண்டும் என முயற்சி செய்து தோற்றுப் போகும் பொழுது அந்த எதிர்பார்ப்பு மறைமுகமான எதிர்விளைவுகளை உண்டாக்கலாம்.

மேற்கூறப்பட்ட குணங்களுடைய பெற்றவர்கள் தாம் வேறு தம் பிள்ளை வேறு என்ற நிலைப்பாட்டை அடையாதவர்கள். இவர்களது மனதில் பிள்ளைகளுக்கு எத்தனை வயதானாலும் அவர்கள் தாம் தோளில் சுமந்து கொண்டுள்ள பிள்ளைகள் என்ற நினைப்பு மட்டுமே மேல் எழுந்து இருக்கும். இந்த நிலைப்பாட்டை ஆரோக்கியமற்ற கூட்டு வாழ்வு நிலை எனக் கூறுவார்கள். இங்கே பிரித்துப் பார்க்க முடியாத அதீத பாசப்பிணைப்பை நாம் காணமுடியும்.

இராமன் வனவாசம் போன துயரத்தில் தசரதர் இறந்து விடுகின்றார். பிள்ளைப் பாசம் அந்தளவு வலிமைமிக்கது. இப்படிப் பட்ட குறுட்டுப் பிள்ளைப் பாசம் தான் கைகேகிக்குப் பரதன் மீது இருந்துள்ளது. தன் பிள்ளைக்கே சிம்மாசனம் கிடைக்க வேண்டும் என்ற நினைப்பு அவள் மதியை மயக்கிவிட்டது. இதே பாசச் சிக்கலினால் தான் திருதராஷ்டிரனும் வாழ்ந்தான். குருஷேத்திர யுத்தத்திற்கும் இந்த அதீத பிள்ளைப்பாசமே காரணமாக இருந்துள்ளது. பெற்றவர்கள் கையாளும் ஒவ்வொரு செயலுக்கும் பின்னாலே அவர்களது அடிமனதில் அவர்களையும் அறி யாது அவர்களை ஆட்டிப் படைக்கும் ஆழ்மனது சிம்மாசனமிட்டு அமர்ந் துள்ளது. கண்ணுக்குப் புலப்படாத அந்த ஆதிக்க சக்தியைக் கண்டு கொண்டு செயல்படுவதே நமக்கும் நம் குழந்தைகளுக்கும் ஆரோக்கியமானது.

இக்கட்டுரையின் ஆரம்பத்தில் குறிப்பிடப்பட்ட சங்கரின் அம்மாவின் செயல்பாடுகளுக்கும் அவரது ஆழ்மனதில் பதிந்துள்ள பயமே காரணம். என் பிள்ளை படிக்க வேண்டும் அல்லது யாரும் மதிக்க மாட்டார்கள் என்ற அவரது பெரிய பயம் கோபமாக வெளிவந்துள்ளது. சங்கரின் தாத்தா பாட்டி சங்கரின் அம்மா மீது அவரது சிறுவயதில் மிகப் பெரிய எதிர்பார்ப்புக்களை வைத்து வளர்த்துள்ளனர்.எல்லாப் பாடங் களிலும் முதல் மதிப்பெண் பெற்றால் மட்டுமே அவருக்கு வீட்டில்

மரியாதை கிடைக்கும் என்ற நிலைப்பாட்டிலே தான் அவர் வளர்க்கப் பட்டார். மேலும் தமது உறவினர்கள் மத்தியில் தனக்கும் தன் பரம்பரைக்கும் கெட்ட பெயரைச் சங்கர் கொடுத்துவிடுவானோ என்ற பயம் அவரை அன்று காலை அப்படிப் பட்ட கொடிய வார்த்தைகளைச் சொல்ல வைத்துள்ளது. பெற்றவர்களின் நடவடிக்கைகளும் அவர்கள் வாயிலிருந்து வரும் ஒவ்வொரு சொற்களும் அணுகுண்டுத் தாக்குதல் போன்று பிள்ளைகளைத் தாக்குகின்றன. இதன் மூலம் பெற்றவர்களாகிய நாம் விழிப்புணர்வுடன் நடந்து கொள்ள வேண்டியது மிக மிக இன்றியமையாத தாகும்.

# அத்தியாயம் - 7

## உறங்கியபடியே உலாவுகின்ற பெற்றோர்

நேற்று ஞாயிறு விடுமுறை. ஆனாலும் புலம்பெயர் தேசங்களில் வாழும் தமிழர்கள் தமது குழந்தைகளைத் தமிழ் படிக்கத் தமிழ்ப் பள்ளிக்கூடங்களுக்கு அனுப்புவதும் இந்த ஞாயிற்றுக் கிழமையில் தான். வேண்டா வெறுப்பாகப் பிள்ளைகள் பள்ளிக்கு வரப்படாது என்பதினால் இடையிடையே கலைநிகழ்ச்சிகள் ஏற்பாடு செய்வோம். பிள்ளைகளும் இசை நடனம் நாடகம் எனப் பல துறைகளிலும் தமது திறமைகளை வெளிப்படுத்தி மகிழ்வார்கள். நானும் ஆசிரியராகப் பணிபுரியத் தொடங்கி பத்து ஆண்டுகள் முடிந்திருந்தன.

எனது வகுப்பில் நான் அப்படி ஒரு மொழித்திறனும் கற்பனைத்திறனும் சேர்ந்த ஒரு குழந்தையைச் சந்தித்ததில்லை. ஆம் ராதா என்ற பெயர் கொண்ட அந்தக் குட்டித் தேவதையைப் பற்றியே நான் உங்களுக்குச் சொல்லப் போகின்றேன்.

ராதா மிகவும் அழகாகக் கட்டுரைகள் எழுதுவாள். கடந்த ஒரு மாதமாகப் பிள்ளைகளின் கற்பனைத் திறனை வளப்படுத்தும் நோக்கத்துடன் மாணவர்களைச் சின்னச் சின்னக் கதைகள் எழுதும்படியும் நான் கூறியிருந்தேன். அவற்றுள் ராதாவின் எழுத்துக்கள் மிகவும் அருமை யாக இருந்தன. அதனால் கலைவிழாவில் ராதா அவளது கதையைத் தத்ரூபமாக் கூற வேண்டும் என நான் கூறியிருந்தேன்.

அடுத்த கிழமை கலை விழா என்பதினால் நேற்றய தினமே ஒத்திகை பார்ப்பதற்கான கடைசி நாளாக இருந்தது. எல்லாப் பிள்ளை களும் தத்தமது திறமைகளை வெளிப்படுத்தியபடி ஆயத்தங்கள் செய்தனர். ராதா மட்டும் தான் கலைவிழாவுக்கு வரப்போவதில்லை எனக் கூறி எதிலும் பங்குபற்றாது இருந்தாள்.

“ஏன் கலைவிழாவுக்கு வரமுடியாது ராதா” என நான் அவளைக் கேட்டேன். வரப்பிடிக்கவில்லை என்றாள்.

“ஏன் பிடிக்கவில்லை”, என நானும் துருவிக்கேட்டேன்.

ராதாவின் கண்களில் கண்ணீர் வடிந்தது. அவளை என்னுடன் அணைத்து வைத்தபடி “நான் உனக்கு உதவி செய்கிறேன். என்ன காரணம் என்று மட்டும் என்னிடம் சொல்லு” என்றேன்.

என்னிடம் என் கதை இல்லையே ரீச்சர். நான் அதைக் குப்பையிலே எறிந்துவிட்டேன் என்றாள்.

“ஏன் அப்படிச் செய்தாய்?”

“கோபத்தில் செய்தேன்”

“யார் மீது கோபம் ராதா?”

“என் அப்பா மீது.”

“ஏன் கோபம் எதுக்குக் கோபம்?”

“நான் எழுதின கதை நல்லது என்டு நீங்க சொன்னீங்க ரீச்சர். என்ர அம்மாவும் நல்லது என்டு சொன்னவா. ஆனால் அப்பாவுக்குக் காட்ட வேண்டும் என எனக்கு ரெம்ப ஆசையாக இருந்தது.

அப்பா வேலையால வரும்போது களைச்சுப் போய் வருவார். அவரை ஆய்க்கினைப் படுத்தாதே என அம்மா சொல்லுவா. நான் என் கதையைக் காட்டும் போது அப்பா சொல்வார் எனக்கு இப்ப களைப்பாக இருக்குது. நாளைக்கு வாசிக்கிறேன் என்பார். நாளை நாளை என்று சொல்லி இத்தோட ஒரு மாதமாச்சு. நேற்று எங்க வீட்ட எங்கட சொந்தக் காறர் விருந்துக்கு வந்திருந்தனர். அப்பா அவர்கள் முன் என் கதையை வாசிக்கச் சொன்னார். நானும் ஆசையாக வாசித்தேன். இடையில் ஒரு போன் கோல் வர அப்பா எழும்பி வெளியே போயிட்டார். எனக்கு அழுகை அழுகையா வந்தது. ஒரு மாதிரி வாசிச்சுப் போட்டன். வெளிய போன அப்பா திரும்பி வந்தார். உன்ர மகள் நல்ல கெட்டிக்காறி என வந்தவர்கள் சொன்னார்கள். அவள் ஆரிட பரம்பரை எண்டு நினைச்சியள். வெள்ளக் காரன் காலத்திலேயே எங்கட குடும்பம்தான் ஊரிலே பெரிய படிச்ச குடும்பம்” .. எனப் பெருமையாகக் கதைச்சார். கடைசிவரை என்ர கதையை அவர் கேட்கவேயில்லை. எனக்கு ஏமாற்றமாகவும் கோபமாகவும் இருந்தது.

அப்பாக்கு விசர்பிடிச்சிட்டுது என நான் அம்மாவிடம் சொன்னேன். பளார் என அம்மா எனக்கு அடிச்சுப் போட்டா. பெரியவைக்கு மரியாதை கொடுக்க வேணும். அப்பாவை நீ அப்பிடிச் சொல்லக் கூடாது

எனத் திட்டினா. எனக்குக் வந்த கோபத்தில நான் என்ர கதையெழுதி இருந்த கொப்பியைக் குப்பைத் தொட்டியில போட்டுவிட்டேன்." எனக் கூறி ஒரு பெருமூச்சு விட்டாள் ராதா.

இவ்விடயம் தொடர்பாக நான் ராதாவின் அம்மாவிடம் கதைத்தேன். அவர் தானும் தன் கணவரும் தம் மகளின் உணர்வுகளைப் புரிந்து கொள்ளாது இருந்தது தவறு என்று கூறிக் கவலைப்பட்டார்.மேலும் தந்தையைப் பற்றி ராதா தவறாகக் கதைத்ததற்காகவே தான் ராதாவை அடித்ததாகவும் கூறினார். தான் இது தொடர்பாகத் தன் கணவருடனும் ராதாவுடனும் கதைத்து மீண்டும் ராதாவைக் கலைவிழாவில் கலந்து கொள்ள வைக்க முயற்சிப்பதாகக் கூறினார். ஆனால் அவரால் ராதாவைச் சமாதானப் படுத்தவோ அல்லது குப்பைத் தொட்டியில் போடப்பட்டுத் தொலைந்து போன ராதாவின் கதையையோ மீட்டு எடுக்க முடியவில்லை. இச் சம்பவம் ராதா மனதில் ஆறாத வடுவாகப் பதிந்து விட்டது.

## விழிப்புணர்வுடைய பெற்றவரும் விழிப்புணர்வு இல்லாத பெற்றவரும்

மனிதர்களாகிய நாம் எல்லோரும் முழு நேரமும் விழிப்புணர் வுடன் இருப்பது இல்லை. சில வேளை யோசித்துக் கதைப்போம் சில வேளை யோசியாது கதைப்போம். எவரும் எவரையும் துன்பப் படுத்த வேண்டும் என்ற நோக்கத்தில் செயற்படுவதில்லை. ஆனாலும் நம்மையும் அறியாது நமது ஆழ்மனதின் விருப்பு வெறுப்புக்கள் நம்மை ஆட்டிப் படைக்கும்போது விழிப்புணர்வு இல்லாதவர்களாகச் செயற்படுகின்றோம்.

மேற்கூறப்பட்ட ராதாவின் கதையில் அவளது பெற்றோர் இருவருமே விழிப்புணர்வு அற்றவர்களாகச் செயற்பட்டுள்ளனர். அவர்கள் தம் பிள்ளைமீது பாசம் வைத்திருந்தாலும் அதைத் தகுந்த முறையில் வெளிக்காட்டாது இருந்துள்ளனர். அவளது தாயாருக்கு பெண்பிள்ளைகள் அடக்க ஒடுக்கமாகப் பயபக்தியுடையவர்களாக இருக்க வேண்டும் என்ற நினைப்பும் அவரது சிறுவயதில் அவரது பெற்றார் அவரை எப்படி வளர்த்தனர் என்ற எண்ணமுமே மேலோங்கி இருந்துள்ளது.

விழிப்புணர்வு குறைவாக உள்ள நிலையில் இவர்கள் பிள்ளை களின் செயற்பாட்டை மட்டுமே கவணிப்பார்கள்.பிள்ளைகளின் உணர்வு களை இவர்கள் நினைத்துப் பார்க்க மாட்டார்கள். உதாரணமாகத் தெரு விலே ஒரு குழந்தை சைக்கிள் ஓடப் பழகுகின்றது என வைத்துக்

கொள்வோம். பழகும் பொழுது சைக்கிளை ஒழுங்காகத் தன் கட்டுப் பாட்டில் வைக்கத் தவறிவிடுகின்றது. சைக்கிள் அடிக்கடி தெரு ஓரத்தைத் தாண்டித் தெருவில் இறங்குகின்றது. பதட்டமும் பயமும் கூடிய நிலையில் பிள்ளையின் தகப்பனார் உரத்துக் கத்துகின்றார்.

"நீ இப்படிச் சைக்கிள் ஓடத் தெரியாமல் ஓடினால் உன் சைக்கிளைப் பறித்துக் கொண்டு போய் வைத்துவிடுவேன். இனி நீ சைக்கிளே ஓட முடியாது. உனக்கு இதெல்லாம் சரிப்பட்டு வராது"

அப்பாவின் அதீத கோபம் நிறைந்த இந்த வார்த்தைகள் குழந்தை மனதில் கத்தி ஏற்றப்பட்டது போன்ற ஒரு தாக்கத்தை உண்டாக்கி விடுகின்றது. இந்த அப்பாவானவர் தன் பிள்ளை சைக்கிள் பழகாது போகவேண்டும் என்று அவ்வாறு திட்டவில்லை. மாறாக எங்கே என் பிள்ளை பழகாது விட்டு விடுமோ என்ற ஆதங்கமும் கூடவே தெருவில் ஓடத்தெரியாமல் ஓடி விபத்து வந்து விடுமோ என்ற பயமுமே இத்தகைய திட்டுக்குக் காரணமாகியது.

இதே பிரச்சனையை ஒரு விழிப்புணர்வுடைய தந்தை வேறு விதமாகக் கையாண்டிருப்பார்.

"மகனே! சைக்கிள் ஓடும் பொழுது தைரியமாக ஓட வேண்டும். நீங்கள் பதட்டத்துடன் ஓடினால் விபத்து உண்டாகும். எனவே நாங்கள் முதலில் தெரு ஓரமாக ஓடிப்பழகாமல் ஒரு மைதானத்தில் ஓடிப் பழகுவோம். நன்றாக ஓடிப் பழகியபின்பு தெரு ஓரமாக ஓடுவோம். இன்றைக்கு நாம் ஓடிப் பழகியது போதும். வீட்டுக்குப் போவோம் அம்மா நம்மைத் தேடுவார்".

இவ்வாறு ஒரு தந்தை விழிப்புணர்வுடன் கதைக்கும் பொழுது ஒட்டுமொத்தக் குடும்பமே மகிழ்ச்சியுடன் இருக்க முடியும்.

சமூக வலைத்தளங்களில் சிறு குழந்தைகளின் குறும்பு நட வடிக்கைகள் என்ற பெயரில் சில பெற்றவர்கள் வீடியோ வெளியிடு வார்கள். தாய் பிள்ளையை அடிக்கப் போவது போலவும் பிள்ளை பெரிய மனிசர் கதைப்பது போன்று கதைப்பதாகவும் அப்பிள்ளை அழுது அழுது கதைப்பதைப் பெரிய விடயம் போன்றும் போடுவார்கள். அதைப் பார்ப்பவர்களும் மிகப்பிரமாதம் எனக் கொமன்ற் போடுகிறார்கள். சேக்கஸ்சில் யானையை அங்குசத்தால் குத்திக் குத்தி யானைப் பாகன் வித்தை காட்டுவார். குரங்குகளைக் குரங்குவித்தைக்காறன் அடித்து அடித்து வித்தை காட்டுவார். குழந்தைகளை அழவைத்து வித்தைகாட்டி

வீடியோப் போடும் பெற்றவர்களும் பிள்ளைகளின் உணர்வுகளைப் புரியாத விழிப்புணர்வு இல்லாத பெற்றவர்களே.

நீ கறுப்பாக இருக்கிறாய் உன்னை நாங்கள் குப்பைத் தொட்டியில கிடந்து எடுத்தோம் என்றோ அல்லது உன்னை ஆஸ்பத்திரியில மாத்தித் தந்திட்டார்கள் என்றோ சிலர் குழந்தைகளுடன் பகிடிவிட்டுக் கதைப்பார்கள். இத்தகைய வார்த்தைகள் அவர்களை மனவருத்தத்துக்கு உள்ளாக்கும் என்பதை மறந்து விடுகின்றோம். தமது குழந்தைகளை உயிருக்குயிராக நேசிக்கும் பெற்றோரே இவ்வாறு கூறுகின்றனர். ஒரு தாய்க்கு இரு இளவயதுப் பிள்ளைகள் இருந்தார்கள். ஒரு பிள்ளை பருமனானது. மற்றப் பிள்ளை ஒல்லியானது. ஆனால் அந்தப் பிள்ளைக்குத் தமிழ் விழாக்களுக்குப் போவது பிடிக்காது. இந்த அம்மாவுக்கு ஒரு நாள் ஒரு விழாவுக்குப் போகவேண்டி இருந்தது. விழாக்களுக்குப் போகப் பிடிக்காத பிள்ளையை எப்படியாவது அன்று கூட்டிக் கொண்டு போகத் திட்டம் போட்டார். அந்தப் பிள்ளையிடம் ரகசியமாகச் சொன்னார்.

“இங்க பார் மகளே உன்ர அக்கா வர வரக் குண்டாகிக் கொண்டு வாறாள். அவளை நான் இண்டைக்குக் கூட்டிக் கொண்டு போனால் விழாவுக்கு வந்திருக்கும் சனங்கள் ஒரு மாதிரிப் பார்ப்பார்கள். அதுபடியால் நீ வா”

இந்தக் கதையை தங்கைக்காறி அக்காளிடம் சொல்லிவிட்டாள். அக்காவும் தங்கையும் சேர்ந்து தாய் சொன்னதும் செய்ததும் பிழை எனச் சொல்லி கூடவே தந்தையும் தாயாரைக் கடிந்து கொள்ள அன்று எவருமே விழாவுக்குச் செல்லவில்லை. இப்படிப் பட்ட தாய் மீது பாசமும் மரியாதையும் பிள்ளைகளுக்கு உண்டாகாது. இந்தத் தாயானவள் பிள்ளை கள் மீது அளவு கடந்த அன்பு கொண்டவள் தான். ஆனாலும் பிள்ளையின் உணர்வைவிட ஊரவரின் விமர்சனம் பெரிது என நினைத்தார். மேலும் தங்கையைக் கூட்டிப் போவதற்கு அக்காளது உருவத்தைப் பகடைக்காய் ஆக்கினார். இப்படியாவது சுத்து மாத்துப் பண்ணி தமது காரியங்களைச் சாதிக்கின்றனர். ஒரு சகோதரத்திடம் மற்றச் சகோதரத்தைப் பற்றித் தப்புத் தப்பாகக் கூறுவது என்பதும் விழிப்புணர்வுடன் கதைக்கத் தெரியாத பெற்றவர்களின் அறியாமையே ஆகும்.

பல்கலைக் கழகத்துக்குத் தெரிவு செய்யப்பட்ட தனது மகன் அரசியல் கதைப்பதும் கட்சி வேலைகளில் ஈடுபடுவதும் ஒரு தந்தையால் ஏற்றுக் கொள்ளப்பட முடியாத ஒரு செயற்பாடாக இருக்கின்றது. அடிக்கடி

தந்தையும் மகனும் இவ்விடயம் தொடர்பாக உடன்பாடாடில்லாது மோதிக் கொள்கின்றனர். வீட்டில் அமைதி தொலைந்து விடுகின்றது. நான் நல்ல பிரஜையாக வரவேண்டும் எனச் சிறுவயது முதலே எனக்கு அறிவுரைகள் கூறி என்னை வளர்த்த அப்பா ஏன் இப்படி இருக்கின்றார் என மகன் கவலைப் பட்டார். வீட்டில் எவருக்கும் இந்த நடவடிக்கை ஏன் என்று புரியவில்லை. ஒரு நாள் அந்தத் தந்தையின் பாலிய நண்பன் வீட்டுக்கு வருகின்றார். வீட்டில் நடப்பவற்றை ஒரு முறைப்பாடு போல அந்த நண்பரிடம் தாயும் மகனும் கூறுகின்றனர். தந்தையாரின் மிக நெருங்கிய ஆருயிர் நண்பன் ஒருவன் அரசியல் மேடையில் சுட்டுக் கொல்லப் பட்டதாகவும் அந்நிகழ்வு அவரது அடி மனதில் பெரும் தாக்கத்தை உண்டு பண்ணியதாகவும் அவர் விளக்குகின்றார்.அந்த நண்பனின் இறப்புக்குப் பின்பு எந்த ஒரு அரசியல் கூட்டங்களிலும் தாங்கள் பங்குபற்றுவதில்லை எனவும் அந்த நண்பர் கூறுகின்றார்.

இச் செய்தியைக் கேட்டபின்பு மகன் தந்தைக்குத் தனது நிலைப்பாட்டையும் ஆசையையும் மீண்டும் புரிய வைக்கின்றான்.

“அப்பா உங்கள் நண்பன் சுடுபட்டு இறந்தது இலங்கையில். அந்தக் காலத்தில் அங்கு போஉ நடந்துள்ளது. அதனால் அப்படி அவர் இறக்கும் நிலை வந்தது. நாம் இப்பொழுது இருப்பது டென்மார்க்கில் இங்கே யாரும் என்னைச் சுடமாட்டார்கள். நீங்கள் பயப்பட வேண்டாம்” எனக் கூறித் தந்தைக்குப் பிரச்சினையைப் புரிய வைத்தான். தந்தையும் புரிந்து கொண்டு தனது மகன் அரசியலில் ஈடுபடுவதற்கு ஆதரவு கொடுத்தார். இப்பெழுது அந்த மகன் நல்ல அரசியல் வாதியாக வளர்ந்து வருகின்றான். தந்தையின் சிறுவயது மனக் காயமும் மெல்ல மெல்ல மறையத்தொடங்கியது.

மேற்கூறப்பட்ட கதையில் தந்தையின் சிறுவயதுக் காயமானது எவ்வாறு அவரது மகனின் வளர்ச்சிக்குத் தடையாக இருந்துள்ளது ன்பதை நாம் அறிய முடிகின்றது. இப்படிப்பட்ட காயங்களை பசழறவா ிழமைவெ எனக் குறிப்பிடுவார்கள்.சிறு வயதில் நமது வளர்ச்சியில் ஏற்படும் பயங்கள் நிறைவேறாத ஆசைகள் சுற்றத்தால் புறந்தள்ளப்படுதல் மாறாத வடுக்களாகி நமது ஆழ்மனதில் பதிந்து நம் மதியை மயக்கி நம்மையும் அறியாது நம்மை ஆட்டிப்படைக்கின்றன. இந்த நேரம் அந்தப் பிரச்சினையை மகன் கையாண்ட விதத்தின் மூலம் அந்தப் பழைய வடுவுக்கு ஒத்தடம் கொடுக்கப்பட்டுவிடுகின்றது. பிள்ளைகளுடன் அவர்கள் கருத்துக்களுக்கு மதிப்புக் கொடுத்து நாம் நிகழ்த்தும் பொழுது

நம் குழந்தைகளே தமக்கு வைத்தியராகும் நிகழ்வு அரங்கேறுகின்றது.

இப்படிப் பட்ட சம்பாஷணைகள் நடைபெறும் பொழுது நமது மொழிப் பிரயோகமானது மேல் எழுந்தவாரியாக அல்லாது ஒரு நோக்கம் கொண்ட கருத்து நிரம்பிய மொழிப் பிரயோகமாக இருத்தல் அவசியம். விழிப்புணர்வுடன் வாழும் பெற்றவர்கள் இத்தகைய மொழியையே பாவிப் பார்கள். இதனை targeted dialogue என ஆங்கிலத்திலும் malrettet dialog என டெனிஷிலும் கூறுவார்கள். ஒருவருடன் ஒருவர் கதைக்கும் பெழுது மூன்று விதமான படிநிலைகளை இந்தச் சம்பாஷணைகள் கடந்து செல்ல வேண்டும்

1.பிரதிபலிப்பு (mirroring)

2.ஏற்றுக் கொள்ளுதல்.(Accept)

3.உணர்வுடன் புரிதல்.(Empathy)

1.மற்றவரின் உணர்வையும் பிரச்சினைகளையும் அவர்களது நிலையில் இருந்து புரிந்து கொள்ளுதல் அவர்களது எண்ணங்களின் பிரதிபலிப்பைப் புரிதல்.

2.மற்றவரின் கருத்துக்களுடன் நமக்கு உடன்பாடு இல்லை என்றாலும் அவர்களது கருத்துக்களைச் செவிமடுத்துக் கேட்டு அதனை ஏற்றுக் கொள்ளும் தன்மையும் புரிதலும இருப்பது அவசியம். இந்த நிலையில் விழிப்புணர்வுடைய பெற்றவர்கள் தாம் கதைப்பதை விடவும் பிள்ளைகளின் கருத்துக்களுக்கு முதலிடம் கொடுப்பார்கள். பிள்ளை களைப் பேசவிட்டு அவர்கள் கூறுவதைச் செவிமடுக்கும் பெற்றவர்களாக இந்த விழிப்புணர்வுப் பெற்றவர்கள் இயங்குவார்கள்.

3.மற்றவர்களின் உணர்வுகளைப் புரிவதன் மூலம் அவர்களின் எண்ணங்களை மனத்தினால் வாசிக்கும் தன்மை உருவாகும். கூடுவிட்டுக் கூடு பாயும் தன்மை கொண்ட முனிவர்கள் போல மற்றவரின் இதயத்து மொழியைப் புரியவும் நேசத்துடனும் பாதுகாப்புணர்வுடனும் மற்றவர்களை அரவணைக்கவும் நாம் பக்குவப்படவேண்டும்.

பிள்ளைகளுக்கு எதுவும் தெரியாது நமக்கு மட்டுமே எல்லாம் தெரியும் என்ற நிலைப்பாட்டில் நாம் கதைக்கும் பெழுதும் அவர்களைக் கொடிய சொற்களால் கண்டிக்கும் பொழுதும் அவர்களுக்கும் நமக்குமான பந்தமும் தொடர்பும் துண்டிக்கப்படுகின்றது. இதன் மூலம் அவர்களுக் கான பிரபஞ்சத் தொடர்பும் துண்டிக்கப்படுகின்றது. காரணம் பெற்றவர் களாகிய நாம் தான் இந்தப் பிரபஞ்சத்தைப் பற்றி அவர்களுக்குப் புரிய

வைக்கின்றோம். நமது உரையாடல் கத்தி போன்று இருக்குமிடத்து அது நமக்கும் குழந்தைக்குமான தொடர்பை மட்டுமின்றி இப் பிரபஞ்சத்துட னான தொடர்பையும் வெட்டி விடுகின்றது. நம்மைச் சுற்றியுள்ள உலகமும் நமது உறவுகளும் நம்பத்தக்கவர்களாக இல்லை என்ற நினைப்புக் குழந்தையிடம் உருவாகும். தப்புச் செய்து விட்டால் தண்டனை கிடைக்கும் பெற்றவரின் அன்பை இழந்துவிடுவேன் என்ற நினைப்பு வரும் பொழுது தன்னைப் பாதுகாக்கப் பொய் சொல்லத் தொடங்குகின்றது. பொய் கைவரப் பெற்ற குழந்தை தன் இயல்பை விட்டுவிட்டு நடிக்கத் தொடங்குகின்றது. நடிப்புக் கைவரப் பெற்ற பிள்ளை களவு செய்யத் தொடங்குகின்றது. களவு கைவரப் பெற்ற பிள்ளை போதைப் பொருட்களுக்கு அடிமையாகின்றது. அந்தப் பழக்கம் அதன் மதியை மயக்க அது கொலை கொள்ளை கூடச் செய்யத் துணிந்துவிடுகின்றது. கொலை கொள்ளை போதைப் பொருள் பாவனை என்பன அதிகரிக்க சமுதாயம் சீர் கெடுகின்றது. சீர் கெட்ட சமுதாயங்கள் பல பெருகி உலகப் போர் உண்டாகின்றது.

ஈவு இரக்கமற்று மக்களைக் கொன்று குவித்த கிட்லரின் ஆழ்மனதில் இருந்தது என்ன? அவரது கொடுமைக்காறத் தந்தை

அவரது சிறுவயதில் அவருக்கு இழைத்த கொடுமைகளின் வலியே பிற்காலத்தில் அவர் கொடுங்கோலனாக மாறக் காரணமாக இருந்தது.

மேலே கூறப்பட்ட செய்திகள் மூலம் நாம் விழிப்புணர்வுடைய பெற்றோராக இருக்க வேண்டியதன் அவசியத்தைப் புரிந்து இருப்பீர்கள் என நினைக்கின்றேன்.

விழிப்புணர்வற்ற பெற்றோர்கள் தம் பிள்ளைகளைப் பற்றி என்ன நினைப்பார்கள்.?

1. இவர்கள் தமது பிள்ளைகள் தங்களது நீட்சி எனவும் தாம் நினைப்பதைப் போலவும் உணர்வதைப் போலவுமே பிள்ளைகளும் உணர்வார்கள் நினைப்பார்கள் என்று நம்புவார்கள்.

2. இவர்கள் நினைப்பது மட்டுமே சரியான யதார்த்தம் என்றும் தமக்குப் பிள்ளைகள் மீது பொறுப்பு இருப்பதாகவும் தாம் பிள்ளைகளைக் காப்பது என்பது தமது தெய்வீகக் கடமை என்றும் நினைப்பார்கள்.

3. பிள்ளைகளின் சில நடவடிக்கைகளைப் பார்த்து அதிக கவலை அல்லது கோபம் கொள்வார்கள்.ஆனால் அது அவர்களது சிறுவயது

மனக்காயங்களாகவோ அனுபவங்களாகவோ அமையலாம்.

4. பிள்ளைகளின் அனுபவங்களை அல்லது அவர்களது உணர்வுகளைப் பற்றிய தெளிவும் கருத்தாக்கமும் இவர்களிடம் இருக்காது. மேலும் அவற்றையெல்லாம் தமது அனுபவங்களுடன் சேர்ந்த ஒரு நிகழ்வாகவே பார்ப்பார்கள்.

5. பிள்ளைகள் வேறு தாம் வேறு என்ற நினைப்பு இவர்களிடம் இருக்காது. தாமும் குழந்தைகளும் ஒன்று என்ற கூட்டு நிலையில் இருப்பார்கள். (Symbiosis)

6. குழந்தைகள் வெவ்வேறு வகையான உடல் உள வளர்ச்சியை (Developmental stages for chirlden). வெவ்வேறு காலகட்டங்களில் கடந்து சென்றே தம் வளர்சிப் படிகளைத் தாண்டுகின்றனர் என்ற நினைப்பு இவர்களிடம் இருக்காது. உதாரணமாக பக்கத்து வீட்டுப்பிள்ளையின் கெட்டித்தனம் தமது பிள்ளையிடம் இல்லை என நினைப்பார்கள் ஆனால் பக்கத்து வீட்டுப் பிள்ளைக்கும் தமது பிள்ளைக்கும் வயது வித்தியாசம் உடல் அமைப்பு வித்தியாசம் என நினைக்க மாட்டார்கள்.

7. பிள்ளைகளுடன் உரையாடும் பொழுது அந்த உரை யாடலானது One way communication) ஒரு வழிப்பாதையாகவே இருக்கும். பிள்ளைகளைக் கதைக்கவிட்டு அதைச் செவிமடுக்கும் தன்மை இவர்களிடம் இருக்காது.

8. பிள்ளைகளுக்கும் தமக்கும் இடையில் பிரச்சனைகள் வருமிடத்து அது முழுக்க முழுக்கப் பிள்ளைகள் பிழைவிட்டதனால் மட்டுமே அவ்வாறான சிக்கல் உண்டாகியது என நினைப்பார்கள்.தமது தரப்பில் என்ன தவறு இருந்தது என நினைக்கமாட்டார்கள்.

9. காலம் பூராகவும் பெற்றவர்கள் மட்டுமே பிள்ளைகளுக்குப் புத்தி சொல்ல உரிமையுடையவர்கள் என நினைப்பார்கள்.தம் பிள்ளைகளிடமும் தாம் கற்றுக் கொள்ளக் கூடிய பல விடயங்கள் உண்டு என நினைக்க மாட்டார்கள்.

10. அதிகாரமும் பட்டம் பதவிகளும் பணமுமே நிரந்தரம் என நினைப்பார்கள்.தாமும் தமது பிள்ளைகளும் சேர்ந்து வாழும் நிலை விட்டுக் கொடுக்கும் தன்மை சுயநலமற்ற அன்பு ஒருவர் மீது ஒருவர் வைக்கும் மரியாதை என்பனவே நிரந்தரம் என்ற நினைப்பு இவர்களிடம் இல்லாமமல் போவதற்குக் காரணம் மற்றவர்கள் (சுற்றம் சூழல்) தம்மை என்ன நினைப்பார்கள் என்ற போலிக் கௌரவம் இவர்களது கண்களைக்

கட்டிப்போட்டு விழிப்புணர்வற்றவர்களாக மாற்றிவிடுகின்றது.

மேலே குறிப்பிடப்பட்ட தகவல்களைப் பார்க்குமிடத்து 100 வீதம் விழிப்புணர்வுடைய பெற்றவர்களாக நாம் எல்லோரும் இருக்கின்றோமா என நாம் கணக்கெடுக்க முடியாது. பெற்றவர்கள் எப்படி இருந்தாலும் பிள்ளைகளுக்குப் பெற்றவரே உலகமும் தெய்வமும் எல்லாமும். அவ்வாறே பெற்றவருக்கும் பிள்ளைகளே உலகமும் உயிரும் கடவுளும். இயற்கை அன்பெனும் மூச்சுக்காற்றால் நம்மை இயக்குகின்றது.ஒருவரை ஒருவர் புரிந்து கொள்வதும் அறிந்து கொள்வதும் நம் வாழ்வில் இன்றியமையாத ஒன்றாக அமைந்துள்ளது.

# அத்தியாயம் - 8

## நான் யார் என்று புரிகின்றதா?

ஒவ்வொரு வியாழக்கிழமைகளிலும் எமது சிறுவர் பள்ளியில் ஆசிரியர்களும்

சிறுவர்களும் சேர்ந்து சுற்றுலாப் போவது வழமை. சிலவேளை அந்த இடங்கள் தூரத்தில் இருக்கும். சில வேளை அவை அருகில் இருக்கும். நேற்று நாங்கள் எல்லோரும் சற்றுத் தொலைவில் உள்ள மிருகக்காட்சிச் சாலைக்குச் சென்று வந்தோம். வேலை முடிந்து நான் வீட்டுக்கு வந்த பின்பும் இப்பொழுது இதை எழுதும் வரைக்கும் எனது எண்ணங்கள் எமது பள்ளியின் சுட்டிப்பையன் ஒருவரைச் சுற்றியே வந்தபடியுள்ளது.அந்த மறக்க முடியாத உரையாடலை இப்பொழுது நான் உங்களுடன் பகிர்ந்து கொள்ளலாம் என நினைக்கின்றேன்.

நாங்கள் எல்லோரும் மிருகங்களைச் சுற்றிப்பார்த்தபடி வந்து கொண்டிருந்தோம். சிங்கம், புலி, கரடி, ஆடு, மாடு யானை என்பவற்றை யும் அவற்றின் குட்டிகளையும் பார்த்தபடி வந்த பொழுது ஒட்டகச்சிவிங்கி ஒன்று அப்பொழுது பிரசவவலியில் அங்குமிங்குமாக நடந்தபடி இருந்தது. நாமும் பிள்ளைகளைக் கூட்டி வைத்து ஒட்டகச் சிவிங்கியை பார்த்தபடியும் அதைப் படங்கள் எடுத்துபடியும் இருந்தோம். ஒருபடியாகக் குட்டி ஒட்டகச் சிவிங்கி பிறந்து விட்டது. ஆனால் குட்டியானது தாயின் வயிற்றால் தொப் பென்று விழுந்து விட்டது. அதுவும் எட்டடி உயரமான தன் அம்மா வயிற்றி லிருந்து விழுந்து எழும்பமுடியாது நொந்து பயந்து விழுந்து கிடந்தது. அம்மாச் சிவிங்கி தன் குட்டிக்கு முத்தம் கொடுத்து நாக்கால் தடவி அரவனைத்தது. எழும்ப முயன்று குட்டி விழுந்தது. அம்மாச் சிவிங்கி தன் நீண்ட காலால் தன் குட்டியை ஓங்கி உதைத்தது. குட்டி எழும்ப முயன்றது. மீண்டும் விழுந்தது. அம்மாச் சிவிங்கி மீண்டும் உதைத்தது. இந்த நிகழ்வு நடந்தபடி இருக்கவும் நாங்கள் எமது சுற்றுலாவைத் தொடர்ந்தோம்.

சற்றத் தூரம் சென்றதும் ஒலிவர் ஓடிவந்து என் கைகளைப்

பிடித்தபடி கேட்டான்.

"கலா! இந்தச் சிவிங்கியம்மா எதுக்காகக் குட்டியை உதைக்குது? குட்டி பாவமில்லையா? பிறந்த உடனே இந்த பேபிச் சிவிங்கி எப்படி எழும்பும்.?

இது பொல்லாத அம்மாச் சிவிங்கி போலயிருக்குது."

"ஓலிவா்! உலகத்தலுள்ள எல்லா அம்மாக்களும் நல்லவா்கள் தான். சுந்தா்ப்பமும் சூழ்நிலைகளும் தான் அவரவரது வாழ்க்கையையும் குணங்களையும் தீா்மானிக்கின்றது. காட்டிலே சிங்கம் புலி கரடி எனப் பல கொடிய மிருகங்கள் இருக்கின்றன அல்லவா. அப்படியான மிருகங்கள் திடீரென இந்தக் குட்டியைச் சாப்பிட வரலாம். அம்மாச் சிவிங்கிக்குக் குட்டியைத் தூக்கிக் கொண்டு ஓட முடியாது. ஆகவே பிறந்த உடனே எழும்பி நடக்கவும் அதன் பின்பு ஓடவும் கற்றுக் கொள்ள வேண்டும். அதனால் அம்மாச் சிவிங்கி காலால் அடித்துத் தன் குட்டியை எழுப்பி நடக்கப் பயிற்சி கொடுக்கின்றது" என்றேன்

"நல்லகாலம் நாமெல்லாம் வீடுகளில் இருக்கின்றோம். சிங்கம் புலி வீட்டுக்குள் வரமுடியாது." என்று சொல்லிச் சிரித்தான்.

"மனிதா்களின் பிள்ளைகள் எழும்பி நடந்து தாமாகத் தமது வேலைகளைச் செய்வதற்கும் நீண்ட நாட்கள் எடுக்கின்றது. ஆதனால்தான் கடவுள் நமக்கு நல்ல அப்பா அம்மாவைத் தந்துள்ளாா்" என்றேன்.

"நானும் அவா்களுக்கு நன்றி சொல்ல வேண்டும்" என்று ஒலிவா் கூறினான். இப்படியாகக் கதைத்தபடி நாங்கள் நடந்து சென்றோம்.

ஒலிவா்! கலா! இங்கே வாருங்கள் என எம் முன்னால் போன ஆசிரியா் கூப்பிட்டாா். அங்கே கங்காருக்கள் இருந்த கூட்டைச் சுற்றி எல்லோரும் நின்று வேடிக்கை பாா்த்தனா். கூட்டமாக நாம் வந்ததைக் கண்ட ஒரு கங்காருக்குட்டி சட்டென்று அம்மாக்கங்காருவின் வயிற்றுக்குள் துள்ளிக்குதித்து ஓடிமறைந்தது. அதைப் பாா்த்த குழந்தைகளுக்கு அச்செயல் அதிசயமாக இருந்தது. மீண்டும் அந்தக் குட்டி தாயின் வயிற்றுப் பையைவிட்டு எப்பொழுது வெளியே வரும் என நாம் எல்லோரும் எதிா்பாா்த்தவாறு இருந்தோம். ஆனால் குட்டி வெளியே வரவில்லை.

"எப்போது குட்டி வெளியே வரும்?" என ஒலிவா் கேட்டான்.

"நாம் இவ்விடத்தை விட்டுப் போனபின்பு வரலாம்" என ஒலிவரின்

தோழன் பிரியன் கூறினான்.

“நாம் தமக்குத் தீங்கு செய்துவிடுவோம் எனக் குட்டியும் அம்மாவும் பயந்துவிட்டனா” எனக் கூறி மாலா சிரித்தாள்.

“இப்படித்தான் பிள்ளைகளே நமது அம்மாக்களும் நம்மைப் பாதுகாத்து வளர்க்கின்றனர். நமக்கு எத்தனை வயதானாலும் அவர்கள் எம்மைப் பாதுகாப்பார்கள்” என்று கூறினேன்.

“ஆனால் நாம் வளர்ந்தபின்பும் அவர்கள் எதற்காகச் சிரமப்படவேண்டும்?

“இப்போது இந்தக் கங்காருக் குட்டி வளர்ந்துவிட்டால் அம்மாவின் வயிற்றுப் பைக்குள் இருக்க இடம் போதாது அல்லவா?” என ஒலிவர் கேட்டான்.

“நீ கூறுவது முற்றிலும் உண்மை ஒலிவர். உங்களில் எத்தனைபேர் உங்கள் வேலைகளை நீங்களே செய்கின்றீர்கள்?” என நான் கேட்டேன்.

எங்கள் உடுப்புக்களை நாங்கள் மடித்து வைத்து நாமே எடுத்துப் போடுவோம் .எங்கள் அறையை நாங்களே சுத்தம் செய்வோம். நாங்கள்

சாப்பிட்ட கோப்பையை நாங்களே கழுவுவோம். எனப் பல விளக்கங்களை ஒவ்வொரு பிள்ளைகளும் கூறினார்கள்.

ஒலிவர் மட்டும் சங்கரைப் பார்த்துச் சிரித்தான். “ஏன் சிரிக்கிறாய்” எனச் சங்கர் கேட்டான். உனது சாப்பாட்டை நீயாகவே சாப்பிடுகின்றாயா சங்கர். உனக்கு உன் அம்மா தான் சாப்பாடு ஊட்டிவிடுவார் என நீ கூறியுள்ளாய் அல்லவா எனக் கேட்டான் ஒலிவர். “அப்படியா சங்கர் நீ எப்பொழுது பேபியாகினாய் எனக் கேட்டு எல்லாப் பிள்ளைகளும் சிரித்தனர். சங்கருக்கு வெட்கமும் கவலையும் வர “ஆமாடா நான் என் அம்மாட செல்லம். அதுக்கு உங்களுக்கு என்னடா பிரச்சனை எனக் கேட்டு அழுதான் சங்கர்.

“அது எப்பிடிச் சரிவரும் சங்கர் .இந்த கங்காருக் குட்டி பெரியதாக வளர்ந்த பின்பும் அம்மா வயிற்றில் இருக்க முடியாதல்லவா? நீ மட்டும் எப்படிக் காலம் பூராகவும் பேபியாக இருக்க முடியும்?” என ஒலிவர் கேட்டான். சாப்பாடு தீத்துவது அவர்களது வீட்டில் வழக்கமாகச் செய்யப்படும் விடயமா என வேறு ஒரு மாணவன் கேட்டான். என்னால் பதில் சொல்ல முடியவில்லை.

“அப்படியல்ல பிள்ளைகள் வளர்ந்துவிட்டாலும் அவர்களுக்கு அவர்களது அம்மா தமது அன்பை இவ்வாறு காட்டுவார்கள் என நான் கூறினேன். சாப்பாடு தீத்தும் பொழுது பிரம்பையும் அருகில் வைத்துத் தீத்தினால் எப்படிச் சந்தோஷமாகச் சாப்பிடலாம் என ஒலிவர் கேட்டான்.

நாங்கள் இவ்வாறு கதைத்துக் கொண்டிருந்த போது எமது சக ஆசிரியர் “வீட்டுக்குப் போகும் நேரம் நெருங்குகின்றது.” எனக் கூறவும் கதைப்பதை விட்டுவிட்டு அனைவரும் மீதியிருந்த மிருகங்களையும் பார்த்து முடித்து வீடு திரும்பினோம். ஆனாலும் என்னால் ஒலிவர் கூறிய வார்த்தையை மறக்கமுடியவில்லை. ஆம் கங்காருக் குட்டி வளர்ந்த பின்னும் அம்மா வயிற்றுள் இருக்க முடியாதுதானே..இக் கேள்வியை நானே இன்று பல தடவைகள் எனக்குள் கேட்டுப்பார்த்தேன். ஒலிவர் கூறியபடி நாங்கள் மீண்டும் மீண்டும் அம்மா வயிற்றுள் இருக்கமுடியாது தானே. நாங்கள் இன்னும் வளரவில்லையா? அல்லது நம் அம்மாக்களுக்கு நாம் வளர்வது தெரியாமலே இருக்கின்றதா?. ஒரு கையில் பிரம்பும் மறு கையில் சாப்பாட்டுத் தட்டையும் வைத்துக் கொண்டு அது தான் பேரன்பு என்று சொல்ல முடிகின்றதா? சாப்பாட்டுத் தட்டுடன் பிரம்பும் கூட வரக் காரணம் நம் மனப் பயம்தானா?. அல்லது பிள்ளை மீதுள்ள அக்கறையா? எதுவாக இருந்தாலும் நாம் நமது வளர்ந்த பிள்ளைகளுக்குப் பாசம் என்ற பெயரில் இப்பொழுதும் தொட்டில் கட்டிச் சீராட்டுகின்றோம்.காலத்துக்குக் காலம் பிள்ளைகளின் உடல் மனம் என்பன மாறுகின்றன என்பதை நாம் மறந்துவிடுகின்றோம்.

## குழந்தைகளின் வளர்ச்சிக் கட்டங்கள்

**1.அரவணைப்பும் இணைப்பும் தேவைப்படும் கட்டம்** – The attachment phase

குழந்தை தாயின் கர்ப்பத்தில் உருவான காலம் முதல் பிறந்து இரண்டு வயது முடியும் வரை உள்ள காலம் மிக முக்கியமான காலமாகும். இக் காலங்களில் உடல் ரீதியான அரவணைப்பும் தொடுதலும் குழந்தை யுடனான கருத்துத் தொடர்புச் சாதனமாக அமைகின்றது. குழந்தையின் மூளை வளர்ச்சியில் இக்கால கட்டம் கட்டிடங்களுக்குப் போடும் அத்தி பாரம் போன்றதாக அமைய வேண்டும். நமது மூளையானது பல்வேறு வகைப்பட்ட தொழில்களைப் புரிகின்றது. கண், காது, வாய், மூக்கு, தோல் போன்ற புலனுறுப்புக்கள் மூலம் மூளையின் செயற்பாடுகள் நடைபெறத் தொடங்குகின்றன. மூளையின் பல பகுதிகளிலும் மில்லியன் கணக்கான

செல்கள் அல்லது நியுரோன்கள் உள்ளன. இவை சினாப்ஸ் எனப்படும் சிறிய இடைவெளிகளில் இரசாயனச் செய்திகளை அனுப்புவதன் மூலம் நரம்புகளை இயங்க வைக்கின்றன. புலன் நரம்புகள் மூலம் செய்திகள் மீண்டும் மீண்டும் உள்வாங்கப்பட்டு செய்திகளைக் கொண்டு செல்லும் நரம்புப் பாதைகள் விரிவாக்கப்பட்டு மூளை சுறுசுறுப்பாகவும் ஆரோக்கியமாகவும் வளரத் தொடங்குகின்றது.

சிறுகுழந்தைகள் அடிக்கடி விரல் சூப்புவார்கள். இது ஒரு கெட்ட பழக்கமாக மாறிவிடும் என்ற பயத்தில் கைவிரல்கழுக்குக் கட்டுப்போடவது போன்று கையுறைகளைப் போட்டுக் கட்டி விடுவார்கள். கெட்ட பழக்கம் விரல் சூப்பினால் அடிவேண்டுவாய் எனக் குழந்தையை வெருட்டுவார்கள். பிறந்த குழந்தையின் வாய்ப்பகுதி கைப்பகுதி போன்ற இடங்களிலுள்ள நரம்புகள் இப்பொழுது நன்கு செயற்படத் தொடங்கிவிடுகின்றன. இதனால் கைவிரல் சூப்புவது தாய்ப்பால் குடிப்பது போன்ற செயற்பாடு களினால் தனது அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்கின்றது. இப்பொழுது தொடுதல் சுவைத்தல் போன்ற செயல்கள் மூலம் உணர்ச்ச ிகள் உண்டாகின்றன.இவை நரம்புகள் மூலம் செய்திகளாக மூளைக்குக் கடத்தப்படுகின்றன. குழந்தையின் மூளை வளரத் தொடங்குகின்றது.

மேலும் தாயின் தொடுதல் அணைத்தல் மூலம் பாதுகாப்பையும் அன்பையும் அது புரிந்துகொள்கின்றது. நாளாக ஆக தான் ஒரு பாதுகாப் பான அன்பான சூழலின் உள்ளதாக அது உணர்கின்றது. அதன் பின் தன்னைச் சுற்றியுள்ள மனிதர்களையும் தனது தேவைகளையும் புரிந்து கொள்கின்றது. பசித்தால் அழுகின்றது. அழுதால் அம்மா வந்து பால் தருவார் என நம்புகின்றது. நித்திரை வந்தால் அது அழுகின்றது. அம்மா வந்து தாலாட்டுப் பாடித் தூங்கவைப்பார் என எதிர்பார்க்கின்றது. சாமான்களைத் தூக்கி எறிகின்றது. எறிவதனால் உண்டாகும் சத்தம் குழந்தையை மேலும் மேலும் சத்தம் போடத் தூண்டுகின்றது.காரணம் அவ்விடத்தில் குழந்தை ஒலி என்ற தன் புலன் உணர்வுச் சாதனத்தைப் பரிசோதித்துப் பார்க்கின்றது. நாம் இச் செயலை வேறு விதமாகப் பார்க்கின்றோம். சும்மா சும்மா குழந்தை விளையாட்டுப் பொருட்களை எறிந்து சத்தம் போடுகின்றது. விளையாட்டுச் சாமானை உடைக்கின்றது என நினைக்கின்றோம்.கோபப்படுகின்றோம்.

குழந்தை பொருட்களைப் பற்றிப்பிடிக்கக் கற்றுக் கொள்கின்றது. அம்மாவின் தோடு பாட்டியின் மூக்குக் கண்ணாடி அத்தையின் சங்கிலி என்பவற்றைப் பற்றிப்பிடித்து ஆராய்ச்சி செய்கின்றது. அடடா தங்கத்தின்

மீது உனக்கு இப்பவே ஆசை வந்து விட்டது என நாம் வேடிக்கையாகச் சொல்கின்றோம். பல்லுக் கொழுக்கொட்டை கொட்டும் பொழுது பலவிதமான பொருட்களைக் குழந்தையைச் சுற்றிக் கொட்டிவிட்டு குழந்தை எதை எடுக்கின்றது எனப் பார்த்து மகிழ்கின்றோம்.

எடுத்த பொருட்களை உடனே வாயில் வைத்துச் சுவைத்துப் பார்த்துக் குழந்தை ஆராய்ச்சி செய்கின்றது. கண்ட கண்ட பொருட்களை வாய்க்குள் வைக்கிறதே உன்ர வேலையாப் போச்சு என நாம் கடிந்து கொள்கின்றோம். வாயிலுள்ள நரம்புகளும் கையிலுள்ள நரம்புகளும் வா வா நாம் நமது ஆராய்ச்சியைத் தொடர்வோம் எனக் குழந்தையைக் கூப்பிட்டபடி இருக்க நாமோ அதன் கையிலுள்ள பொருட்களை எடுத்து அப்புறப்படுத்தி வீட்டை ஒழுங்குபடுத்த குழந்தைக்கும் நமக்கும் நீயா நானா என்ற அதிகாரப் போட்டி உருவாகின்றது.

அப்பா ஏன் கோபப்படுகிறார்? அம்மா ஏன் அழுகிறார்? என்ற விளக்கம் குழந்தைக்கு இல்லாது இருக்கும். ஆனாலும் உணர்வு ரீதியாக அச் சூழ்நிலை குழந்தைக்குப் பயத்தையும் பாதுகாப்பற்ற தன்மையையும் உணர்த்தும். குழந்தை அக்கால கட்டங்களில் தாயும் தானும் ஒன்று என்றே நினைக்கும். இதனால் தாய், தந்தை தன்னை விட்டுத் தூர இடம் போகாது இருக்கவேண்டும் என்பதில் கவனமாக இருக்கும். தாயோ தந்தையோ சற்று விலகிப் போனால் குழந்தை பயந்து அழுவதை நாம் வழக்கமாகக் கண்டிருப்போம்.

தானாக நடக்கத் தொடங்கும் பொழுது அடடா என்னால் நடக்க முடிகின்றதே என்ற தன்னம்பிக்கை குழந்தைக்கு உருவாகும். இப் பொழுது தன்னைச் சுற்றியுள்ள உலகத்தின் மீதான ஆர்வம் குழந்தைக்கு உண்டாகின்றது. எல்லாப் பொருட்களையும் எடுத்து ஆராய விரும்பு கின்றது. குழந்தையின் ஆராய்ச்சியை நாம் குழப்படி என நினைத்துத் தடுக்க முற்படும் பொழுது அதன் உள்ளார்ந்த ஆராய்ச்சி ஆர்வமானது தடைப்படுகின்றது.

**2.ஆய்வுக் கட்டம்** The exploration phase.

(ஒன்றரை வயதிலிருந்து மூன்று வயது )

இப்பொழுது பெற்றவரின் அணைப்பிலிருந்து விடுபட்டு நடக்கவும் சுற்றியுள்ள பொருட்களை ஆராயவும் தொடங்குகின்றது. பெற்றவரைவிட்டுத் தனியே இருக்கவும் தொலைவில் விளையாடவும்

குழந்தை பயப்படுகின்றது.தான் ஆராய விளையாட புறப்படும் போது அம்மா அப்பா எங்குள்ளனர் எனக் கவனிக்கின்றது.தன்னால் மீண்டும் அவர்களிடம் ஓடி வரமுடியும் என்ற ஒரு நம்பிக்கையில் தான் தனது ஆராய்ச்சியையும் விளையாட்டையும் தொடங்குகின்றது. தான் தனியே இயங்கவும் அதே நேரம் பெற்றவரின் பாதுகாப்பில் இருக்கவும் குழந்தை விருப்பப்படுகின்றது.

பெற்றவரிடம் இருந்து போதுமான அன்பையும் அரவணைப்பை யும் ஆரம்பத்தில் பெற்ற குழந்தையால் மட்டுமே அடுத்த கட்ட வளர்ச்சிக்காகத் தன்னைத் தயார்ப் படுத்த முடியும். குழந்தை தான் யார் என்பதையும் தானும் தாயும் ஒன்று அல்ல என்பதையும் புரிந்து கொள்ள வேண்டிய நேரம் இது.

இக்கால கட்டத்தில் குழந்தையை எப்பொழுதும் தூக்கி வைத்திருப்பது நல்லதல்ல. பிள்ளைக்குத் தானாக இயங்கும் திறன் உருவாக வேண்டும் என்றால் நாம் அடிக்கடி தூக்கி வைத்திருப்பது சாப்பாடு தீத்துவது போன்ற செயல்களைச் செய்யக் கூடாது. இதன் மூலம் குழந்தையின் தன்னார்வத்தைக் குறைத்து அவர்கள் புதிதாக எதுவும் கற்றுக் கொள்ள நாம் இடம் கொடுக்காது போய்விடுகின்றோம்.

உடம்பு புரட்டி, ஊர்ந்து அசைந்து, முழங்கால் குத்தி எழும்பியிருந்து, தானாக எழும்பி, தத்தித் தத்தி நடந்து, விழுந்து எழும்பிப் பின் குறுகுறு நடை நடந்து, ஒரு படியாகத் தானாகக் குழந்தை நடக்கும் வரை அத்தனை வளர்ச்சிக் கட்டங்களும் குழந்தைக்குப் போராட்டமே. உளவியலாளர் எரிக்சன் கூற்றுப்படி இக்கட்டங்கள் ஒவ்வொன்றையும் கடந்து வருவது போர் முடிந்து வெற்றி பெற்றுப் பின் புத்துணர்வு பெறுவது போன்றதாகும். குழந்தை தன்னால் முடியும் என்ற ஒரு தன்னம்பிக் கையைப் பெறுகின்றது. ஒவ்வொரு வளர்ச்சிக் கட்டமும் போராட்டங்கள் வரும். அதில் வெற்றி பெற்றால் மட்டுமே அடுத்த கட்ட வளர்ச்சிப் படிகளில் குழந்தையால் ஏற முடியும்.

நான் உடம்பு புரட்டுவேன்

நான் தவழுவேன்

நான் எழுந்து நிற்பேன்

நான் ஓடுவேன்

நான் நானாகச் சாப்பிடுவேன்

நான் நானாக எனது உடுப்புக்களைப் போடுவேன்

நான் எழுதுவேன் நான் பாடுவேன் நான் ஓடி விளையாடுவேன்.

இப்படியாக இந்த நான் ஆகிய நான் வளர வளரக் குழந்தை வளர்ந்து இப்பொழுது தான் யார் தன்னால் என்ன என்ன செய்ய முடியும் என நினைத்துப் பார்த்து மகிழ்கின்றது.

ஓடி விளையாடும் குழந்தை விழுந்து அடிபடும் என நினைத்துக் கவலைப்படும் ஒரு அம்மாவால் குழந்தைக்குத் தன்னம்பிக்கையைக் கொடுக்க முடியாது.

பிள்ளை தானாகச் சாப்பிடமாட்டாது அல்லது அது சாப்பிடுவது போதாது என நினைத்து ஒரு கையில் பிரம்பையும் மறு கையில் சாப்பாட்டுக் கோப்பையையும் கொண்டு அலைந்து தமது பாசத்தைக் காட்டும் அம்மாக்கள் விழிப்புணர்வு அல்லாத அம்மாக்களே. குழந்தை சத்தி எடுக்கும் நிலை வரும் வரை மணிக்கணக்காக அவர்கள் ஊட்டும் உணவானது குழந்தையின் மனவளர்ச்சிக்கு எந்த விதத்திலும் உதவாது.

பசித்தால் தானே சாப்பிட வேண்டும் என்ற நினைப்புப் பிள்ளை மனதில் வரவே வராது. மேலும் அந்தக் காலத்தில் நாங்கள் நிலாச் சோறு உண்டு வளர்ந்தோமே அது தப்பா எனப் பலர் கேட்கலாம். இல்லவே இல்லை. அங்கே அம்மா கதை சொல்வார். பாட்டுப்பாடுவார்

தாய்க்கும் குழந்தைக்குமிடையிலான பந்தம் அன்பாலும் அறிவாலும் கட்டப்பட்டது அது அந்தக்காலம். இப்போது பிள்ளையின் கையில் ஒரு போன் அது போனைப் பார்த்தபடி இருக்க அம்மா சாப்பாடு ஊட்டுவார். அம்மாவினதும் குழந்தையினதும் பந்தத்தைப் போன் பறித்துக் கொள்கின்றது. சாப்பாடு ஊட்டுவதற்குக் குழந்தையை ஏமாற்றும் ஒரு வியாபாரம் அங்கே நடக்கின்றது. அதற்குப் பயன்படும் ஒரு வியாபார முகவர்தான் போன். ஒரு வீட்டில் போன் இல்லை என்றால் குழந்தை அன்று பட்டினிதான். போதைப் பொருளைவிட மோசமானது இந்தப் போனின் போதை.

சாப்பாடு தீத்தி முடிந்தபின் அம்மா மனசு குதூகலமாகும். அப்பாடா என் குழந்தை சாப்பிட்டுவிட்டதே எனத் திருப்தி உண்டாகும். சாப்பிட்டு முடிந்த பிள்ளையிடம் என்ன சாப்பாடு சாப்பிட்டாய்? எப்படிச் சுவையாக இருந்ததா? எனக் கேட்டால் பதில் சொல்லத் தெரியாது பிள்ளை யோசிக்கும். எனது போனை மீண்டும் கொடுங்கள் எனக் கெஞ்சும்.

எப்படிப் போதைப் பொருள் பாவித்த மனிதர்கள் இருப்பார்களோ அப்படி இக்குழந்தையும் தன் நிலை மறந்து இருக்கும்.

அப்பொழுது அம்மாக்குத் திடீர் ஞானம் உருவாகும். உனக்கு எத்தனை முறை சொல்லியிருக்கின்றேன் போன் பார்த்தால் உன் கண் கெட்டுப் போகும்” எனக் கூறுவார்.

எனக்கு இப்போது போன் வேண்டும் எனக் குழந்தை அடம் பிடிக்கும். நீயா நானா என ஒரு அதிகாரப் போராட்டம் உண்டாகும். யுத்தம் நீடிக்கும். குழந்தை ஒரு பழக்கத்தில் இருந்து மீண்டு வர 21 நாட்களுக்கு மேலாகும் என உளவியலாளர்கள் கூறுகின்றனர். அத்தனை நாட்கள் பொறுமையாக இந்தப் போன் போதையில் இருந்து குழந்தையை மீட்க முடியுமா? அப்படி முயற்சி செய்யப் போகும் பொழுது குழந்தை சாப்பிடாது .ஐயையோ அது சரிப்படாது என நினைத்துப் பயந்து மீண்டும் போனைக் கொடுத்து விடுகிறார்கள். ஆகா மீண்டும் என் சாம்ராச்சியத்தில் நானே ராசா நானே மந்திரி என்ற இறுமாப்புடன் போன் தனது ராஜாங்கத்தை நடத்தும்.

பெற்றவர்களின் அளவுக்கு அதிகமான பயமானது அதீத அக்கறையாக மாறுகின்றது. அந்த அதீத அக்கறை குழந்தையின் சுய முன்னேற்றத்தைத் தடுக்கின்றது. உதாரணமாக ஓடி விளையாடும் பிள்ளை கீழே விழுந்துவிட்டால் உடனே அழுகின்றது. இந்த நேரம் ஒரு விழிப்புணர்வு உள்ள தாயார் குழந்தை விழுந்து விட்டது என நினைத்து அரவணைப்பார். பின்பு எல்லாம் சரியாகிவிட்டது மீண்டும் ஓடி விளை யாடு என்று குழந்தையை ஊக்கப்படுத்துவார்.

விழிப்புணர்வு இல்லாத தாயாரோ குழந்தை விழுந்ததும் தூக்கி அணைப்பார். ஆனால் ஐயையோ என் குழந்தை விழுந்து விட்டதே எனக் கலங்குவார். மீண்டும் இப்படி நீ ஓடி விளையாடினால் அடிபடும் கவனமாக விளையாடு கவனமாக விளையாடு எனத் தன் பிள்ளைக்கு அடிக்கடி கூறுவார். பிள்ளையைத் தன் பிடியிலிருந்து விடுவித்துக் கொள்ள அவரது மனம் தயக்கம் காட்டும். காரணம் பிள்ளைமீதுள்ள அதீத பாசமே இவ்வாறு தடையாக அமைகின்றது.

இங்கே தாயானவர் பிள்ளை வேறு தான் வேறு இல்லை என்ற ஒரு அடையாளக் கட்டமைப்பில் (symbiosis) இருந்து வெளியே வராதவராக இருப்பார். ஆனால் பிள்ளை வளர வளர தான் வேறு அம்மா வேறு எனப் புரிந்து தானாக இயங்கத் தொடங்கிவிடும். இத்தகைய கட்டமைப்பானது

குழந்தை பிறந்து எழுந்து நடக்கும் வரையிலான காலப்பகுதியில் மிகமிக அவசியமான ஒரு கட்டமைப்பாகும். ஆனால் உளவியல் ரீதியாகப் பார்த்தால் இந்தப் படிக்கட்டிலிருந்து அடுத்த கட்டத்துக்குப் போனால் தான் குழந்தை உடல் ரீதியாகவும் உள ரீதியாகவும் வளர முடியும். ஆரம்பக் கட்டத்தில் பிள்ளைக்கு அரவணைப்பும் பாதுகாப்பும் தேவை. அந்தக் கட்டத்திலிருந்து பிள்ளை வெளிவந்து இப்பொழுது தானாக இயங்க முற்படுகின்றது. இயற்கை இந்த அழகிய வளர்பு முறையைத் தானாகப் பிள்ளைக்குக் கொடுக்கின்றது. பெற்றவர்கள் அதை மறந்து ஆரம்பத்தில் தொட்டிலில் போட்டுத் தாம் சீராட்டிய குழந்தையே இப்பொழுது மூன்று வயதை எட்டியுள்ளது என்பதை விழிப்புணர்வு இல்லாத பெற்றோர்கள் மறந்து விடுகிறார்கள்.

இங்கு மீண்டும் ஆரம்பத்தில் நான் குறிப்பிட்ட கங்காரு அம்மா நம் நினைவுக்கு வருகின்றார். குழந்தை தாயாரின் அரவணைப்பில் இருக்கும் அதே வேளை தன்னைச் சுற்றியுள்ள உலகத்தை அறிய விரும்பு கின்றது. கங்காரு அம்மா குழந்தையை சற்று வெளி உலகைப் பரி சோதிக்க அனுமதித்து அதே வேளை பிள்ளைக்குத் தன் பாதுகாப்பையும் கொடுக்கின்றது.

விடுப்பும் ஆர்வமும் துடிதுடிப்பும் மூன்று வயதில் அதிகமாக இருக்கும். இக்காலத்தில் குழந்தையின் குழப்படிகளில் எதைத் தடுப்பது எதை அனுமதிப்பது என்ற போராட்டம் பெற்றவரிடம் உண்டாகும்.

குழந்தை சமையலறையில் உள்ள பாத்திரங்களை எடுத்து உருட்டுகின்றது. தண்ணீரில் விளையாட விரும்புகின்றது.அரிசியை எடுத்துப் பானையில் கொட்டுவதாக நினைத்து நிலத்தில் கொட்டி விடு கின்றது. மீண்டம் எடுத்து அரிசியில் தண்ணீரை ஊற்றுகின்றது. நிலத்தில் ஓடும் தண்ணீரை வேடிக்கை பார்க்கின்றது. இடைக்கிடையே அம்மா அப்பா தன் கண்களுக்கு எட்டக் கூடிய தூரத்தில் இருக்கிறார்களா என அடிக்கடி கவனித்தபடி விளையாடுகின்றது. ஓடி வந்து அவர்களுக்குத் தான் கண்டெடுத்த பொருட்களைக் காட்டுகின்றது. அவர்கள் மடியில் அமர் கின்றது. கட்டி முத்தம் கொடுத்துவிட்டு மீண்டும் ஓடி விளையாடுகின்றது.

அம்மா வேறு தான் வேறு என்று உணரத் தொடங்கும் பிள்ளை தன்னைச் சுற்றியுள்ள உலகத்தை ஆராயத் தொடங்குகின்றது. இப் பொருட்களை எடுக்காதே குளப்படி செய்யாதே எனத் தாயார் கூறினால் மீண்டும் அதையே செய்யக் குழந்தை விருப்பப்படுகின்றது. இல்லை என்ற

சொல் இக்கால கட்டத்தில் பிள்ளைகளுக்குப் பிடித்த சொல்லாக இருக்கின்றது. சொல் பேச்சுக் கேட்டு நட என்றால் இல்லை இல்லை என மறுத்துத் தன் செயல்களைச் செய்கின்றது. மெல்ல மெல்ல தான் யார்? தன்னால் என்ன செய்ய முடியும் என்ன செய்ய முடியாது? என்பதைக் குழந்தை பரிசோதித்துப் பார்க்கின்றது.

பெற்றவரைப் பொறுத்தவரை இக்காலகட்டம் மிகவும் சிக்கலான கட்டமாகும். குளப்படிகளில் எதை ஏற்பது எதைத் தடுப்பது என்ற தடு மாற்றம் பெற்றவருக்கு உண்டாகும். பிள்ளைக்கோ பிடிவாதம் அதிக மாகும். பொறுமையும் புரிதலும் பெற்றவர்களிடம் இருந்தால் இக்கால கட்டத்தைக் கடந்து வரப் பெற்றவர்கள் பிள்ளைகளுக்கு உதவ முடியும்.

### 3. தான் யார் என்ற அடையாளம் உருவாகும் கட்டம் –The identity phase

மூன்றிலிருந்து நான்கு வயது முடியும் வரையிலான காலகட்டம்

மேலே குறிப்பிடப்பட்ட இரு வளர்ச்சிக் கட்டங்களிலும் குழந்தை யின் ஆளுமைக்கும் வளர்ச்சிக்கும் அத்திபாரம் போடப்பட்டுள்ளது. இந்தக் கால கட்டத்தில் குழந்தை தன்னைச் சுற்றி சுவர்களை எழுப்பித் தான் யார் என்பதைக் கண்டு பிடிக்கும் காலமாக உள்ளது. பெற்றவர்கள் மிகவும் நிதானமாக எது சரி எது பிழை என்பதை உணர்ந்து நடப்பது மிக மிக அவசியம். பிள்ளைகளின் உணர்வுகளுக்கு மதிப்புக் கொடுப்பதுடன் எது சரி எது தப்பு என்பதைப் பிள்ளைக்கு உணர்த்த வேண்டும்.

ஒலிவரும் அவன் தம்பி பீற்றரும் விளையாடிக் கொண்டுள்ளனர். தம்பியார் ஒலிவரின் விளையாட்டுக் காரை எடுத்துத் தூர வீசிவிட்டான். ஒலிவருக்குக் கோபம் வந்து தம்பியை அடித்து விடுகின்றான். இப்பொழுது ஒலிவரின் அம்மா வருகின்றார்.

“ஒலிவர் எனக்கு உனது கோபம் புரிகின்றது. ஆனால் நீ தம்பியை அடித்தது தப்பு. அதற்காகத் தம்பியிடம் நீ மன்னிப்புக் கேட்க வேண்டும்.”

ஒலிவர் மன்னிப்புக் கேட்கின்றான். ஆனாலும் தான் குற்ற மற்றவன் தம்பியே தப்புச் செய்தவன் என மனம் வருந்துகின்றான்.

அம்மா தம்பி பீற்றரிடம் சொல்கிறார்.

“பீற்றர் நீயும் அண்ணாவிடம் மன்னிப்புக் கேட்டுக் கொள். உனது பிரச்சனையும் எனக்குப் புரிகின்றது. உனக்கு அண்ணா விளையாடிய கார் தான் வேண்டும் என்றால் நீ அண்ணா விளையாடி முடிக்கும் வரை

காத்திருக்க வேண்டும். காத்திருந்து விளையாட்டுச் சாமான்களை எப்படி வேண்டுவது என்பதும் மற்றவரது விளையாட்டை நீ குழப்பக் கூடாது என்பதும் நீ தெரிந்து வைத்திருக்க வேண்டும். காத்திருப்பது என்பதும் விளையாட்டில் நீ கற்றுக் கொள்ள வேண்டிய ஒரு விதிமுறையாகும்.இதை நீ விளங்கிக் கொள்ளாது விட்டால் நீ எவருடனும் ஒழுங்காக விளையாட முடியாது. உனக்கும் விளையாட நண்பர்கள் கிடைக்க மாட்டார்கள்."

பீற்றர் மன்னிப்புக் கேட்கின்றான். அண்ணண் தம்பி ஒருவரை ஒருவர் கட்டியணைக்கின்றனர்.

மேற் கூறப்பட்ட நிகழ்வானது ஒரு விழிப்புணர்வுள்ள அம்மாவின் செயற்பாடாக இருக்கும்.

விழிப்புணர்வு இல்லாத அம்மா என்ன செய்வார்.?

காரைப் பறித்து வைத்துவிடுவார். குழந்தைகள் அது வேண்டும் என அடம்பிடித்து அழுவார்கள். இப்போது கோப்பட்டுக் கத்தலாம் .அல்லது குழந்தைகளைக் குழப்படி செய்ததற்காக அடிக்கலாம்.

தண்டனை கொடுப்பதன் மூலம் தான் அவர்களைத் திருத்தி விட்டதாக நினைக்கலாம். ஆனால் மறுபடியும் ஒலிவர் தம்பிக்கு அடிப் பான். ஏன் என்று கேட்டால் தப்புச் செய்தால் அம்மா எனக்கு அடிக்கின்றார். அப்படியே நானும் தம்பிக்கு அடித்துத் திருத்துவேன் எனக் கூறுவான்.

இந்த இடத்தில் ஒலிவரின் அம்மா சிக்கலை விளக்கித் தீர்வையும் கூறியுள்ளார். மற்றவர்களை எவ்வாறு மரியாதையாக நடத்த வேண்டும் என்ற அறத்தைச் சொல்லிக் கொடுத்துள்ளார். இதன் மூலம் இந்த இரு சகோதரர்களையும் நல்லவர்களாக வளர்ப்பதற்கான அத்திபாரத்தைப் போட்டுள்ளார். இந்தச் சம்பவத்தில் அக் குழந்தைகள் தாம் யார் தாம் எப்படி வாழவேண்டும் என்ற அறிவைப் பெற்றுத் தமது அடையாளத்தை (Identity)வளர்த்துக் கொள்கின்றார்கள்.

பிள்ளைகள் பெரும்பாலும் உணர்ச்சி மிக்கவர்களாக இக்கால கட்டத்தில் இருப்பார்கள். புரிதலும் மொழி ஆளுமையும் குறைவாக இருக்கும். அதனால் பிரச்சனைகளை அடிப்பதால் தீர்த்துக் கொள்ளலாம் என நினைக்கின்றனர்.பெற்றவர்களும் பிள்ளைகளை அடிக்கடி அடித்துத் தான் வளர்ப்பவர்களாக இருந்தால் அவர்களது ஆளுமையும் தான் யார் என்ற அடையாளமும் தப்பான ஒன்றாக அமைவதற்குப் பெற்றவர்களே காரணமானவர்களாக ஆகிவிடுகின்றனர்.

இக்கால கட்டத்தில் குழந்தையின் மூளை வளர்ச்சியில் வலது பக்க மூளையின் செயற்பாடு கூடுதலாகவும் இடது பக்க மூளையின் செயற்பாடு குறைவாகவும் இருக்கும்.

இடது மூளையானது தர்க்க ரீதியான மொழி வளர்ச்சி கொண்ட சிந்தனையுடையது. யதார்த்தமாக என்ன நிகழ்கின்றது என்பதைப் புரிந்து கொண்டு செயற்படும். ஒரு நிகழ்வு நடந்தால் அது தொடர்பான மொழிப் பிரயோகம் புரிதல் என்பவற்றில் நல்ல திறன் கொண்டதாக இடது மூளை இயங்கும். கணிதம், தர்க்கம் போன்றவற்றில் வல்லவர்களாக இருப்பவா கள் பெரும்பாலும் இடது மூளைச் செயற்பாட்டாளர்களே ஆவார்கள்.

வலது மூளையின் செயற்பாடானது உணர்வு சார்ந்ததாக இருக்கும். ஆபத்துக்களில் இருந்து தப்பித்தல் பாதுகாப்புணர்வுடன் செயற்படுதல் இலக்கியங்களிலும் கலைகளில் ஈடுபாடு கொண்டவர்கள் பெரும்பாலும் வலது மூளைச் செயற்பாட்டாளர்களே.

வலது மூளைக்கும் இடது மூளைக்குமான தொடர்பானது நன்றாக இருந்தால்தான் குழந்தையின் மூளையில் தகவல்கள் சரியாகப் பயன்படுத்தப்படும். அப்படி இல்லை என்றால் புரிதல் குறைவாக இருக்க மொழிப் பிரயோகமும் அது தொடர்பான விளக்கமும் அவசியமாக உள்ளது. இது சம்பந்தமான ஒரு சம்பவத்தை உங்களுடன் பகிர்ந்து கொள்கின்றேன்.

எங்கள் பள்ளியில் நான்கு வயது நிரம்பிய நிலா சென்ற கிழமை திடீரென வாந்தி எடுத்தாள் .அவளை அரவணைத்து ஆறுதல் கூறினேன். அவள் உடம்பு மிகவும் சூடாக இருந்தது. அவளது உடல் வெப்பத்தை அளந்தபோது அவளுக்குக் கடுமையான காய்ச்சல் இருப்பது தெரிந்தது. உடனே அவளது தந்தைக்குப் போனில் நிலைமையை எடுத்துச் சொன்னேன். தந்தையார் வந்து அழைத்துப் போகும் வரை நிலா பயந்து பேனவள் போல இருந்தாள்.

ஒருவாரத்தின் பின் நலமாகி நேற்று மீண்டும் நிலா பள்ளிக்கு வந்தாள். ஆனால் பழைய நிலாவாக வரவில்லை. தந்தையின் பின்னால் மறைந்தபடியும் அழுதபடியும் இருந்தாள். அப்பா நானும் உங்களுடன் வேலைக்கு வரப்போகிறேன். பள்ளியில் என்னை விட்டுவிட்டுப் போக வேண்டாம் எனக் கூறி அழுதாள். குழந்தையின் அழுகையைக் கேட்ட பொழுது எனது மனமும் கனத்தது. ஆனால் நிலாவின் தந்தை எவ்விதமாக வும் பதற்றப்படாது நிலாவை வாரி அணைத்தபடி ஒரு கதிரையில்

அமர்ந்தார்.

அவர்களது உரையாடல் பின்வருமாறு அமைந்தது.

“நிலாக்குட்டிக்கு போன கிழமை காச்சல் சத்தி எல்லாம் வந்தது அல்லவா”

“ஓம்” அப்பா.

அப்போது என்ன நடந்தது?”

நான் சத்தி எடுத்தபோது பயந்து அழுதேன். கலா என்னை தன் மடியில் இருத்தி அழவேண்டாம் எனக் கூறினார்.”

அதன் பிறகு என்ன நடந்தது”?

நிலா இப்பொழுது அமைதியாகிவிட்டாள். என்ன ஆச்சுது? ” எனத் திகைத்து நின்றாள்.

நான் அழுதேன் நான் பயந்தேன்”

அப்புறம் கலா உங்களுக்குக் காய்ச்சல் இருக்குதா எனப் பார்த்தார்.”

ஓம் ஓம்.”

நிலாக்குட்டிக்குக் காய்ச்சல் எனத் தெரிந்த உடனே கலா அப்பாவுக்குப் போன் எடுத்தார். நிலாவுக்குக் காய்ச்சலும் சத்தியுமாக இருக்குது. நீங்கள் உடனே வந்து நிலாவைப் பாருங்கள் என்று சொன்னார். நானும் உடனே வேலை இடத்தில் லீவு எடுத்துக் கொண்டு வந்து விட்டேன்.”

ஓம் அப்பா எனக்கு நினைவு வருகின்றது

அப்புறம் நாமிருவரும் டொக்டரிடம் போனோம். மருந்து வேண்டினோம். வீட்ட வந்து நிலாக்குட்டி மருந்து குடித்து விட்டு அப்பா கதை வாசிப்பதைக் கேட்டபடி நித்திரையாகப் போய்விட்டடீங்க..

நித்திரையால எழும்பினதும் காய்ச்சல் ஓடிவிட்டது.

ஆமா ஆமா நினைப்பு வருகுது அப்பா.

இப்போது நிலாவுக்குக் காய்ச்சலில்லை..நல்லா விளையாடலாம். காய்ச்சல் வந்தால் கலா மீண்டும் அப்பாக்கோ அல்லது அம்மாக்கோ போன் எடுத்துச் சொல்லுவா. நாங்கள் வந்து கூட்டிப் போவோம்.

ஓமப்பா. நான் இப்போ விளையாடப் போகிறேன்.” எனக் கூறிச்

சிட்டாய்ப் பறந்து போனாள்.

மேலே உள்ள உரையாடலின் மூலம் நிலாவின் அப்பா எவ்வாறு அவளது பயத்தைப் போக்கி அவளைச் சாதாரண நிலைக்குக் கொண்டு வந்துள்ளார் என்பதை நாம் நோக்கலாம். குழந்தைகளின் இடது மூளையின் செயற்பாடானது இந்த வயதில் குறைவாகவே இருக்கும். நிலாவின் வலது மூளையில் சென்றவாரம் நிகழ்ந்த சுகயீனமானது ஒரு விதமான துன்பமான உணர்வாகப் பதிந்து இருந்துள்ளது. இப்பொழுது நிலாவின் இடது மூளை அந்த நிகழ்வு முடிந்த ஒரு நிகழ்வு என்றோ அல்லது காய்ச்சல் வந்தால் தன்னைப் பார்த்துக் கொள்ள அப்பா உடனே வருவார் என்றோ பள்ளியில் உள்ள ஆசிரியர்கள் தன்னை அன்புடன் கவனிப்பார்கள் என்றோ சிந்திக்கக் கூடிய நிலையில் இல்லை.

வலது மூளைக்கும் இடது மூளைக்கும் இடையிலான கருத்துப் பரிமாற்றம் இங்கு இடம் பெறவில்லை. காரணம் குழந்தைகளுக்கு மூன்று வயதுக்கு மேல் தான் இடது புற மூளையின் செயற்பாடுகள் நன்றாக வளரத் தொடங்கும். உணர்ச்சி வயப்பட்ட அந்த நிகழ்வைப் பற்றிய தெளிவான விளக்கத்தைக் கொடுத்ததன் மூலம் நிலாவின் தந்தை அவளது வலது மூளைக்கும் இடது மூளைக்குமான தொடர்பை உண்டாக்க உதவி யுள்ளார். இப்பொழுது வலது இடது மூளைகளுக்கு இடையிலான தொடர்பை உண்டாக்கும் (corpus callosum) கார்பஸ் கோலொசைமம் என்ற நரம்புத் திசுக்களின் கூட்டுப்பாதை இயங்கத்தொடங்கியுள்ளது. .இந்தப் பாதை யானது இரு மூளைகளுக்குமிடையில் பாலம் போன்று அமைந்து தகவல் பரிமாற்றம் செய்வதற்கு உதவுகின்றது. அப்படிக் கதை சொல்வதன் மூலம் மொழி வளர்ச்சியும் கருத்துத் தொடர்புத் தகுதியும் குழந்தைகளுக்கு உண்டாகின்றது. இதனால் தான் கதை சொல்லிக் கொடுப்பது மிக மிக அவசியம் என குழந்தை நலவல்லுனர்கள் கூறுகின்றனர்.

கதை சொல்வதன் மூலம் பெரியவர்கள் பல காட்சிப்பிம்பங்களை பிள்ளைகளிடம் உருவாக்குகின்றனர். அந்தக் காட்சிப்பிம்பங்கள் தொடர் பான மொழிப்பிரயோகமும் கதை மாந்தர்கள் தொடர்பான புரிதலும் கதையின் கருத்துக்களும் குழந்தைகளின் மூளை வளர்ச்சிக்கு உதவு கின்றன. யார் அவர்? ஏன் அப்படிச் செய்கின்றார்? இது என்ன சாமான்? போன்ற பல வினாக்களை இந்தப் பருவத்திலுள்ள குழந்தைகள் பெரியவர் களிடம் கேட்பதை நாம் அவதானித்திருப்போம். இக்காலகட்டத்தில் பொறுமையாகவும் அன்பாகவும் பெற்றவர்கள் தம் குழந்தைகளைக்

கைப்பிடித்து அடுத்த வளர்ச்சிக் கட்டத்துக்குக் கூட்டிப் போக வேண்டும்.

**4.திறமைகள் பெருகும் கட்டம்** - The competency phase

(நான்கு முதல் ஏழு வயது )

பெற்றவர்களின் அரவணைப்பில் தன்னைச் சுற்றியுள்ள உலகத்தைப் பற்றிய ஆராய்ச்சியைக் குழந்தை தொடர்கின்றது. வெளி யுலகம் புதுமையானதாகவும் அதைப் பற்றித் தான் அறிந்து கொள்ளவும் குழந்தை ஆர்வம் காட்டுகின்றது. தன்னைவிடப் பெரியதாக உள்ள தனது சூழலின் தனது பங்களிப்பு என்ன என்றும் தன்னை அவ்வுலகில் நிலை நிறுத்தத் தான் நிறைய விடயங்களைக் கற்க வேண்டும் என்ற ஆர்வமு ம் குழந்தைக்கு உண்டாகின்றது.

புதிது புதிதாக பல விடயங்களைக் கற்கும் பொழுது அதன் தன்னம்பிக்கை வளர்கின்றது. தானாகத் தனது சப்பாத்தின் நூலை முடியக் கற்றுக் கொள்கின்றது. சின்னச் சின்னக் கைவேலைகள் செய்து அதைத் தான் செய்துவிட்டதாக அப்பா அம்மாவிடம் காட்டிப் பெருமை கொள்கின்றது. தனது சகாக்களிடம் போட்டி போட விருப்பப்படுகின்றது.

“ராதா செய்த பொம்மையைவிட நான் செய்த பொம்மை அழகாக இருக்கின்றது” என நிலா கூறுகின்றாள்.

“பீற்றரைவிட என்னால் வேகமாகச் சைக்கிள் ஓட்ட முடியும்” என ஒலிவர் கூறுகின்றான்.

பள்ளிமுடிந்து வீடுவந்ததும் “நான் வரைந்த ஓவியங்களைப் பாருங்கள்” என மாலா அடம்பிடிக்கின்றாள் “அம்மாக்கு இப்போது நேரமில்லை அப்புறமாகப் பார்க்கிறேன” எனக் கூறினால் முகம் சுருங்கி கண் கலங்கி ஒரு மூலையில் அமர்ந்து அழுகின்றாள்.

இந்தக் குழந்தைகள் எல்லோரும் தமக்கான அங்கீகாரத்தை எதிர்பார்த்து தம் திறமைகளை வளர்க்க ஆசைப்படுகின்றார்கள். அவர் களுக்கான அந்த அங்கீகாரமானது அவர்களை அடுத்த வளர்ச்சிக் கட்டத்துக்கு ஏற்றிவிடும் ஏணி என்பதை நாம் மறந்துவிடலாகாது.

நீ செய்த பொம்மை நல்லாயில்லை எனக் கூறினால் குழந்தை துவண்டுவிடுகின்றது. மீண்டும் ஒரு பொம்மையைச் செய்யும் விருப்பம் குழந்தைக்கு இல்லாது போகின்றது. பெற்றவரது ஊக்கம் கொடுக்கும் வார்த்தைகள் இக்காலகட்டத்தில் குழந்தைகளுக்குத் தன்னம்பிக்கையை

கொடுப்பனவாக இருக்க வேண்டும். உனது ஓவியத்தைவிட மாலாவின் ஓவியம் நன்றாக உள்ளதே எனக் கூறினால் போட்டியும் பொறாமையும் நிலாவைத் துரத்தத் தொடங்கும்.

குழந்தைகளின் சின்னச் சின்ன படைப்புக்களும் அவற்றுக்கு நாம் கொடுக்கும் பாராட்டுக்களும் தான் அடுத்த படைப்பை அவர்கள் படைக்க ஒரு பாதையை உருவாக்கும். சின்னச் சின்ன வெற்றிகளின் படிக்கட்டுகளில் ஏறி ஏறி அவர்கள் மேலும் மேலும் பல வெற்றிகளை அடைவதற்கு பெற்றவரினதும் ஆசிரியர்களதும் அன்பும் அரவணைப்பும் மிக மிக அவசியமானது. பெண் குழந்தைகள் அப்பாச் செல்லங்களாகவும் ஆண் குழந்தைகள் அம்மாச் செல்லங்களாகவும் இக்காலகட்டத்தில் இருப்பார்கள். **இவர் என் அப்பா அவர் என் அம்மா இவள் என் தங்கை இவன் என் தம்பி இது என் பாடசாலை இவர் என் ஆசிரியர் இவன் என் நண்பன் எனத் தன்னைச் சுற்றியுள்ள உலகம் தனக்கானது என்ற ஆனந்தத்தில் குழந்தை தன் அடுத்த கட்ட வளர்ச்சியை நோக்கி அடியெடுத்து வைக்கின்றது.**

### **5.குழு நிலைக் கட்டம்**– The group phase.

(ஏழு வயது முதல் பன்னிரண்டு வயது வரை)

வீடு என்ற பாதுகாப்பும் அரவணைப்பும் நிறைந்த கூட்டிலிருந்து குழந்தை இப்பொழுது வெளி உலகை எட்டிப் பார்க்கின்றது. எந்த ஒரு கட்டுப்பாடுகளும் மேற்பார்வைகளும் இல்லாத ஒரு உலகம் நண்பர் களால் உருவாக்கப்பட்ட அந்த உலகத்தை அது எட்டிப்பார்க்கின்றது. முதல் முதலாகப் பெற்றவரின் மேற்பார்வையோ கட்டுப்பாடோ இல்லாது சுதந்திரமாக இயங்கத் தொடங்குகின்றது. பெரும்பாலான பெற்றவர் களுக்கு இக்கால கட்டம் நிறைந்த பயத்தைக் கொடுக்கும். ஒரு சிறு குழந்தைக்குப் பிரச்சினை வந்தால் அக்குழந்தை நம் கண்முன் இருந்தால் உடனே குழந்தையைத் தூக்கிப் பார்க்க முடியும். ஆனால் இப்பொழுது குழந்தை யாருடன் பேசுகின்றது, எங்கே போகின்றது என்ன சாப்பிடு கின்றது? போன்ற கேள்விகளுக்குப் பெற்றவருக்கு விடை தெரிவதில்லை. தெரிந்தாலும் கண்காணிக்க முடிவதில்லை.

இக்கால கட்டங்களின் குழந்தைகளுக்கு அவர்களது நட்பு வட்டமே உலகமாகத் தெரியும். வீட்டுக்கு வெளியே புதிதாகக் கிடைக்கும் அன்பும் நட்பும் இவர்களுக்குப் புதிய அடையாளங்களையும் ஆளுமைகளையும் பெற்றுக் கொடுக்கின்றது. நட்புக்காக எதையும் செய்யலாம் என மனம்

விரும்பும். தான் எப்படி இருந்தால் தனது நண்பர்கள் தன்னை எற்றுக் கொள்வார்கள் என நினைத்துக் குழந்தை அதற்கான எல்லா முயற்சி களையும் எடுக்கின்றது.

இந்தக் காலகட்டத்தில் குழந்தையிடம் தகவல் பெறுவதற்கு முடியாத நிலையில் உள்ள பெற்றவர்கள் குழந்தையின் நண்பர்களுடன் தொடர்பில் இருப்பது அவசியமாகும். காரணம் குழந்தை எப்பொழுதும் நண்பர்களுடன்தான் இருக்கும். குடும்ப உறுப்பினரைத் தவிர உலகில் அன்பு செலுத்தவும் அக்கறை கொள்ளவும் வேறு ஒரு உலகம் உண்டு எனக் குழந்தை உணரும். தன் மீது அன்பு செலுத்தும் நண்பர்கள் மீது தானும் அன்பாக இருக்கக் கற்றுக் கொள்கின்றது. அத்துடன் மற்றவர் களுடன் ஒப்பிட்டுத் தன் ஆளுமையையும் பெருக்கிக் கொள்கின்றது.

இக் கால கட்டத்தில் பெற்றவர்கள் பிள்ளைகளின் நட்பு வட்டத்தை ஊக்கம் கொடுத்து ஆதரித்தால் பிள்ளைகள் தாம் ஒரு பாதுகாப்பான சூழலில் இருப்பதாக உணர்வார்கள். தமக்கு ஒரு பிரச்சினை வந்தால் பெற்றவரிடம் கூற முடியும் என்ற நம்பிக்கை அவர்களுக்கு உண்டாகும். சுற்றியுள்ளவர்களிடமிருந்து அன்பைப் பெறவும் மீண்டும் அன்பைக் கொடுக்கவும் ஆனந்தமாக இருக்கவும் குழந்தை கற்றுக் கொள்கின்றது. சுயநலம் இல்லாத அன்பும் நட்பின் இருத்தலும் உலகம் வாழத்தக்க ஆனந்தமான இடம் என்பதைக் குழந்தைக்குக் கற்றுக் கொடுக்கின்றது.

இந்தக் காலகட்டத்தில் பெற்றவர்கள் இவர்களது நட்பு வட்டங் களைப் புரிதலுடன் நடத்துவது அவசியமாகும். பிள்ளை மீது அதீத அக்கறையுடைய பெற்றவர்கள் பிள்ளைகள் மீதோ அவர்கள் நண்பர்கள் மீதோ தேவையில்லாது சந்தேகப் பட்டு பிள்ளைகளைத் தனிமைப்படுத்த முயல்வார்கள். இப்படிப்பட்ட பிள்ளைகள் வெளியுலகத் தொடர்பற்றவர் களாக வளர்வார்கள். இத்தகைய நிலை குழந்தைக்கு ஆரோக்கியமான மன வளர்ச்சியைக் கொடுக்கமாட்டாது. மாறாகத் தன்னம்பிக்கையற்ற மனிதர்களையே உருவாக்கும்.

இக்கால கட்டத்தில் ஒரு அம்மாச் சிங்கம் தன் குட்டிகளை எவ்வாறு பாதுகாத்து வளர்க்கின்றதோ அவ்வாறே விழிப்புணர்வுடைய பெற்றவர்களும் தமது பிள்ளைகளை வளர்க்க வேண்டும் என Harville Hendrik and Helen Hunt ஆகிய இரு இணையாசிரியர்களும் Giving the love that heals என்ற தமது நூலில் குறிப்பிடுகின்றனர். அம்மாச் சிங்கமானது தனது குழந்தைளைப் பாதுகாக்கச் சிலவேளை அவர்களை நோக்கி வேகமாக

ஓடும். சில வேளை தனித்து இயங்கப் பழக்கப்படுத்தும்.சில வேளை குட்டிகள் தாமாகவே தம்மைப் பாதுகாக்கவும் தனித்தியங்கவும் அவை தாமே தவறுகள் செய்து பின் தாமாகவே திருந்திவரட்டும் என விட்டுவிட்டுச் சும்மா இருக்கும். இத்தகைய ஒரு வளர்ப்பு முறையானது குழந்தைகளைப் பாதுகாக்கும் பொறுப்பையும் அதே நேரம் அவர்களைச் சுயமாக இயங்க வும் சிந்திக்க வைக்கவும் பொறுப்பையும் பெற்றவர்கள் தமது கவனத்தில் கொள்ள வேண்டும் என்பதையும் எமக்கு எடுத்துக் காட்டுகின்றது.

திறமை தொடர்பாக ஏற்படும் சகாக்களுடனான போட்டி, பொறாமை, நட்பு வட்டத்தில் உண்டாகும் விரிசல்கள், அவமதிப்புக்கள் என்பன பிள்ளைகள் மனதில் தாக்கங்களை உண்டாக்கலாம்.இந்த நேரத்தில் பெற்றவரின் அன்பும் அரவணைப்பும் ஆலேசனைகளும் பிள்ளை களைத் தப்பான வழிகளில் செல்ல விடாது பாதுகாக்கும் அரண்களாக அமைகின்றன. பெற்றவருக்கும் பிள்ளைகளுக்கும் இடையிலான பந்தமானது வலுவாக இருந்தால் எப்படிப் பட்ட பிரச்சினைகளையும் தாண்டி அவர்களால் முன்னேற்றமடைய முடியும். அதுவே அவர்களை அடுத்த கட்ட வளர்ச்சிப்படியில் ஏற்றிவிடுகின்றது.

**6. பருவவயது** – The intimacy phase.

(12 முதல் 18 வயது வரை) நெருக்கடிகள் நிறைந்த வயது.

“ஏன் அம்மா! சும்மா சும்மா நொய் நொய் எண்டு எதாவது சொல்லிக் கொண்டே இருக்கிறியள்?”

“அப்பா எதுக்காக எப்பவும் எனக்குக் பின்னாலே வந்து காவல் காக்கிறார்?”

“நீ இப்ப நல்லா மாறிவிட்டாய். முன்பெல்லாம் சொன்ன சொல் தட்டாத பிள்ளையாக இருந்தாய். இப்போ அம்மா என்ன சொன்னாலும் உடனே எரிஞ்சு விழுகிறாய்”

“உன்ர பிள்ளைக்கு யாரோ சூனியம் வைச்சிட்டாங்கள்”

“சும்மா இருங்கப்பா நான் என்ர பிள்ளையப்பற்றிக் கவலைப் படுகிறன். நீங்கள் பகிடி விடுகிறியள். நீங்கதான் செல்லம் கொடுத்துக் கெடுத்துப் போட்டியள். வயித்தில நெருப்பைக் கட்டிக் கொண்டு இருக்கிறமாதிரியெல்லோ இருக்குது.”

"நான் எங்க செல்லம் கொடுத்னான். நீ தான் இப்பவும் உன்ர பிள்ளைய வயித்தில சுமக்கிறது போல அவதிப்படுகிறாய்.தொப்பிள் கொடி வெட்டிப் பிள்ளையை வெளியே எடுத்ததை மறந்திட்டியா? நமக்குக் குழந்தை பிறந்தது, அழுதது, பால் குடிச்சது, விரல் சூப்பினது, சிரிச்சது, உடம்பு புரட்டினது, உடும்பு பிடிச்சது, தவழ்ந்தது, சப்பாணி கொட்டி இருந்தது, எழும்பி நின்றது, தத்தித் தத்தித் தளிர்நடை நடந்தது, ஓடி விளை யாடியது, பள்ளிக்குப் படிக்கப் போனது…இப்பிடியாக எத்தனையோ விடயங்கள் நடந்து முடிஞ்சுது நீ தான் எல்லாத்தையும் மறந்திட்டாய். நம்ம பிள்ளை வளர வளர அது வித்தியாசமாகத்தான் இருக்கும். அப்பிடி இல்லை என்றால்தான் ஏதோ பிரச்சினை இருக்கு என நீ நினைக்க வேண்டும்."

"உங்களுக்கென்ன நொந்து பெத்தது நான் தானே. எனக்குத் தான் துடிப்புக் கூடவாக இருக்கும். கூடுவார் கூட்டம் சரியில்லை. அல்லது என்ர பிள்ளை ஒரு காலத்திலும் இப்பிடி இருந்ததில்லை."

"கெட்ட சகவாசங்களைத் தவிர்க்கவும் பிடிச்ச சனியன் மாறவும் சனிக்கிழமை விரதமிருந்து எள்ளெண்ணெய் எரிக்க வேணும். கூடவே கோயில் ஐயாவைக் கொண்டு சாமி நூல் கட்டிவிட வேணும்."

மேலே கூறப்பட்ட பெற்றவர்களின் உரையாடல்களை நாம் கேட்டு வளர்ந்திருப்போம்.மேலும் பருவ வயது வந்த பிள்ளைகள் உள்ள வீடுகளில் பொதுவாக எல்லாப் பெற்றவரும் புலம்பும் புலம்பலாகவும் இத்தகைய உரையாடல்களைக் கேட்டிருப்போம்.அடிக்கடி வீட்டில் கருத்து வேறுபாடுகள் உருவாகி வீடே ஒரு குருஷேத்திரமாக மாறுவதுண்டு. சாப்பிட்ட கோப்பைகள் எறியப்படுவதும் கதவுகள் அடித்துச் சாத்தப் படுவதும் அடிக்கடி நிகழும் நிகழ்வாக அமைவதுண்டு. பருவ வயதுப் பிள்ளைகள் உள்ள வீடுகளில் ஏன் அப்படி ஒரு மாற்றம் உண்டாகின்றது என்பதை உணர பருவவயதின் உளவியல் பண்புகள் என்ன என்பதை நாம் உற்றுநோக்க வேண்டும்.

1.பிள்ளைகளின் உடல் தோற்றத்தில் மாற்றங்கள் உண்டா கின்றன. பாலியல் உறுப்புக்களின் வளர்ச்சியும் உடலில் வலிமையும் உண்டாகின்றது. கோமோன்களின் தாக்கத்தினால் உணர்வு ரீதியாகவும் உடல் ரீதியாகவும் ஏற்படும் மாற்றங்கள் இவர்களின் நாளாந்த நடவடிக் கைகளில் பெரிய மாற்றங்களைக் கொண்டு வருகின்றன. திடீரெனக் கோபப்படுதல் பதற்றப்படுதல் கவலைப்படுதல் போன்ற நடவடிக்கைகளைப் பெற்றவர்களால் அவதானிக்க முடியும்.

2.இக்காலகட்டத்தில் நான் யார்? என்ற சுய தேடலும் தனது அடையாளம் என்ன என்பதைக் கண்டுபிடிப்பதிலும் பிள்ளைகள் ஈடுபடுவார்கள். நான் எப்படி வாழவேண்டும் என்ன படிக்கவேண்டும் எத்தகைய தொழில் செய்ய வேண்டும் என்பன போன்ற எதிர்காலத் திட்டங்களைத் தீட்டுவார்கள். பெரிய பெரிய இலட்சியங்களை அடைய வேண்டும் சமுதாயத்துக்கு உதவவேண்டும் என்பன போன்ற சிந்தனைகள் இவர்கள் மனதில் குடிபுகுந்து கொள்ளும். பொது நலம் வளரும். அரசியல் சமுதாயச் சீர்திருத்தங்களில் நாட்டம் அதிகமாகும். தலைமைப் பண்பு களை வளர்த்துக் கொண்டு வாழ்வில் முன்னேற விருப்பப்படுவார்கள்.

3.மேற்கூறப்பட்ட முன்னேற்றமான சிந்தனைகளையுடைய பிள்ளைகளிடம் முரண்பாடுகளான சிந்தனைகளும் அதிகம் உண்டாகும். பெற்றவர்களின் சிந்தனையை விடத் தமது சிந்தனையே முதன்மையானது என்ற நினைப்பு உருவாகும். நண்பர்கள் வாக்கு வேதவாக்காகவும் பெற்றவர் வாக்கு நஞ்சு போன்றும் நினைக்கத் தோன்றும்.

4.வீட்டுச் சூழல் நன்றாக அமைந்து பெற்றவரின் அரவணைப்புடன் முன்னேறிய பிள்ளைகள் நல்ல வளர்ச்சியை அடைந்து நாட்டுக்கும் வீட்டுக்கும் பயனுள்ளவர்களாக வாழ்வார்கள். அவ்வாறு அமையாது போகுமிடத்து பிள்ளைகள் தீய பழக்கவழக்கங்களுக்கு அடிமையாகி விடுவார்கள். புகைபிடித்தல், மதுவுக்கு அடிமையாகுதல், போதை வஸ்துக்களின் பழக்கங்கள், வன்முறைகளில் நாட்டம் போன்ற பலவித மான தீயபழக்கங்களும் இவர்களைச் சுற்றிவளைப்பதற்கு வாய்ப்புக்கள் அதிகம். சிறிய குழந்தை தப்புச் செய்கின்றதா எனப் பெற்றவர் உடனே அறியமுடியும். காரணம் அச்சிறு குழந்தை எப்பொழுதும் பெற்றவரின் அருகில் அல்லவா இருக்கின்றது. பருவவயதுப் பிள்ளைகள் இருபத்திநான்கு மணி நேரமும் பெற்றவர் அருகில் இருப்பதில்லை.அப்படி இருப்பதும் தப்பு. உலகைப் புரியவேண்டுமானால் குழந்தை பெற்றவர் என்ற கூட்டைவிட்டு வெளியே வந்துதான் ஆகவேண்டும்.

## பெற்றாரின் பயம் போகவும் பிள்ளைகளின் எதிர்காலம் நன்றாக அமையவும் நாம் என்ன செய்ய வேண்டும்?

1.பெற்றவர்களுக்கும் பிள்ளைக்குமான பந்தமானது மிகவும் ஆரோக்கியமானதாக இருக்கவேண்டும். அந்தப் பந்தமானது எதிர் பார்ப்பில்லாத அன்பினால் கட்டியெழுப்பப்படவேண்டும்.

2.பிள்ளைகளுடனான கருத்துத் தொடர்பானது நன்றாக அமைய வேண்டும். பிள்ளைகளுக்குச் சரிசமமான மதிப்புக் கொடுப்பதாக உரையாடல்கள் அமைய வேண்டும். பிள்ளைகளை முதலில் பேசவிட்டுப் பின்னர் பெற்றவர்கள் நிதானமாகக் கதைக்க வேண்டும்.

சில குடும்பங்களில் பிள்ளைகள் தாயிடம் பேசுவது கூடுதலாகவும் தந்தையுடன் பேசுவது குறைவாகவும் இருப்பதுண்டு.

“அம்மா அப்பாட்டக் கேட்டுச் செல்லுங்கோ” எனப் பிள்ளைகள் தாயார் பின்னால் நின்று தகப்பனுடன் கதைப்பார்கள்.

“உன்ர மகன் என்ன சொல்லிறான்”? தன் கைகளைப் பின்னால் கட்டியபடி தகப்பன் தாயிடம் கேட்பார். அப்பாச் செல்லமான மகள்கள் அம்மாவிடம் கதைப்பது குறைவாகவும் அம்மாச் செல்லமான மகன்கள் அப்பாவிடம் கதைப்பது குறைவாகவும் இருக்கும். இங்கே ஆரோக்கிய மான கருத்துப் பரிமாற்றம் நடக்க வாய்ப்பில்லை.

சில குடும்பங்களில் பிள்ளைகள் கதைப்பதற்கு முன்பே அதிகார ரீதியில் பெற்றவர் கதைப்பார்கள். அல்லது தப்பு நடக்கக் கூடாது என்ற பதட்டத்திலும் பயத்திலும் உணர்ச்சிவசப்பட்டுக் கோபமாகக் கதைப் பார்கள். திட்டுவார்கள். உரையாடல்கள் சம நிலையில் அல்லாது தாறு மாறாக அமைந்து விடும்.

என்ர பிள்ளை என்னோடு கெட்ட வார்த்தை கதைக்கின்றான் எனப் பெற்றவர்கள் புலம்புவார்கள். பிள்ளைகள் கெட்ட வார்த்தைகளைக் கதைக்கிறார்கள் என்பதைவிடவும் அவர்கள் கேட்ட வார்த்தைகளையே அதாவது அப்பா அம்மாவிடம் கேட்டுப் பழகிய வார்த்தைகளையே கதைப்பார்கள்.

அப்பாவுடனோ அம்மாவுடனோ தம் பிரச்சனைகளைக் கதைக்க முடியாது என நினைக்கும் பிள்ளைகள் அத்தகைய அன்பையும் அரவணைப்பையும் தேடித் தப்பான இடங்களில் கூட்டுச் சேர்ந்து போதைப் பொருட்களுக்கு அடிமையாவார்கள்.

3.சில குடும்பங்களில் பெற்றவரது ஆளுமை குறைவாக இருப்ப துண்டு. அங்கே பிள்ளைகள் என்ன செய்தாலும் சரி எனச் செல்லம் கொடுக்கும் பெற்றவர்கள் இருப்பார்கள். அத்தகைய குடும்பங்களில் பிள்ளைகள் பெற்றவர் போலவும் பெற்றவர்கள் பிள்ளைகள் போலவும் நடந்து கொள்வார்கள். இப்படியான சூழல் இருந்தால் பிள்ளைகள் தப்பான

வழியில் செல்வதற்கு வாய்ப்புக்கள் அதிகமாக இருக்கும்.

4.தினமும் பிள்ளைகளுடன் உரையாடுவதைக் குடும்பத்தில் ஒரு பழக்கமாக கொண்டுள்ள குடும்பங்களில் கருத்துப் பரிமாற்றம் இலகுவாக அமையும். பிள்ளைகளின் கருத்துக்களைப் பெற்றவர்கள் செவிமடுத்துக் கேட்பதுடன் அவர்கள் கருத்துக்களுக்கும் முக்கியத்துவம் கொடுப்பது அவசியமாகும். கட்டுப்பாடும் அன்பும் நிறைந்துள்ள குடும்பத்தில் உள்ள பிள்ளைகள் திசை மாறிப் போவதற்கான சந்தர்ப்பங்கள் ஏற்படப் போவதில்லை.

5.தம்மைச் சுற்றியுள்ள குடும்பங்களில் உள்ள பிள்ளைகளுடன் தினமும் தம் பிள்ளைகளை ஒப்பிட்டு அவர்களைப் போல இவர்களும் வர வேண்டும் என்ற ஒரு பெரிய எதிர்பார்ப்பைப் பெற்றவர்கள் பிள்ளைகள் மீது திணிப்பார்கள்.

பிள்ளைகளின் படிப்பையும் எதிர்காலத்தையும் பிள்ளைகளே தீர்மானிக்க உரிமையற்றவர்களாக இருப்பார்கள். பரம்பரைப் பெருமை கள் பேசுவதும் தம்மால் நிறைவேற்ற முடியாத ஆசைகளைத் தமது பிள்ளைகள் நிறைவேற்ற வேண்டும் என நினைப்பதும் பிள்ளைகளின் படிப்பானது தமது கௌரவச்சின்னமாக அமையவேண்டும் என்ற நிலைப்பாடும் பெற்றவர்கள் பிள்ளைகளுக்கு மன அழுத்தங்களைக் கொடுப்பதற்கான காரணங்களாக அமைகின்றன.

இப்படிப்பட்ட சிந்தனைகளில் இருந்து விடுபட்டுப் பிள்ளைகளைச் சுயமாகச் சிந்தித்து முடிவு எடுப்பதற்குப் பெற்றவர்கள் இடம் கொடுக்க வேண்டும். இப்படிக் கூறுவதன் மூலம் பெற்றவர்கள் பிள்ளைகளின் கல்வியில் அக்கறையில்லாது இருக்க வேண்டும் என்பது கருத்தல்ல. எந்த எந்தப் பிள்ளைக்கு என்ன என்ன திறமை உண்டோ எந்த எந்தத் துறை களில் அவர்கள் கால் பதிக்கப் பிரியப்படுகிறார்களோ அந்த அந்த வழி களில் அவர்கள் முன்னேற்றமடையப் பெற்றவர் உதவுவார்களேயானால் பிள்ளைகளுக்கு அத்தகைய பெற்றவர்கள் வரமாகவே வந்து அமைகிறார்கள்.

6.பொதுவாக பருவவயதிலுள்ள பிள்ளைகளுக்கு உடல் ரீதியான வளர்ச்சி ஏற்படும் பொழுது கோமோன்களின் தாக்கங்களும் அதிகமாக இருக்கும். இதனால்தான் அடிக்கடி கோபப்பட்டுக் கத்திக் கதைப்பார்கள். உயர் இரத்த அழுத்தம் உண்டாகும் போது தம் நிலை இழந்து கத்துவதும் வீட்டிலுள்ள பொருட்களைப் போட்டு உடைப்பதும் சர்வசாதாரணமாக

நடைபெறும் நிகழ்வுகளாகிவிடுகின்றன. இத்தகைய நிலையிலிருந்து இவர்களை மீட்டெடுப்பதற்குப் பிள்ளைகளைத் தினமும் உடற்பயிற்சி செய்வதற்குப் பெற்றவர் ஊக்குவிக்க வேண்டும். தியானம், யோகா, உடற்பயிற்சி, போன்ற விடயங்களுக்குப் பிள்ளைகளை மட்டும் அனுப்பாது பெற்றவர்களும் சேர்ந்து செல்ல வேண்டும். இதன் மூலம் ஒரு நட்புப் பாலம் உருவாகும். பிள்ளைகளுடன் அதிக நேரம் இருக்கமுடியாத பெற்றவர்கள் இந்தக் காலகட்டத்தில் பிள்ளைகளுடன் உறவுப்பாலத்தை உருவாக்க இத்தகைய நிகழ்வுகள் வழிவகுக்கின்றன.

மனிதர்களாகிய நாம் நமக்குப் பிடித்தமான விடயங்களில் அக்கறை யாகவும் அவைபற்றிய அறிவுத் தேடல்களிலும் ஈடுபடுகின்றோம். உதாரணமாக சமையல், கடவுள், நாகரீக உடைகள், நகைகள், நமது உத்தியோகம், உடல் நலம்....இப்படியாக எத்தனையோ விடயங்கள் மீது நாம் கவனம் கொள்கின்றோம். அவ்வாறே நம் குழந்தைகள் தொடர்பான அறிவார்ந்த தகவல்களையும் உளவியல் சிக்கல்களையும் நாம் அறிந்து கொண்டால் அவர்களை உலகிற்கு நல்ல குடிமக்களாக உருவாக்கிக் கொடுக்க முடியும்

# அத்தியாயம் - 9

## வயித்தில நெருப்பைத் தினம் கட்டயபடி
## ஏன் இந்த வெளிநாட்டுச் சீவியம்?

இப்போது டென்மார்க்கில் குளிர்காலம். பனி விழுந்திருந்து குளிராக இருந்தாலும் பனிதரும் உற்சாகத்தில் என் தினசரி நடைப்பயிற்சி ஆனந்தமாக இருக்கும். ஆனால் இப்போ கொஞ்ச நாட்களாகத் தொடர் மழை. "மழையே மழையே மெத்தப் பெய்" என மழையில் நனைந்து விளையாடி வெள்ளத்தில் கப்பல்விட்டு கால்களில் நீர்ச்சிரங்கு வந்து வீட்டிலே திட்டு வேண்டி கொஞ்ச நாள் நல்ல பிள்ளை வேடமிட்டு மீண்டும் மழைவர மழையில் நனைந்து விளையாடிய என் சின்ன வயது நினைவுகள் என்னை மீண்டும் இறங்கு மழையில் எனக் கூப்பிட்டபடி இருக்கவும் குளிர்க்கவசங்கள் சகிதம் நடக்கத் தொடங்கினேன்.

சோவென்ற சோனாவாரி மாரி என்று நம் ஊரில் சொல்வார்களே அப்படி ஒரு மாரி. நமது ஊர் மாரி நம்மை வருடும். இந்த டென்மாக் மாரி மழையோ ஊசி குத்துவது போன்று குத்தும். நடந்து சென்ற வழியில் நான் பத்மாவைச் சந்தித்தேன். பத்மாவின் குடும்பம் எமது தெருவுக்கு அடுத்த தெருவில் வசித்து வந்தார்கள். பத்மாவுக்கும் அவள் கணவன் கரனுக்கும் 16 வயதில் அபிரா என்ற ஒரு பெண் குழந்தையும் 14 வயதில் கண்ணா என்ற ஒரு ஆண் குழந்தையும் உள்ளார்கள்.

"ஏனக்கா இந்த மழையில நடக்கிறியள்" என பத்மா கேட்டாள்.

"அடாது மழை பெய்தாலும் விடாது நடப்பது எனது பழக்கமாகிப் போச்சுது" என்று கூறியபடி நடந்தேன்.

"போகும் வழியில் நான் மருந்துக் கடைக்குப் போகவேனும். நீங்களும் வாங்கோக்கா மருந்து வேண்டினபிறகு நானும் உங்களோட நடக்க வாறன். உங்களோட நடந்தபடி கதைத்துக் கொண்டு வந்தால் என்ர மன அழுத்தம் குறையும்."

பத்மா என் கைகளை இறுகப் பற்றியபடி கேட்டுக் கொண்டாள்.

அவள் கண்கள் கலங்கத் தொடங்கின.

"எதுக்கு இப்படிக் கவலைப்படுகிறாய்" எனக் கேட்டபடி நான் அவளைக் கட்டியணைத்தேன்.

இருவருமாக மருந்துக் கடைக்குச் சென்றோம். பத்மா தான் வேண்டிய மருந்தை என்னிடம் காட்டினாள்.

"என்ர நிலமையைப் பாருங்கோக்கா நான் விசர் மருந்து எடுக்கிறேன்" என்றாள்.

"ஏன் நீ அப்படிக் கூறுகின்றாய் இது மன அழுத்தம் குறைவதற் கான மருந்து. உனக்குத் தலைவலி வந்தால் தலைவலி மாத்திரை போடுகிறாய். கண் பார்வை குறைவானால் கண்ணாடி போடுகிறாய். அவ்வாறே மன அழுத்தத்துக்கும் மாத்திரை போடுகின்றாய். இதுக்குப் போய் விசர் அது இது என ஏன் கூறுகின்றாய் என நான் அவளைச் செல்லமாகக் கடிந்து கொண்டேன்.

பத்மாவால் நடக்கக்கூட இயக்கமற்று இருப்பதை என்னால் உணர முடிந்தது. இருவருமாக அந்தப் பெரிய வர்த்தக நிலையத்தில் இருந்த வேறு ஒரு சாப்பாட்டுக் கடைக்குச் சென்று கோப்பியும் சிற்றுண்டியும் வேண்டிவிட்டு அங்குள்ள இடத்தில் அமர்ந்தோம்.

"அக்கா நீங்கள் என் மன அழுத்தத்தைச் சாதாரணமாகச் சொல்லிறியள். என்ர மனுசனும் மாமா மாமியும் எனக்கு விசர் எனச் சொல்லீனம்."

"பத்மா! அப்படி அவர்கள் கூறினால் அவர்களுக்குத்தான் விசர் என நீ நினைத்துவிட்டுப் பேசாமல் இரு. வீட்டில வளர்க்கிற நாய் செத்தால், வேலையிடத்தில வேலைப்பழுக் கூடினால் இப்பிடி எத்தனையோ விடயங் களுக்கு டெனிஷ்காரர் மனஅழுத்த மாத்திரை எடுக்கிறார்கள். நம்மட ஆக்களுக்குத்தான் தேவையில்லாத பயமும் அதனால் மற்றவர்களைத் தப்பாகப் புரிவதும் வாடிக்கையாகிவிட்டது. உனக்கு என்ன குறை நீ ராசாத்திமாதிரி இரு" எனக் கூறினேன்.

"எனக்கு ஒரு குறையுமில்லையக்கா. ஆனால் என்ர பிள்ளை யளாலதான் வீட்டில சதா சண்டை."

"உன்ர பிள்ளயளுக்கு என்ன அதுகள் நல்ல கெட்டிகாறப் பிள்ளையள் அல்லவா?"

“கெட்டித்தனத்தை வைச்சு என்னக்கா செய்யிறது. நான் ஒவ்வொரு நாளும் வயித்தில நெருப்பைக் கட்டிக்கொண்டல்லவா இருக்க வேண்டியுள்ளது. அதுகள் சொல்லுக் கேட்டு நடக்குதுகளில்ல”

“நீ சொல்ல என்ன இருக்குது. அதுகள் கேக்க என்ன இருக்குது. அதுகளைச் சின்னப்பிள்ளயள் போல ஏன் நடத்திறாய்”

“என்ர மகள் அபிரா பிள்ளயளோட சேர்ந்து படிக்கிறன் என்டு சொல்லி இரவில நேரம் கெட்ட நேரத்தில வீட்ட வாறாள். சின்னவன் கண்ணனும் எங்கட ஏரியாவில இருக்கிற காவாலிப் பயலுகளோட திரியிறான். அவங்கள் போதைப் பழக்கமுள்ள பொடியள். பொடியள் டெனிஷ்காறர் போல போகப் போகுதுகள் என வீட்டில எல்லாரும் சொல்லீனம். என்ர வளர்ப்புச் சரியில்லை எண்டு மாமி எல்லாரிட்டயும் செல்லிறா. வீட்டில என்ர மனுசனும் பிள்ளயளுக்கு அடிக்கிறார். அதுகள் பள்ளிக்கூடத்தில ரீச்சர்மாரிட்டச் சொன்னால் அம்மளவுதான். இவரைக் கொண்டு போய் மறியலில போட்டிடுவாங்கள்.”

“இதுகளுக்கு அடிச்சுத் திருத்தலாம் என நினைக்கிறது தப்பு. பிள்ளயளோட மரியாதையாகத்தான் கதைச்சுத் திருத்த வேண்டும்.”

“அபிராவின் தோழி கமீலா போன மாதம் எங்கட வீட்டில இரண்டு இரவு தங்கிப் படித்தவள். பிள்ளயள் இருவரும் கனநேரமாகக் கஷ்டப் பட்டுப் படித்ததை நான் கண்டிருக்கிறன்.ஆனால் அவள் போனபின்பு அபிராட அறையை நான் சுத்தம் செய்யப் போனேன். அங்கே குப்பைக் கூடையுள் கருத்தடை மாத்திரையின் காலிப் பெட்டி இருந்தது. பாவித்து முடிந்ததும் குப்பைத் தொட்டியில் போட்டிருக்கிறாள் என நினைக்கிறேன். இது நடந்தபிறகு எனக்கு வயித்தில நெருப்பைக் கட்டியிருக்கிறது போலத் தானேயக்கா இருக்கும்.”

“அது சரிதான் பத்மா. நீ அபிராவிடம் இதைப்பற்றிக் கதைத்தாயா?”

“ஓமக்கா கேட்டேன். அது அவாட சொந்தப் பிரச்சினை. நீங்கள் இதிலே தலையிட வேண்டாம் என்று என்னோட கோபமாகக் கதைக்கிறாள்.”

“இதை இப்பிடியே விட ஏலாது. எனக்குத் தெரிந்த ஒரு டெனிஷ் தோழியின் மகள் 14 வயதில் கர்பமாகிக் குழந்தை பெற்றுக் கொண்டாள். அரசாங்கம் அவளுக்குத் தாயாக இருக்கும் பக்குவம் இப்போது இல்லை.

அவள் பக்குவப்படும் வரை பிள்ளையையும் தாயையும் பிரித்து வைக்க வேண்டும் எனக் கூறிவிட்டார்கள். பின்பு அவளுக்குத் தாயாக இருக்கும் தகுதி வந்தபின்பே குழந்தையை அவளிடம் கொடுத்தார்கள். ஆதலினால் இப்பிரச்சனை டெனிஷ் பெற்றவர்களுக்குக் கூடப் பிரச்சனையான விடயம்தான். எதுக்கும் நீ அபியுடன் மீண்டும் அன்பாகக் கதைத்துப் பார் பத்மா." என நான் கூறினேன்.

அவள் என்னைக் கண்டவுடனே எரிஞ்சு விழுகிறாள் அக்கா. ஆனாலும் கேட்காமல் விடமுடியாது. எனக்கு ஒரு சந்தேகம் இந்தப் பழக்கத்தை அபியும் பழகியிருப்பாளோ? அந்தப் பெட்டி கமீலாவினதா அல்லது அபியுடையதாக இருக்குமோ??.. இதுகளை நினைத்து நினைத்து அழுதழுதுதான் எனக்கு மன அழுத்தம் வந்துவிட்டதக்கா எனக் கூறிப் பத்மா மீண்டும் அழுதாள்.

"பத்மா நாம் நமது பிள்ளைகள் மீது நம்பிக்கை வைக்க வேண்டும். இல்லை என்றால் அச் சந்தேகம் நம்மையும் நம் குழந்தைகளையும் அழித்துவிடும்."

இருவரும் பேசிக் கொண்டிருந்ததில் நேரம் போனது தெரிய வில்லை.

"எப்போது என்ன உதவி வேண்டும் என்றாலும் எனக்குப் போன் எடுத்துச் சொல் பத்மா. நேரம் கிடைத்தால் நானும் உன் வீட்டுக்கு வருகின்றேன்" எனக் கூறிக் கட்டியணைத்து விடைபெற்றேன்.

## புலம்பெயர் தேசத்தில் இசைவாக்கமடைதல்

ஒரு மனிதன் தனது சொந்த நாட்டைவிட்டுக் குடிபெயர்ந்து வேறு ஒரு நாட்டில் வாழ முற்படும் பொழுது அந்த நாட்டுக் கலாசார விழுமியங் களைத் தானும் உள்வாங்கி வாழவேண்டிய சூழல் உருவாகின்றது. இதனை இசைவாக்கமடைதல் எனக் குறிப்பிடுவார்கள்.இந்த இசை வாக்கக் கொள்கையானது மூன்று வகையாக வகுக்கப்பட்டுள்ளது.

### 1.ஒருங்கிணைதல் அல்லது இரண்டறக்கலத்தல் (ASSIMILATION)

பெரும்பான்மைச் சமூகத்தினரின் கலாசாரத்துடன் சிறுபான்மைச் சமூகத்தினர் ஒத்துப்போவதும் ஒருங்கிணைந்து வாழமுற்படுதலும் ஒரு

சில குழுவினரால் மேற்கொள்ளப்படும். ஒரு பாத்திரத்தில் உள்ள தண்ணீரில் ஒரு கறண்டி சீனியைக் கலக்கினால் சீனி கரைந்து தனது இயல்பை இழந்து தண்ணீரில் காணாது போய்விடுகின்றது.தனது அடை யாளத்தை இழந்து தண்ணீரின் தன்மையைப் பெற்றுக் கொள்கின்றது. புலம்பெயர் தேசங்களில் வாழும் ஒருபகுதி மக்கள் தமது தாய் நாட்டு விழுமியங்களைப் புறக்கனித்து  அல்லது மறந்து புதிய கலாசாரத்துடன் ஒன்றாகி விடுகின்றனர். இத்தகைய குழுவினர் போர் அல்லது பயங்கரவாதம் போன்ற சூழ்நிலைகளினால் தமது சொந்த நாட்டுக்குத் திரும்பிச் செல்ல இயலாதவர்களாக இருப்பார்கள். இதனால் அவர்களது சொந்தக் கலாசாரப் பயன்பாடு என்பது குறைவாகவே இருக்கும். ஆதலினால் இலகுவாகப் புதிய சமுதாயத்துடன் ஒருங்கிணைவது அவர்களுக்குச் சிரமமாக இருப்பதில்லை.

**2.பிரிந்திருத்தல் அல்லது தனித்திருத்தல்**(segregation)

பெரும்பான்மைச் சமூகத்திலிருந்து பிரிந்து தனித்து தமக்குரிய குழுமக்களுடன் தமது கலாசாரத்தைப் பின்பற்றி வாழும் மக்கள் இத்தகைய குழுவில் அடங்குவார்கள்.இவர்கள் புதிய கலாசார விழுமியங் களைக் கைக்கொள்ள மாட்டார்கள். இத்தகைய மக்கள் தமது சொந்த நாட்டுக்கு அடிக்கடி போய் வருபவர்களாகவும் தமது சொந்தக் கலா சாரத்தை வளர்க்கவும் பேணவும் முன்னுரிமை கொடுப்பார்களாகவும் இருப்பார்கள். இத்தகைய மக்கள் ஒரு சமுதாயத்தில் அல்லது குடியிருப்புக்களில் கூட்டமாக வாழ்வார்கள். தமது கலாசார அடை யாளங்களை (மொட்டாக்கு, பொட்டு, தலைப்பாகை) எந்தச் சந்தர்ப்பத்தி லும் விட்டுக்கொடுக்காது வாழ்வார்கள். பெரும்பான்மைச் சமுதாயத் தினரைப் பற்றிய புரிதல்கள் இவர்களிடம் குறைவாகவே காணப்படும்.

**3.ஒருங்கிணைந்த இசைவாக்கம்**(Integration)

பெரும்பான்மைச் சமூகத்தினரின் கலாசாரத்துடன் இணைந்து அதனை ஏற்றுக் கொள்பவர்களாகவும் அதே வேளை தமது சொந்தக் கலாசார விழுமியங்களைக் கைவிடாதவர்களாகவும் இருக்கும் மக்கள் மேலே குறிப்பிடப்பட்ட வகையில் அடங்குவார்கள்.இவர்களிடம் இரு கலாசாரங்களைப் பற்றிய புரிதல் நன்றாக இருக்கும். சகிப்புத் தன்மையும்

வேற்றுக் கலாசாரத்தின் மீதான மரியாதையும் இவர்களிடம் துல்லியமாகக் காணப்படும். இரு கலாசாரங்களையும் கடைப்பிடிப்பதனால் இவர்களிடம் ஒரு புதிய கலாசாரப் பரிமாணம் காணப்படும். தமக்கென ஒரு புது அடையாளத்தையும் இவர்கள் கண்டுபிடித்திருப்பார்கள்.

புலம் பெயர்ந்த நாட்டு மக்களுடனும் அவர்களின் வாழ்க்கை முறையுடனும் இசைவாக்கப்பட்டு வாழ்வது பற்றி நாம் அறிவதற்கு முதலில் கலாசாரம், கலாசார அடையாளம் தனிமனித அடையாளம் போன்ற விடயங்களைப் பற்றி நாம் சிந்திக்க வேண்டும்.

**கலாசாரம்** (culture)

மனிதர்களின் செயற்பாடுகள், வாழ்க்கைமுறைகள், பேசும் மொழி, சடங்குகள், சம்பிரதாயங்கள்,நம்பிக்கைகள், சமயங்கள், உடைகள், உணவுகள், கலைகள், இலக்கியங்கள். இசைகள் எனப் பல்வேறுபட்ட வாழ்வாதாரங்களை அடிப்படையாகக் கொண்ட வாழ்க்கைமுறையை நாம் கலாசாரம் என்கின்றோம். வேட்டையாடி வாழ்ந்த சமுதாயத்தில் ஆபத்துக்கள் அதிகமாக இருந்தன. இயற்கையின் படைப்புக்களும் அவர்களுக்கு அதிசயமாக இருந்தன. நெருப்பு, சூரியன், மழை, காற்று, விளைநிலங்கள், ஆகாயம் என்பனவற்றை அதிசயமாகப் பார்த்ததுடன் அவற்றுக்குப் பயந்த தன்மையும் அவர்களிடம் காணப் பட்டது. அதன் பயனாக இயற்கையைத் தெய்வமாகக் கொண்டாடினர். நான் உனக்கு ஓமம் வளர்த்து ஆகுதி செய்கின்றேன். மழையே நீ வந்துவிடு என வேண்டுதல் வைத்து வர்ணபகவானைத் தெய்வமாகக் கொண்டாடினார்கள். அவ்வாறே அக்கினிதேவன், வாயுதேவன் என இயற்கையின் தெய்வங்கள் தோன்றினர். பயத்தின் அடிப்படையில் நம்பிக்கைகளும் சடங்குகளும் உருவாகின. இப்படியாக ஆதிமனிதர்கள் செய்த செயல்கள் நம்பிக்கைகளாக ஏற்கப்பட்டுத் தொடர்ந்து கடைப் பிடிக்கப்பட்டன. பயத்தின் அடிப்படையில் தமது முன்னோர்கள் சொன்ன வற்றைத் தொடர்து ஆதிமக்கள் நம்பினார்கள். அப்படிப்பட்ட நம்பிக்கைகள் பின்னர் சடங்குகளாக ,சம்பிரதாயங்களாக, சமயங்களாகக் கலாசாரங்களாக மாறத்தொடங்கின. நாடோடிகளாக வாழ்ந்த மக்கள் கூட்டாக ஒரு இடத்தில் வாழத்தொடங்கியபோது நிலவுடமையும் அது சார்ந்த கோட்பாடுகள், வழக்கங்கள், நம்பிக்கைகள் அவர்களுக்கு என ஒரு கலாசாரத்தை உருவாக்கிக் கொடுத்தன. காலங் காலமாகச் சொல்லப்

பட்டு வந்த கருத்துக்கள் காலப் போக்கில் உயிருள்ள விழுமியங்களாகி மக்களின் உணர்வுடனும் வாழ்வுடனும் கலந்து அவர்கள் வாழ்வில் இரண்டறக் கலந்துவிட்டன. காலப் போக்கில் ஒவ்வொரு கலாசாரங் களுக்கும் தனித்துவமான பண்புகளும் இலக்கணங்களும் உருவாகின.

ஒரு மொழியின் இலக்கணம் வேறு ஒரு மொழியின் இலக் கணத்தைப் போன்று அமைவதில்லை. அவ்வாறே ஒரு கலாசாரத்தின் இலக்கணம் வேறு ஒரு கலாசாரத்தின் இலக்கணத்தோடு ஒத்துப் போவதில்லை. அதற்காக குறிப்பிட்ட கலாசாரத்தின் இலக்கணம் பிழை என்றும் மற்றயது சரி என்றும் சொல்லமுடியாது. காக்கைக்கும் தன்குஞ்சு பொன்குஞ்சு என்ற பழமொழி போன்று ஒவ்வொருத்தரும் தத்தமது கலாசாரத்தை அடிப்படையாகக் கொண்டு மற்றக் கலாசாரத்தை அளவிட முயல்கின்றனர். இத்தகைய தப்பான கண்ணோட்டங்கள் மக்கள் மத்தியில் தவறுதலான தீர்ப்புக்களை நிலைநாட்டிவிடுகின்றன.

ஒருவர் தான் புதிதாக வாழவந்த நாட்டின் கலாசாரத்தைப் பற்றிப் புரிந்து கொள்வதற்கு தனது சொந்தக் கலாசாரத்தை அளவுகோலாகப் பாவிப்பதுண்டு. இத்தன்மையை (Etnocentrisme) எனக் கூறுவார்கள். கலாசாரங்கள் வெவ்வேறானவை எனப் புரிந்து கொள்ள இக் கண்ணோட்டம் உதவினாலும் மற்றய கலாசாரத்தைப் பற்றிய தப்பான முடிவுகளே பெரும்பாலும் முன்வந்து நிற்கின்றன. அப்படி எடுக்கப்பட்ட தீர்ப்புக்கள்(Prejudices) கலாசார ஒற்றுமையை உண்டாக்குவதற்குப் பதிலாக இனத்துவேசத்தை(Racism) உருவாக்கிவிடுகின்றன.

## கலாசாரப்பிரிவுகள்

ஒட்டு மொத்தமாக உலகத்தில் உள்ள கலாசாரங்களை எடுத்துக் கொண்டால் அவை பொதுவாக இரு பெரும் பிரிவுகளில் அடங்குவதைக் காணலாம். தனிமனித விருப்பு வெறுப்புக்களையும் தனிமனித சுதந்தி ரத்தையும் முதன்மைப்படுத்தும் கலாசாரம் நான் கலாசாரம் என்றும் குடும்ப உறவுகளின் விருப்பு வெறுப்புக்களையும் குடும்பப் பாரம்பரியங் களையும் முதன்மைப்படுத்தும் கலாசாரம் நாங்கள் கலாசாரம் என்றும் அழைக்கப்படுகின்றது. பொதுவாக ஆசியநாடுகளின் கலாசாரம் நாங்கள் கலாசாரமாகவும் மேற்கத்திய நாடுகளின் கலாசாரங்கள் நான் கலா சாரமாகவும் உள்ளன.

"நான்" கலாசாரத்தில் ஒரு மனிதர் தனது தனிப்பட்ட விருப்பு வெறுப்புக்களையே முதன்மைப்படுத்தி வாழ்வார். ஒருவரது வாழ்வின் குடும்பத்தவரின் தலையீடு இருக்காது. எவரும் எவரிலும் தங்கியிருக்க மாட்டார்கள். குடும்பத்தில் ஒரு பிள்ளை தவறு செய்தால் அது பிள்ளையின் தவறு மட்டுமே. பெற்றவருக்கு அதுசம்பந்தமான எந்தவிதக் குற்ற உணர்வும் ஏற்படாது.

"நாங்கள்" கலாசாரத்தில் தனிமனிதரல்லாது ஒட்டு மொத்தக் குடும்பத்தவரின் நலனும் கருத்திலெடுக்கப்படும். குடும்ப உறுப்பினர்கள் ஒருவில் ஒருவர் தங்கிவாழுவார்கள். உதாரணமாகக் குடும்ப உறுப்பினர் ஒருவர் சுகயீனமானால் "நாங்கள்" கலாசாரத்திலுள்ளவர் அவரை வைத்தியசாலைக்குக் கூட்டிச் செல்வார். வேலையிடத்தில் லீவு எடுத்துத் தனது உறவினரை வைத்தியசாலைக்குக் கூட்டிச்செல்வார்.ஆனால் நான் கலாசாரத்திலுள்ளவர் தனது வேலையிடத்தில் லீவு எடுக்கமாட்டார். சுகவீனமானவர் தானாக வைத்திய சாலைக்குச் செல்வார். அல்லது ரக்சி பிடித்துச் செல்வார்.

"நான்" கலாசாரத்தில் ஒரு பிள்ளை தப்புச் செய்தால் அதற்கு அக்குழந்தையே பொறுப்பாகும். தப்புச் சம்பந்தமான குற்ற உணர்வு தனிப்பட்ட அப்பிள்ளையை மட்டுமே சாரும். ஆனால் "நாங்கள்" கலாசாரத்தில் ஒரு பிள்ளை தப்புச் செய்தால் அது அக்குடும்ப உறுப் பினர்களை மட்டும் அல்லாது அவர்களது உறவினர்கள் எல்லோரையும் அக் குற்றஉணர்வு ஆட்கொள்ளும்.இதனால்தான் பெரும்பாலும் நாங்கள் கலாசாரத்திலுள்ள மக்களிடையே ஆணவக்கொலைகள் அதிகமாகக் காணப்படுகின்றன.

மாறாக நாங்கள் கலாசாரத்தில் விவாகரத்து வீதம் குறைவாக உள்ளது. "நான்" கலாசாரத்தில் தனிமனித சுதந்திரமும் சுயகௌரவமும் பாதுகாக்கப்படுவதனால் விவாகரத்து வீதம் அதிகமாக உள்ளது. நாங்கள் கலாசாரத்தில் சுயகௌரவத்தைவிடவும் குடும்பக் கௌரவம் முதன்மைப் படுத்தப் படுவதனால் விவாகரத்துவீதம் குறைவாக உள்ளது. கல்லானா லும் கணவன் புல்லானாலும் புருசன் என்று கூறிப் பெண்கள் துன்பங் களைச் சகித்து வாழ்வார்கள். அவ்வாறே "நாங்கள்" சமுதாயத்து ஆண் களும் தம் குழந்தைகளின் எதிர்காலம் குடும்பக் கௌரவம் என்பவற்றைக் கருத்தில் கொண்டு விவாகரத்தைத் தவிர்த்து சகிப்புத்தன்மையுடன் வாழ்வார்கள்.

**அடையாளப் பாகுபாடுகளும் இசைவாக்கமும்**

(Identity and Integration)

ஒவ்வொரு தனிமனிதனும் தான் யார் என்ற சுயவிளக்கத்துடனும் உள்ளார்ந்த அகத் தெளிவுடனும் குழந்தைப்பருவத்தில் இருந்து வளர்ந்து வருகின்றான். தான் என்ற தனிப்பட்ட மனிதனது நிலையான அடை யாளமானது மற்றவர்களுடன் பழகும் பொழுதும் அன்பைப் பரிமாறிக் கொள்ளும் பொழுதும் மற்றவர்களால் அங்கீகரிக்கப்படும் பொழுதும் தன்னை விரிவுபடுத்துகின்றது. தனது அடையாளத்தை வளர்க்கின்றது. தன்னைச் சுற்றியுள்ள மக்களுடன் எத்தகைய உறவும் அன்பும் நிலைக் கின்றதோ அதன் அடிப்படையில் அந்த நான் என்ற அடையாளம் வளர்கின்றது. உடம்புபுரட்டிப் பின் தவழ்ந்து சப்பாணிகொட்டும் குழந்தை எழுந்து நிற்கவும் தளர்நடை நடக்கவும் தொடங்கும் காலங்களில் தன்னால் இத்தகைய செயல்களை அம்மாவின் உதவி இல்லாமல் செய்ய முடிகின்றதே என வியந்து மகிழ்ந்து போகின்றது. இப்பொழுது தான் வேறு என்றும் அம்மா வேறு என்றும் உணரத்தொடங்குகின்றது. இங்கே உருவாகும் அந்தக் குட்டி அடையாளமானது காலப் போக்கில் வளாந்து தன்னைச் சுற்றியுள்ள சமுதாயத்துடன் தன்னை அடையாளம் கண்டு கொள்கின்றது. இந்த வகையில் சமுதாயம் என்ற ஒன்று இல்லை என்றால் நான் என்ற ஒரு அடையாளமும் வளர முடியாது போகின்றது. எனவே நமது அடையாளமும் நமது சமுதாயமும் பிரிக்கமுடியாத அம்சங்களாகின்றன.

எரிக்சனுடைய உளவியற் கோட்பாட்டின்படி மனிதவாழ்வின் ஒவ் வொரு வளர்ச்சிக்கட்டங்களும் ஒவ்வொரு விதமான போராட்டங்களைத் தாண்டியே முன்றேற்றமடைகின்றன. தான் வாழும் சமுதாயத்திலும் தன்னைச் சுற்றியுள்ள உறவுகளிலும் எவ்வாறு தன்னை வளர்ப்பது என்பதைக் குழந்தை கற்கும் பொழுது அதனுடைய நான் என்ற அடை யாளம் வளர்கின்றது. இவ்வளர்ச்சியானது நேர்மறையாகவும் அமைய லாம். அல்லது எதிர்மறையாகவும் அமையலாம்.

பலமுறை தத்தித் தத்தி நடந்து விழுந்து எழும்பியே குழந்தை நடக்கின்றது. அதே குழந்தை குறுக்கும் மறுக்குமாக ஓடி விழுந்து எழும்பியே சைக்கிள் பழகுகின்றது. பள்ளிக்குப் போகும் முதல்நாள் பயந்து அழுது அடம்பிடிக்கும் குழந்தை காலப்போக்கில் நண்பர்களுடன் குதூகலமாக விளையாடுகின்றது. அவர்களுடன் போட்டி போட்டுப் படித்து முன்னேறுகின்றது. குழந்தையின் அடையாள வளர்ச்சிக்கு போராட்டம்

என்பது படிக்கட்டே என எரிக்சன் கூறுகின்றார். இந்தக் கண்ணோட்டத்தில் புலம்பெயர் தேசத்தில் வேற்றுக் கலாசார மக்களுடன் இசைவாக்கம் பெற்று வாழப்புறப்படும் ஒவ்வொரு குழந்தையும் போராட்டங்களையும் படிக்கட்டுக்கட்டுக்களையும் தாண்டியே வர வேண்டியுள்ளது. பெற்றவர் களும் சமுதாயமும் அவர்களைப் புரிந்துணர்வுடன் நடத்தாது விட்டால் அவர்களது அடையாளங்கள் சிதைக்கப்பட்டு அவர்கள் தப்பான பாதை யில் செல்லக்கூடும்.

குறிப்பாகப் பருவவயதுப் பிள்ளைகள் இருவிதமான கலாசாரச் சூழலில் வாழமுற்படும் பொழுது மிகப்பெரிய அடையாளப் போராட் டத்தைச் சந்திக்கின்றனர். உதாரணமாக நான் மேலே குறிப்பிட்ட பத்மா வின் பிள்ளைகள் டெனிஷ் பிள்ளைகளைக வளர்வதா அல்லது தமிழ்ப் பிள்ளைகளாக வளர்வதா என்ற போராட்டத்தில் சிக்கியுள்ளனர். ஒருபக்கம் இளைய தலைமுறையினருக்கான சுதந்திரத்தைக் கொண்டாடும் ஒரு கலாசாரம். மறுபக்கம் சமயநம்பிக்கைகள், கற்புக் கோட்பாடுகள், புனிதத் தன்மை, ஊரவர் பழிக்குப் பயந்த பெற்றவர்கள். இவர்களுக்கு நடுவில் இக்குழந்தைகளின் அடையாளமும் எதிர்காலமும் ஊசலாடுகின்றன.

அடையாளம் என்பது மூன்று விதமாகப் பார்க்கப்படுகின்றது.

1.புனிதமான அடையாளம்.(pure identity)

2.கட்டப்பட்ட அடையாளம்.(Tie identity)

3.கலக்கப்பட்ட அடையாளம்.(Creole identity)

1.புனிதமான அடையாளத்தைக் கொண்டவர்கள் மத்தியில் தமது சொந்தக் கலாசாரத்தை முழுமையாகப் பின்பற்றுவார்கள். பெரும்பாலும் தாம் சார்ந்த மதத்தின் நம்பிக்கைகளையும் சடங்குகளையும் முறையாகப் பின்பற்றுவார்கள்.உதாரணமாக இவர்கள் வீட்டிலும் பொட்டு வைப்பார் கள். வேலைக்குப் போனாலும் பொட்டு வைப்பார்கள்.

2.அடுத்து கட்டப்பட்ட அடையளத்தையுடையவர்கள் இரு கலா சாரப் பாரம்பரியங்களையும் பின்பற்றுவார்கள். உதாரணமாக வீட்டில் இருக்கும் பொழுது தமது சொந்தக் கலாசாரத்தைப் பின்பற்றுவார்கள். வேலையிடத்திலோ தாம் வாழும் நாட்டின் கலாசாரத்தைப் பின்பற்றுவார் கள். உதாரணமாக வீட்டில் பொட்டு வைத்திருப்பார்பள். வேலைக்குப் போனால் வைக்க மாட்டார்கள்.

3.கலக்கப்பட்ட அடையாளத்தை உடைய மக்கள் கட்டுப்பாடு களைக் கடைப்பிடிக்க மாட்டார்கள். உதாரணமாக முஸ்லீமாக இருந்தா லும் பன்றி இறைச்சி உண்பார்கள். இந்துவாக இருந்தாலும் மாட்டிறைச்சி யுண்பார்கள். அல்லது வெள்ளிக் கிழமைகளிலும் அசைவம் உண்பார்கள். கிறிஸ்தவராக இருந்தாலும் ஞாயிற்றுக் கிழமைகளில் தேவாலயம் செல்ல மாட்டார்கள். இத்தகைய தன்மைகள் இவர்களது சொந்த நாட்டில் இருக்காது.

மேலே கூறப்பட்ட கருத்தியல்களை நோக்குமிடத்து புலம்பெயர் தேசங்களில் மக்களின் இசைவாக்க வாழ்க்கை என்பது எவ்வளவு சிரமங்களை எதிர்கொள்ள வேண்டியுள்ளது எனப் புரியும். புரிந்துணர்வின் அடிப்படையிலும் நம் குழந்தைகள் மீது நாம் வைக்கும் எதிர்பார்ப்பற்ற அன்பினாலும் இத்தகைய தடைகளை நாம் அகற்றமுடியும். அதற்கான வழிமுறைகள் என்ன என்ன என்று நாம் சிந்தித்துப் பார்க்கலாம்.

1.தன்னம்பிக்கையும் தான் யார் என்ற புரிதலும் முதலில் பெற்றவர்களுக்கு இருக்க வேண்டியது அவசியம். தமக்கான ஒரு நல்ல அடையாளத்தைக் கொண்டுள்ள பெற்றோரால் நிச்சயமாகப் பிள்ளை களுக்கு நல்வழி காட்ட முடியும். தான் பிறந்தநாடும் தன் கலாசாரமும் நல்லது என்ற எண்ணம் இருந்தால் தாய் மொழியைப் பிள்ளைகளுக்குச் சிறு வயதிலேயே கற்றுக் கொடுப்பார்கள். ஒரு குழந்தை தன் தாய் மொழி யில் கெட்டித்தனமானதாக இருந்தால் அக் குழந்தைக்கு எல்லா மொழி களையும் மிக விரைவில் கற்கும் திறன் கிடைக்கும் என ஆய்வாளர்கள் கூறுகின்றனர். தாய் மொழி தெரிந்த குழந்தைக்குத் தாய் மொழி இலக்கியங்களும் கலைகளும் கலாசாரமும் இலகுவில் புரியும் என்பதில் எந்த ஐயமும் இல்லை. தான் யார் என்ற தெளிவும் புரிதலும் குழந்தையின் அடையாளத்தைக் கட்டியெழுப்பும்.

புலம்பெயர் தேசங்களில் உள்ள தாய் மொழி தெரியாத பிள்ளை கள் தமது சொந்தச் சமுதாயத்தைப்பற்றிய தப்பான உணர்வு கொண்டிருப பார்கள். தாம் பிறத்தியானவர்கள் என்ற உணர்வுடன் பழகுவார்கள். தாய் மொழி தெரியாத பல குழந்தைகள் தாய் நாட்டுக்குப் போகும் பொழுது பல கலாசாரச் சிக்கல்களைச் சந்திபார்கள். அத்தகைய தன்மை ஏற்படுமிடத்து இவர்களது அடையாளமானது சிக்கல்களை எதிர்கொள்ளும்.

2.பொதுவாக நமது நாடு பிரித்தானியர்களுக்கு அடிமையாக இருந்த தன்மையினால் வெள்ளைக்காரர்களுக்கும் அவர்களது

கலாசாரத்துக்கும் அதீத மதிப்புக் கொடுக்கும் பழக்கம் நம் மக்கள் சிலரிடம் உண்டு. இவர்கள் புலம்பெயர்ந்த ஆரம்பத்தில் தமது பிள்ளைகளுக்குத் தாய் மொழி தேவையில்லை எனவும் மாற்று மொழி தெரிவதே பெருமை எனவும் நினைப்பதுண்டு.தமது பிள்ளைகளுக்கு அந்த நாட்டுக்குப் பொருத்தமான பெயர்களை வைப்பதும் அந்த நாட்டு மக்களுடன் பழகவும் செய்வார்கள். அவர்கள் குழந்தைகளும் அது நல்லது என நினைத்து வளரும். அந்த நாட்டு நண்பர்களுடன் பழக விடுவார்கள். ஆனால் பிள்ளை வளர்ந்து பருவவயது வந்தவுடன் தமது கொள்கைகளை மாற்றிவிடுவார்கள்.

நீ பெரியபிள்ளையாகிவிட்டாய் ஆதலினால் இந்தக் கூட்டாளி களை எல்லாம் தவிர்த்துவிட வேண்டும் என்பார்கள். பிள்ளைகளுக்கு இவர்களது திடீர் மாற்றங்கள் புரியாது. சின்ன வயதில் பீற்றருடன் விளையாடவிட்ட அப்பா இப்போது ஏன் வேண்டாம் எனக் கூறுகிறார் எனக் கேட்டு வாதாடுவார்கள். இளம் வயதில் இவர்களுக்குப் பெற்றவர்கள் சொற் கேட்பதைவிடவும் நண்பர்கள் சொற் கேட்பதே சரி எனப்படும். பருவ மாறுதல்கள் உடல் ரீதியான வளர்ச்சி ஓமோன்களின் தாக்கம் என்பன இப் பிள்ளைகளைப் பாடாய்படுத்தும்.பெற்றவர் சொற் கேட்க வேண்டும் என்ற நினைப்பு இல்லாது போகும். சொல்லுக் கேட்காத பிள்ளைகளைப் பெற்றவர்கள் வேவு பார்க்கத் தொடங்குவார்கள். எதுக்கு இப்ப பொலிஸ் வேலை பார்க்கிறீர்கள் எனப் பிள்ளைகள் கேட்பார்கள். மேலும் பெற்றவர் கள் வேவுபார்பதைத் தவிர்ப்பதற்காகப் பொய் சொல்லத் தொடங்கு வார்கள். இந்த நிலை நீடிக்குமிடத்துப் பெற்றவரை விட்டுப் பிள்ளைகள் விலகத்தொடங்குவார்கள். நல்லது கெட்டது கேட்டறியவோ அல்லது ஆபத்துக்களில் மாட்டுப்பட்டால் பெற்றவரின் உதவியை நாடவோ முடி யாத நிலைக்கு அப் பிள்ளைகள் தள்ளப்பட்டிருப்பார்கள். பெற்றவர்களின் தேவையற்ற சந்தேகங்களும் பயமும் அவர்களைப் பிள்ளைகளிடமிருந்து பிரித்துவிடுகின்றது. தான் யார் என்ற அடையாளத்தை அறிய முடியாத நிலையில் பல பிள்ளைகள் மதுவுக்கும் போதைப் பெருட்களுக்கும் அடிமையாகின்றனர். வீட்டில் கிடைக்காத அன்பும் சுகமும் போதையில் இருப்பதாக நம்புகின்றனர்.

3.பிள்ளைகளின் ஆரோக்கியமான கேள்விகளுக்கு விடை தெரிந்து வைத்திருப்பது பெற்றவர்களின் கடமையாகும். ஒரு சமய சம்பந்தமான கருத்தைப் பெற்றவர்கள் கூறினால் அதற்குப் பல விளக்கங்களைப் பெற்றவர்கள் கொடுக்க வேண்டும். இந்த இந்தக்

காரணங்களினால் தான் இந்த இந்த சமய நடைமுறைகளைப் பின்பற்று வது நல்லது எனக் கூறவேண்டும். உதாரணமாகத் தியானம் யோகா போன்றவை இன்று டெனிஷ் மக்களாலும் வரவேற்கப்படுகிறது என விளக்க வேண்டும். இல்லை என்றால் நாம் கூறுவது ஏதோ ஒரு விதத்தில் அவர்களை நாம் அடிமைகள் போன்று நடத்துவதாக நினைக்க வைக்கும். நான் சொல்வதை நீ கேள் என்ற ஒற்றைவழிக் கருத்துப்பரிமாற்றமாக நமது உரையாடல் அமையக்கூடாது.

4.மற்றவர்களின் கலாசாரத்தை நமது கலாசாரத்தைக் கொண்டு அளப்பது தவறானது. இதனால் தப்பான கண்ணோட்டம் மட்டுமே உருவாகும். அது பல எதிர் விளைவுகளைக் கூட்டிவந்து விடும்.

உதாரணமாகப் பத்மாவின் மகள் அபியைப் பற்றியும் அவளது தோழி கமீலா பற்றியும் பத்மா கொண்டிருந்த பயம் நீங்கள் அறிந்ததே. என்னுடன் பத்மா கதைத்து விட்டுப் போனபின்பு எனது மனமும் முருங்கை மரத்தில் ஏறி உட்காரத் தொடங்கியது. நான் பத்மாவுக்குப் போன் செய்து கமீலா உங்கள் வீட்டில் தங்கிச் சென்றதையும் அதன் பின்பு அந்த அறை யில் கருத்தடை மாத்திரைப் பெட்டியை நீ கண்டெடுத்தயையும் கமீலாவின் அம்மாவிடம் கூறு என நான் பத்மாவை வற்புறுத்தினேன்.பத்மாவும் அப்படியே கமீலாவின் தாயாரிடம் விடயத்தைக் கூறினாள். ஆனால் கமீலாவின் அம்மாவோ அந்தச் செய்தியைப் பத்மா கூறியதற்காக அவளுக்கு நன்றி சொன்னாவாம்.

“என்ர மகள் தனது காதலனுடன் ஒரே இடத்தில் வசிக்கின்றாள். அவள் கருத்தடை மாத்திரை பாவிப்பது மிகவும் மகிழ்ச்சியான விடயம். அவர்களது படிப்பு முடிந்து இருவரும் வேலை எடுத்துப் பொருளாதார ரீதியாக நல்ல நிலைக்கு வந்தபின்பு திருமணம் செய்து குழந்தை பெறுவதே நல்லது. என் பிள்ளை நல்ல புத்திசாலி இத்தகவல் சொன்னதுக்கு நன்றி பத்மா”

இப்படியாகக் கமிலாவின் தாயார் சொன்னதும் பத்மாவுக்கு மண்டைவிறைத்து விட்டது. ஆனாலும் அந்த மாத்திரை தன் மகள் அபியுடையதாக இருக்குமோ என்ற சந்தேகத்துக்கும் முற்றுப்புள்ளி வைத்தாகிவிட்டது. இத்தகைய கலாசாரச் சூழலில் வளர்ந்தாலும் என் மகள் நல்லபிள்ளையாக வளர்கிறாளே என்ற மனநிம்மதி பத்மாவுக்குக் கிடைத்தது என்றாலும் வயிற்றிலே நெருப்பைக் கட்டிக் கொண்டு இருக்கும் உணர்வானது பத்மாவை விட்டு நீங்கவே இல்லை.

# அத்தியாயம் - 10

## இவர்கள் பிள்ளைபிடிகாறர்களா?
## இல்லை ஆபத்பாந்தவர்களா?

இந்த நிகழ்வு நடந்து ஒரு மாதமாகியும் என்னால் அந்த நினைப்பிலிருந்தும் வலியிலிருந்தும் மீண்டுவர முடியவில்லை.

நத்தார் புதுவருடத்தையொட்டி டென்மாக் நகரமெங்கும் விழாக்கோலம் பூண்டிருந்தது. கடைகளில் மக்கள் கூட்டம் அதிகமாக இருக்கும் என்பதனால் முற்பகலில் கடைக்குப் போவதற்கு ஆயத்தமாகிக் கொண்டிருந்தேன்.எமது மாடிக் குடியிருப்புக்கு எதிர்மாடிக் குடியிருப்பில் பூமணியக்காவும் அவரது கணவர் சிவாஅண்ணையும் வாழ்ந்து வருகின்றார். பூமணியக்காவின் மகள் எங்கள் தெருவுக்கு அடுத்த தெரு வில் தான் வசிக்கிறாள். அவளுக்குத் திருமணமாகிப் பத்து வயதில் ஒரு ஆண்பிள்ளையும் நான்கு வயதில் ஒரு பெண்பிள்ளையும் உள்ளார்கள்.

நான் கடைகளுக்கப் போகும் போது பூமணியக்கா தன்னையும் கூட்டிப்போகச் சொல்லிக் கேட்டிருந்தார். பேரப்பிள்ளைகளுக்கு நத்தார் பரிசுகள் வேண்டுவதே அவாவின் நோக்கமாக இருந்தது. நான் புறப்பட ஆயத்தமானதும் பூமணியக்காவுக்குப் போன் எடுத்தேன். அவவிடமிருந்து எந்தப் பதிலுமில்லை. சரி நேரே போய்ப் பார்ப்போம் என நினைத்து அவாவின் வீட்டுக் கதவைத் தட்டினேன். தலைவிரி கோலமாக வந்தவர் என்னைக் கட்டிப்பிடித்து ஓவென்று அழத்தொடங்கிவிட்டார்.

என்ன நடந்ததக்கா? என்று நான் கேட்டேன்.

“அதை ஏன்டி பிள்ளை கேக்கிறாய்? பிள்ளைபிடிகாரரெல்லோ வந்திட்டாங்கள். என்ர பேரக்குஞ்சுகளைப் பருந்து கொத்திக் கொண்டு போறது போலக் கொண்டு போயிட்டாங்கள்” எனக் கூறி மீண்டும் அழுதார்.

“முதல்ல ஆறுதலாக இருங்கோ. பிறகு விளக்கமாகச் சொல்லுங்கோ அக்கா” என்று நான் பூமணியக்காவை ஆறுதல்

படுத்தினேன். அந்த நேரம் கதவு மணியடித்தது.

வாசலில் பூமணியக்காவின் கணவர் கடைக்குப் போய்விட்டு வந்திருந்தார். “கேள்விப்பட்டியா பிள்ளை? பார் வயசான காலத்தில எங்கட தலைவிதி இப்பிடியாப் போச்சுது” எனக் கூறிக் கவலைப்பட்டார்.

“எனக்கு ஏதும் விளங்கயில்லை விபரமாகச் சொல்லுங்கோ” என நான் கேட்டுக்கொண்டேன்.

“இது வெளிய தெரியாத பிரச்சினை பிள்ளை கன காலமாகச் சிக்கலாகத்தான் இருந்தது. என்ர மருமகனுக்குக் கை நல்லா நீளும். என்ர மகளுக்கும் வாய் நல்லா நீளும். அடிக்கடி இந்தக் கூத்து நடக்கிறதுதான். ஒரு நாளைக்குச் சண்டை நடக்கும். மறுநாள் எதுவும் இல்லாது அப்பாவியள் போல இருப்பீனம். கொஞ்சக்காலமாக மருமகனுக்குக் கூடாத கூட்டாளியள் சேரந்துவிட்டார்கள். அவருக்குப் போதைவஸ்துப் பழக்கமும் வந்துவிட்டது. அதுக்குப் பிறகு அவர் பிள்ளையளையும் தாயை யும் அடிக்கிற பழக்கம் கூடிவிட்டது. அவர் வேலைக்கும் போவதை விட்டு விட்டார்.

எத்தனை நாளைக்குத் தான் மகளிட வருமானத்தில குடும்பம் ஓடும் பிள்ளை. வேலையில்லாததுக்குக் கிடைக்கிற காசு அவரிட குடிக்கே சரியாகிப் போய்விடும். வீட்டில பண நெருக்கடி. நானும் மனுசியும் ஏதோ எங்களால முடிஞ்ச அளவு மிச்சம்பிடிச்சு ஓரளவு உதவி செய்தோம். வேலையில்லாமல் குடிப்பழக்கமும் இருந்தால் காசுப்பிரச்சினை கூடும் தானே. அதனால பல இடங்களில கடன்படத் தொடங்கிப்போட்டார். வீட்டில காசு கேக்கிறது. இல்லை என்றவுடன் என்ர பிள்ளைப் போட்டு அடிக்கிறது.

ஒரு நாள் அடிபாடு நடக்குது எண்டு பக்கத்து வீட்டுக்காறன் பொலிசுக்கு அடிச்சுச் சொல்லிப் போட்டான். பிறகு கொஞ்சக்காலம் பிள்ளையளும் தாயும் காப்பகத்தில் தலைமறைவாக இருந்தனர். (குடும்பத்தில் வன்முறை அதிகமாகிப் பாதிக்கப்படும் பெண்கள் தம் குழந்தைகளுடன் பாதுகாப்பாக இருப்பதற்கான இடத்தைக் நெருக்கடிக் காலக் காப்பகம் என்பார்கள். டென்மார்க்கில் ஆண்களுக்கும் இப்படியான காப்பகங்கள் உள்ளன.)

பிறகு திரும்பி வீட்ட வந்து இருந்தார்கள். இப்பிடி அடி வேண்டிறதும் காப்பகம் போறதும் திரும்பி வாறதுமாக என்ர மகள் அலைஞ்சு அலைஞ்சு அவளுக்கு மன அழுத்தம் வந்துவிட்டது. இரண்டு பிள்ளைகளையும் பராமரித்துப் பார்க்கும் சக்தியை அவள் இழந்து

விட்டாள்.". கதைக்கிற போது சிவாண்ணைக்குத் தொண்டை அடைத்துக் கண் கலங்கிவிட்டது.

"ஏன் அண்ணை நீங்க அவயிட வீட்ட போயிருந்து உதவி செய்யவில்லையா?" என நான் கேட்டேன்.

"என்னடி பிள்ள நீ விசர்க்கதை கதைக்கிறாய்? நாங்க போனால் மருமகனுக்குச் சரிவருமா சொல்லு. மனுசன் சும்மா சும்மா எங்களோடை யும் கொழுவலுக் கெல்லோ வாறார். நாங்க போனால் எங்கட பிள்ளைக்குத் தான் உபத்திரவம் கூட." பூமணியக்கா அழுதழுது சொன்னார்.

பூமணியக்கா சொல்லி முடிக்க சிவாண்ணா தொடர்ந்தார்.

"கொஞ்சக்காலத்தில சரியாகியிடும் எண்டுதான் நாங்களும் நினைச்சம் பிள்ள. ஆனால் எதுவும் சரியாகவில்லை. இரண்டு பிள்ளை யளும் தகப்பன் எப்ப குடிப்பார் எப்ப அடிப்பார் எண்டு பயந்தபடி இருக்குங்கள். ஒரு நாள் தகப்பனுக்குக் கோவம் வந்து மூத்த மகனை அடிச்சிட்டார். உடம்பில காயம் வந்துவிட்டது. அவன் பக்குவமான பிள்ளை. பள்ளிக்கூடத்தில ஏன் முகம் வீங்கியிருக்கு என ரீச்சர் கேட்டதுக்கு சயிக்கிளால விழுந்து காயம் பட்டு முகம் வீங்கிப் போச்சு எண்டு சொல்லிப் போட்டான்."

"இது போதுமண்ண பள்ளிக்கூடத்துக்கு பிறகு சும்மாவிட மாட்டாங்கள்" என நான் சொன்னேன்.

சரியாச் சொன்னனடியாத்தா. இதுக்குப் பிறகு அவன் பள்ளிக் கூடத்தில கொடுக்கிற வீட்டு வேலைகள் ஒழுங்காகச் செய்யாமல் இருந் திருக்கிறான். அவனிட வகுப்பு ரீச்சர் நல்ல மனுசி இவனுக்கும் அவாவில நல்ல விருப்பம். அடிக்கடி பிள்ளையோட ஆறுதலாகக் கதைக்கத் தொடங்கி யிருக்கிறா. தாயிட அன்பை அந்த ரீச்சரில உணர்ந்திருக்கிறான் போல வீட்டில நடக்கிறது எல்லாத்தையும் பிள்ளை ரீச்சரிட்டச் சொல்லிப் போட்டான். ரீச்சர்காறி நகரசபைக்கு இந்தப் பிரச்சினையை அறிவிச்சுப் போட்டா.

அத்தோட தாய்க்கு ஏலாமல் இருந்த நேரங்களில தங்கச்சிக் காறியைப் போனகேவனுக்கு (சிறுவர் பாடசாலை) அவன்தான் கொண்டு போய் விட்டுப் பிறகு கூட்டிக் கொண்டு வந்திருக்கிறான். அவங்களும் ஏன் இப்பிடி நடக்குது என வேவு பார்க்கத் தொடங்கியிருக்கிறாங்கள். பிள்ளை போட்டுக் கொண்டு வாற உடுப்புக்கள் எல்லாம் அளவில்லாமல் இருந்திருக்குது. மேலும் சும்மா தள்ளி நில்லு எண்டு சொல்ல முதல்

எடுத்ததுக் கெல்லாம் பிள்ளை அழுதிருக்கிறாள். ஏன் எடுத்ததுக் கெல்லாம் அழுகிறாய் எனக் கேட்டதுக்கு குழப்படி செய்தால் அப்பா அம்மா அடிக்கிறமாதிரி நீங்களும் அடிப்பியள் எனப் பயந்து அழுகிறன் எனப் பிள்ளை சொல்லிப் போட்டாள். இப்பிடிக் கன விசயங்களை அவங் கள் கண்டு பிடிச்சு அவங்களும் நகர சபைக்கு அறிவிச்சுப் போட்டாங்கள். பிறகென்ன மாறிமாறி நகரசபை கூட்டங்கள் வைக்கத் தொடங்கியிட்டுது." பூமணியக்காவுக்குக் கதைக்கக் கதைக்கக் கண்ணால தண்ணி ஓடியபடி இருந்தது.

எனக்குச் சொல்லியிருந்தால் அவளுக்கு ஏதாவது உதவி செய்திருக்கலாம் என நான் ஆதங்கப்பட்டுக் கொண்டேன்.

"எப்பிடிச் சொல்லிறது பிள்ள. அவளுக்கும் தன்ர பிரச்சினைகளை மற்றவைக்குச் சொல்லிறது பிடிக்காது. எங்களையே எதுக்கும் தலையிட வேண்டாம் எண்டு தான் சொல்லுவாள். தன்ர பிள்ளையள அரசாங்கம் எடுக்கப் போகுது என அவள் பயப்பிடத் தொடங்கியிட்டாள். வீட்டில மனிசனிட குடிப்பிரச்சனை அவர் பட்ட கடன்களால கடன்காறரிட பிரச்சினை பிள்ளையளப் பார்க்க முடியாத தன்ர மன அழுத்தப்பிரச்சனை என எல்லாம் அவளைப் போட்டு பிரட்டி எடுத்து விட்டன. வேலைக்குப் போறதையும் நாளடைவில குறைச்சிட்டாள். போன மாதம் ஒரு நாள் நிறைய நித்திரைக் குளிசையளைப் போட்டிட்டுப் படுத்திட்டாள். எழுப்ப எழுப்ப அம்மா எழும்பிறாவில்லை என என்ர பேரக்குட்டி போனில சொன்னான். வெறியில்லாமல் இருந்த நிலையில ஐயோ என்ர மனுசி எழும்பிறாளில்லை என அம்புலன்சுக்கு அடிச்சு மருமகனே ஆஸ்பத்திரி யில சேர்திருக்கிறார். குடியில்லாட்டி என்ர மருமகன் தங்கப் பவுண். எல்லாம் எங்கட தலைவிதி என பூமணியக்கா கூறினார்.

"அப்பிடி எண்டால் இனி நல்ல காலம் தானேயக்கா. திருந்திவிடால் நல்லது" என்றேன்.

"இல்லைப் பிள்ளை கண் கெட்ட பிறகு சூரிய நமஸ்காரம் செய்ய ஏலாது. என்ர மகளுக்கு மனவருத்தம் கூடி ஆஸ்பத்திரியில இருக்கிறாள். மருமகன் போதைப்பழக்கம் குடிப்பழக்கம் அதிகமானவர். இவரால பிள்ளயளைப் பராமரிக்க ஏலாது என அரசாங்கம் பிள்ளயள வேற டெனிஷ்காரக் குடும்பத்திட்டப் பராமரிக்கக் குடுத்துப் போட்டுது. மருமகனும் ஒத்துக் கொடுத்த படியால இரண்டு கிழமைக்கு ஒருக்கால் பிள்ளயள வீட்ட விடுவாங்களாம்.

ஆனால் பிள்ளைகளைத் தனியே வீட்ட விடமாட்டாங்களாம். தகப்பன் நல்லாப் பாப்பாரோ எனக் கவனிக்க அரசாங்கம் வேற ஒரு உத்தியோகத்தரை அனுப்புமாம். பிள்ளையள் வீட்டில நிக்கிற நேரம் வரையும் என்ன நடக்குது என அவதானிச்சு அந்த உத்தியோகத்தர் அரசாங்கத்துக்குத் தகவல் சொல்ல வேண்டுமாம்." சிவாண்ணா விபரமாக எல்லாவற்றையும் சொன்னார்.

"இது என்னடி நியாம். வீட்டில பொலிஸ்காரங்கள் இருக்கிறது போலத்தானே இருக்கும். நாங்க எப்ப எங்கட பேரக்குட்டியளைப் பாக்கிறது?" பூரணக்கா மீண்டும் அழத்தொடங்கினார்.

"அக்கா பயப்பிட வேண்டாம். நானும் முந்தி இப்பிடியான குடும்பங்களில் அரசாங்கத்தால் நியமிக்கப்பட்டு வேலை செய்திருக் கிறேன். உங்களுக்கு இது சம்மந்தமாக என்ன விளக்கமோ உதவியோ தேவை எண்டால் சொல்லுங்கோ நான் உதவி செய்கிறேன்." எனக் கூறி அவாவைச் சமாதானப்படுத்தினேன்.

"உனக்கு புண்ணியமாகப் போகும் பிள்ளை உனக்கு நேரம் கிடைக்கிறபோது பூமணிக்கு ஆறுதல் சொல்லு. இந்த வயசான காலத்தில நாங்கள் இதுகளை எல்லாம் அனுபவிக்க வேண்டும் எண்டு தலையில எழுதியிக்காக்கும்" சிவாண்ணை உடைந்து நொருங்கிப் போன குரலில் பேசினார்.

கதைத்துக் கொண்டிருந்ததில் நேரம் போனதே தெரியவில்லை. "வீட்டுக்க இருந்து அழுதபடியே இருக்காமல் வாங்கோவன் கடைக்குப் போவோம்" என நான் கேட்டேன்.

"கடைக்கு வந்து விளையாட்டுச் சாமானுகள் வேண்டி நான் ஆருக்கடி பிள்ள கொடுக்கிறது?. என்ர பேரக் குஞ்சுகளை எல்லோ பிள்ளை பிடிகாறங்கள் கொண்டு போய் விட்டாங்கள்"

பூமணியக்கா மீண்டும் ஒப்பாரி வைக்கத் தொடங்கினார்.

"அப்பிடியில்லையக்கா நீங்கள் விளையாட்டுச் சாமான்களை வேண்டுங்கோ. பிறகு பிள்ளையள் தகப்பனிட்ட வாறபோது அதுகளைக் கொடுக்கலாம்." என நான் சொன்னேன்.

"அது எப்பிடி நாங்கள் எங்கட பேரக்குஞ்சுகளைப் பார்க்க லாமோ"?

"ஓமக்கா அரசாங்கத்திட்ட அனுமதி கேட்டு நீங்கள் பேரப்பிள்ளை

யளைப் பார்க்கலாம். உங்கட பேரக்குஞ்சுகள் எந்தத் தப்பும் செய்ய வில்லை. பிள்ளயளிட எதிர்காலம் நல்லாக இருக்க வேண்டும் என்பதற் காகக் தானே அரசாங்கம் இப்பிடிச் செய்தது. நம்ம நாட்டில பிள்ளையள விடுதியில விட்டுப் படிப்பீக்கிறது நினைப்பிருக்குதா? நானும் அப்பிடி விடுதியில இருந்து படிச்சுத்தானே நல்லா வந்தனான்.” என்னால் முடிந்த அளவு ஆறுதல் சொல்லிப் பார்த்தேன்.

“நேரமாகுது கடைக்கு வாறியளோ அக்கா எனக் கேட்டேன்.

“மறுமொழி சொல்லவோ எழும்பி நடக்கவோ எங்கள் இருவருக்கும் மனத்திலும் சரி உடம்பிலும் சரி தைரியம் இல்லைப் பிள்ளை. கெஞ்ச நாட்கள் போகட்டும் பிறகு பாக்கலாம்” சிவாண்ணை கண்கலங்கியபடி சொன்னார்.

“சரியண்ண எனக்கு நேரமாகுது. பூமணியக்கா என்ன உதவி தேவை எண்டாலும் எனக்குப் போன் எடுத்துச் சொல்லுங்கோ நான் உடனே வந்து உதவி செய்கிறேன்” எனக் கூறி விடைபெற்றேன்.

நாம் நம் தாய் நாட்டை விட்டுப் புலம் பெயர்ந்ததும்,

சொந்தங்கள் சிதறிப் போய் உலகம் எங்கும் திக்குத்திக்காகச் சிதறிப் போனதும்,

சொந்த நாட்டிலும் எத்தனையோ குழந்தைகள் போரிலே பெற்றவர்களை இழந்ததுவும்,

குண்டடிபட்ட எத்தனையோ குழந்தைகள் கை கால்களை இழந்ததுவும்,

பள்ளிக்கூடம் போகமுடியாது எத்தனையோ குழந்தைகள் குழந்தைத் தொழிலாளர்களாக மாறியதும் எனப் பலவிதமான சிந்தனைகள் வந்து போயின.

நாம் புலம்பெயர்ந்த தேசங்களில் நமது குழந்தைகள் வாழ்வது வரமா அல்லது சாபமா என்பதை என்னால் ஊகிக்க முடியாது இருந்தது. இந்த நாட்டுச் சட்டதிட்டங்களும் அரசாங்கமும் பிள்ளை பிடிகாரரா அல்லது ஆபத்பாந்தவர்களா?

அநாதை இரட்சகர்களா?

கேள்களுக்குப் பதில் காணமுடியாதவாறு எனது அன்றைய நாள் தன்னைத் தானே அடக்கம் செய்தது.

# அத்தியாயம் - 11

## அரசாங்கம் தத்தெடுக்கும் குழந்தைகள்

பூமணியக்கா வீட்டிலிருந்து வந்த நேரத்திலிருந்து என் மனம் மீண்டும் மீண்டும் சில கேள்விகளைக் கேட்டு என்னைத் துளைத்தபடியே இருந்தது.

நீ யார்? நீ என்ன செய்து கொண்டிருக்கின்றாய்? என்ன செய்யப் போகின்றாய்? என்பனவே அக் கேள்விகள்.

நான் டென்மார்க்கில் வாழும் ஒரு இலங்கைத் தமிழச்சி! இல்லையில்லை... இந்த விடை போதாது!! மீண்டும் முருங்கைமரம் ஏறியது என் மனம்.!!!

நான் இந்த நாட்டுக்கு வந்தபொழுது என் வயது 26. இங்கு வந்து தாய் நாட்டில் படித்தவற்றை மூட்டை கட்டி வைத்துவிட்டு மீண்டும் அரிவரியில் படிப்பது போல் டெனிஷ் மொழியில் A B C D படித்து மொழி தெரியாத நாட்டில் வேற்றுக்கிரக வாசிகள் போன்று வாழத் தொடங்கி மெல்ல மெல்ல மொழி படித்துத் தொழில் செய்வதற்கும் ஒரு படிப்பைப் படித்து முடித்து மூச்சுவிட்ட நேரம் அந்த நேரம். நான் குழந்தைப் பராமரிப்புத் துறையில் படித்து முடித்துச் சான்றிதழைக் கையில் பெற்ற பொழுது அதை என் கைகளில் தந்த அந்தப் பேராசான் ஒரு வார்த்தை கூறினார்.

“இப்போது உன் கையில் தரப்பட்டிருப்பது சாதாரணமான பத்திரம் அல்ல. உலகத்தின் எந்த மூலையில் என்றாலும் துன்பத்தையும் துயரத்தையும் அனுபவிக்கும் குழந்தைகளுக்குக்காகவும் அவர்களின் நல்வாழ்வுக்காகவும் குரல் கொடுக்கும் ஒரு குரலாக உன் குரல் இருக்க வேண்டும் என்றார். அன்றிலிருந்து இன்று வரை நான் அதற்காக உழைப்பதில் மகிழ்ச்சியே. எங்கே குழந்தைகளைக் கண்டாலும் பழகினாலும் நானும் குழந்தையாகி அவர்களின் உலகத்தில் இரண்டறக் கலந்துவிடுவது எனக்கு வழக்கமாகிவிட்டது. கூடவே அவர்களுக்காகக் குரல் கொடுக்க வேண்டும் என்ற எண்ணமும் சேர்ந்து என்னைப் பாடாய்ப்

படுத்துவதுண்டு. ஏதாவது சொல்ல நினைப்பதுண்டு. ஆனாலும் மற்றவர்களின் தனிப்பட்ட வாழ்கை முறைகளில் நாம் தலையிடுவது தப்பு என்ற ஒரு கோட்பாடு வந்து தடுத்தாட் கொண்டுவிடுவதுண்டு. அதிகம் கதைக்கப் போனால் யாரடி இவள் பிள்ளைபிடிகாறி போல இருக்கிறாளே எனப் பலர் நினைக்கவும் வாய்ப்பு வந்து விடுவதுண்டு.

ஆனாலும் சட்டம் இப்படியான விடயங்களில் தலையிடுவது நியாயம் என்று கூறுகின்றது. மற்றவர்களுக்குத் துன்பங்கள் வரும் பொழுது கண்மூடி மௌனியாக இருப்பது சாத்தியமல்ல. அது தர்மமுமல்ல. பாஞ்சாலி துயிலுரியப்பட்ட பொழுது கண்மூடி மௌனமாக இருந்த பீஷ்மர், துரோணர், கர்ணண், விதுரன் போன்ற பெரியவர்களின் செயல்கள் இன்றளவும் அதர்மமாகவே பார்க்கப்படுகின்றது. அந்த வகையில் சட்டங்களை மட்டுமே பெரும்பாலும் தெய்வங்களாக மதிக்கும் டென்மாக் நாட்டின் சட்டம் குழந்தைகளின் பாதுகாப்புப் பற்றி என்ன சொல்கின்றது என்று பார்ப்போம்.

## குழந்தைகளின் பாதுகாப்பு

சேவைச் சட்டம் 36இன் படி (servicelovens 36) 18 வயதுக்கு உட்பட்ட பிள்ளைகளுக்கு அவர்களின் பெற்றோராலோ அல்லது அவர்கள் வளரும் சூழலில் உள்ள வேறு எவராலோ துன்பம் இழைக்கப்பட்டால் அதனை நகரசபைக்கு அறிவிக்க வேண்டியது அந்தந்த நகர சபைக்குக் உட்பட்ட பிரதேசத்தில் வாழும் ஒவ்வொரு மக்களதும் கடமையாகும்.

சேவைச் சட்டம் 35இன் படி(servicelovens 35) அரசாங்கத்தில் வேலை செய்யும் அனைத்து ஊழியர்களும் 18 வயதுக்கு உட்பட்ட குழந்தைகளுக்கு துன்பம் நிகழ்ந்தாலோ அல்லது அவர்களின் வளர்ச்சி தடைபெறுமாறு நிகழ்வுகள் நடந்தாலோ அதனை உடனடியாக நகரசபைக்கு அறிவிக்க வேண்டும்.

நகரசபை அந்தப் பிரச்சனையை கவனத்தில் எடுத்து விசாரிப்ப துடன் குழந்தைகளுக்குத் தக்க பாதுகாப்புக் கொடுப்பது அதன் கடமையாகும். நகரசபை அதற்குரிய ஆரோக்கியமான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். பெற்றோர்கள் ஆசிரியர்கள் குழந்தை காப்பகப் பள்ளி ஆசிரியர்கள் என்பவர்களை வரவழைத்து அப்பிரச்சினைக்கான தீர்வைக் கண்டறிய வேண்டும்.

பெற்றவர்களுக்குப் பெற்றவர்களாக இருக்கும் தகுதி உள்ளதா

(parenting ability) என்பதை உளவியல் பரிசோதனைகள் மூலம் கண்டறிய வேண்டும். அவ்வாறு பெற்றவர்களுக்கு அந்தத் தகுதி இல்லை என்று அறியப்பட்டால் அரசாங்கம் அவர்களுக்கு உதவ முன்வருகின்றது. குறிப்பிட்ட காலத்துக்குப் பெற்றவர்கள் வீட்டில் எவ்வாறு நல்ல பெற்ற வராக இருக்கலாம் என்பதைப் பழக்குவதற்கு பயிற்றப்பட்ட உத்தியோகத் தர்களை நியமிப்பார்கள். அதன் மூலம் குழந்தை வளர்ப்புக்குத் தக்க பாதுகாப்புக் கொடுப்பார்கள். உளவியல் ஆலோசனைகள் வைத்திய வசதிகள் என்பவற்றை பெற்றவர்களுக்கு அரசாங்கம் செய்து கொடுக்கும்.

மேற் கூறப்பட்ட வழிகளில் நன்மை கிடைக்காத இடத்து அரசாங்கம் பிள்ளைகளை பெற்றவர்களிடம் இருந்து பிரித்து காப்பகங்களிலோ அல்லது தனிப்பட்ட குடும்பங்களிலோ வளர்ப்பார்கள்.

வேறு சில சந்தர்ப்பங்களில் பெற்றவர்களுக்குக் குழந்தை வளர்க்கும் தகுதியிருந்தாலும் வீட்டில் வளர்க்க முடியாத சூழல் இருக்கலாம்.

1.மாற்றுத் திறனாளிக் குழந்தைகள்,

2.உளவியல் நோய்கள் உள்ள குழந்தைகள்,

3.பெற்றவர்களின் விவாகரத்தினால் பாதிக்கப்பட்ட குழந்தைகள்,

4.பெற்றவர்கள் இறந்ததனால் தனிமைப்பட்ட குழந்தைகள்,

5.குடிக்கும் போதைக்கும் அடிமையான பெற்றவரின் குழந்தைகள்,

6.உளவியல் நோய் உள்ள பெற்றவர்களின் குழந்தைகள்,

7.களவு, கொலை, வன்முறைகளில் ஈடுபடும் குழந்தைகள்,

8.போதைப் பொருட்களுக்கு அடிமையான குழந்தைகள்,

9.பாலியல் கொடுமையால் தாக்கப்பட்ட குழந்தைகள்,

10.இளம் வயதுப் பெற்றவர்களின் பிள்ளைகள் (18 வயதுக்குக் குறைந்த பெற்றோர்),

11.குடும்பத்தில் வன்முறைகளைச் சந்திக்குக்கும் குழந்தைகள், (வன்முறையானது உடல் ரீதியாகவும் இருக்கலாம் அல்லது உள ரீதியாகவும் இருக்கலாம். உதாரணமாக அடித்துத் துன்புறுத்தல் அல்லது வார்த்தைகளால் கொடுமைப்படுத்துதல், திட்டுதல்)

மேற்கூறப்பட்ட வகைகளில் பலவித்திலும் துன்பத்தை எதிர் கொள்ளும் குழந்தைகள் உள்ளனர். இப்படிப்பட்ட குழந்தைகளை டென்மார்க் அரசாங்கம் தத்தெடுக்கின்றது. இவர்களை குழந்தைக் காப்பகங்கள் மூலமும் தற்காலிகமாகத் தத்தெடுத்துக் கொள்ளும் பெற்றவர்கள் மூலமும் பாதுகாப்பும் அரவணைப்பும் கொடுக்கின்றது.

பெரும்பாலும் பாதிக்கப்பட்ட சூழலில் வளரும் குழந்தைகள் பருவவயதை அடைந்ததும் தம்மைத்தாமே வருத்திக் கொள்ளும் ஒருவித மனநோய்க்கு ஆளாகின்றனர். பிளேடுகளினால் தமது உடம்பில் காயங் களை ஏற்படுத்துகின்றனர். அப்படியான வேதனைகளை ஏற்படுத்துவதன் மூலம் ஒரு விதமாகத் துன்பத்திலிருந்து தப்புதல் என்ற தற்காலிகத் தீர்வுக்கு வருகின்றனர். இந்த மன நிலையின் அடுத்த கட்டமாக உடம்பில் பச்சை குத்தி வலியை அனுபவிக்கின்றனர். சில பிள்ளைகள் பச்சை குத்துவதை நாகரீகமாகக் கொள்வார்கள். சில பிள்ளைகள் தமக்கு ஒரு அடையாளம் வேண்டும் என்பதற்காகச் செய்வார்கள்.

தமது பிள்ளைப் பருவத்தில் பாதுகாப்பற்ற அன்பற்ற அரவணைப் பற்ற சூழலை அனுபவித்த பிள்ளைகள் விரக்தியின் விளிம்பில் நிற்பார்கள். அதையும் தாண்டிய அடுத்த கட்டத்தில் தற்கொலை முயற்சிகளில் ஈடுபடுவார்கள். இத்தகைய பிள்ளைகள் பெற்றவரின் அரவணைப்பில் இருப்பது அவசியம். அதற்கு வசதி கிடைக்காத இடத்து இப் பிள்ளைகளை அரசாங்கம் எடுத்துப் பாராமரிக்கின்றது.

போதைப் பொருட்களுக்கு அடிமையான பிள்ளைகள் மேலும் மேலும் அதைப் பாவிப்பதற்குப் பணம் தேவைப் படும் பொழுது களவுத் தொழில் செய்யத் தொடங்குகின்றார்கள். கொலை களவு போன்ற குற்றச் செயல்களில் தம்மை இழந்து தினம் தினம் மனதளவிலலும் உடல்ரீதி யாகவும் துன்பப்படுகின்றனர். இவர்களையும் அரசாங்கம் தத்து எடுத்துப் பராமரிக்கின்றது.

மேலும் பெற்றவர்கள் பெற்றவர்களாக இருக்க முடியாத இடத்தில் பிள்ளைகள் பெற்றவர்களுக்குப் பெற்றவர்களாக வாழும் சூழல் சில குடும்பங்களில் காணப்படுவதுண்டு. உதாரணமாக பூமணியக்காவின் மூத்த பேரன் தன் தங்கையை ஒரு தாய் போன்று பார்க்கின்றான். தான் பாடசாலைக்குப் போகமுன்பு அவளைக் காப்பகத்தில் விடுகின்றான். தங்கையைக் கவனிப்பதும் படுக்கையில் இருக்கும் தாயைப் பராமரிப்பதும் அவனுடைய வயதுக்கு மீறிய பொறுப்புக்களே. இதற்கிடையில் குடிபோதையில் இருக்கும் தந்தையைச் சமாளிப்பதுவும் அவன் மீது

சுமத்தப்பட்டுள்ள மற்றுமொரு பொறுப்பாகும். நமது ஊர் வழக்கப்படி பேரன் பேத்தி உதவி செய்யக் கூடிய நிலைப்பாடும் இங்கில்லை.

பூமியக்காவின் பேரனைப் போல எத்தனையோ பிள்ளைகள் தமது பெற்றவர்களுக்குத் தாமே பெற்றவர்களாக வாழ்ந்து வருகின்றனர். இத்தகைய குழந்தைகள் தமது வயதுக்கு மீறிய பெறுப்புணர்வும் புத்திசாலித்தனமும் உள்ளவர்களாக இருப்பார்கள்.

இவர்கள் வளர்ந்து பருவவயதை அடைந்து பெரியவர்களாகும் பொழுது அதீத தன்னம்பிக்கை உள்ளவர்களாகவும் அதே நேரம் சக மனிதர்கள் மீது நம்பிக்கை குறைந்தவர்களாகவும் இருப்பார்கள். பெற்ற வரின் தேவைகளைக் குறிப்பால் உணர்ந்து செயல்பட்டு அவர்களைப் பராமரித்த இப்பிள்ளைகளுக்கு வயதுக்கு மீறிய அனுபவங்கள் இருக்கும். அதே நேரம் குழந்தைகளாக இருக்கமுடியாமல் போன காலத்தில் ஏற்பட்ட மனத்தாக்கங்கள் இவர்கள் வளர்ந்து பெரியவர்களானதும் தனிமை யுணர்வு, மனவழுத்தங்கள் போன்ற உளவியல் நோய்களைக் கையோடு கூட்டிவந்து விடுகின்றன.

எங்கள் வீட்டுக்கு எதிர் வீட்டில் ஒரு டெனிஷ் குடும்பத்தினர் வசித்து வந்தனர். அப்பா, அம்மா, மகள் (வயது 6) என மூவரைக் கொண்ட அழகிய குடும்பம் அது. அந்தப் பிள்ளை சில வேளை எங்கள் பிள்ளை களுடன் விளையாட எம் வீட்டுக்கு வருவதுண்டு. ஒரு நாள் மாறுதலுக்காக உங்கள் வீட்டில் விளையாடலாமா என என் மகள் கேட்டாள்.

“எங்கள் வீட்டில் அம்மா அடிக்கடி வீடு கூட்டிறதும் பாத்திரங்கள் கழுவுவதுமாக இருப்பா. இப்ப கொஞ்ச நாட்களாக அதிகமாகக் கழுவுகின்றா. வலு கெதியில அவா ஆஸ்பத்திரிக்குப் போய்விடுவா என நினைக்கிறன். அதுக்குப் பிறகு எங்கட வீட்டில விளையாடலாம்.” என அச் சிறுமி கூறினாள்.

இந்த உரையாடலைக் கேட்டுக் கொண்டு இருந்த நான் அப்பிள்ளையின் தந்தையிடம் உங்கள் மகள் இப்படிச் சொன்னவள் எனக் கூறினேன்.

“அவள் சொன்னது சரி தான். என் மனைவிக்கு இருமுனைக் கோளாறு (Bipolar disorder) என்ற மனநோய் உள்ளது. வருத்தம் கூடுத லாகப் போகின்றது என்பதற்கு அறிகுறியாக நித்திரை இல்லாதிருப்பதும் அதிகமாகத் துப்பரவு செய்வதுமாக ஒரு உளைச்சலான மனநிலையில் இருப்பார். அந்த நிலை கூடும் போது அவாவை நாங்கள் ஆஸ்பத்திரியில்

சேர்த்து விடுவோம். என் மகளுக்கு இது பழகிப்போய் விட்டுது. அப்பா அம்மா அதிகமாப் பாத்திரங்களைக் கழுவுகின்றா இனி ஆஸ்பத்திரி போற நேரம் வந்திட்டுது எனத் தானாகவே அவள் என்னிடம் சொல்லுவாள் என்றார்."

வீட்டுச் சூழல் தாயின் நோய் எல்லாம் சேர்ந்து அவளை வயதுக்கு மீறிய முதிர்ந்த பிள்ளையாக மாற்றியிருந்தது.

நான் முன்பு வேலை செய்த பாடசாலையில் ஒரு பிள்ளை ஒரு நாள் என்னை ஒரு கேள்வி கேட்டாள்.

"ஒருவருக்கு ஒருவரில விருப்பம் இல்லை என்றால் அதுக்காக யாராவது தற்கொலை செய்வார்களா?

"அப்படி ஏதுமில்லை. நீ எதற்காக இந்தக் கேள்வியைக் கேட்கின்றாய் என்று நான் கேட்டேன்.

"என்ர அப்பாவும் அம்மாவும் விவாகரத்துப் பெற்றுக் கொண்டனர். இப்போது அம்மாவும் நானும்தான் வீட்டில தனிய இருக்கிறம். நீ இல்லாட்டி நான் செத்துப் போவன் என்று அம்மா சொல்லுவா." என்று சொல்லிவிட்டு யோசித்தபடி இருந்தாள்.

"அம்மா உன்னில பாசத்திலதான் அப்பிடிச் சொல்லிறா" என்று நான் சொன்னேன்.

"அப்பிடியில்லை ரீச்சர் அம்மா போன கிழமை ஒரு நாள் தற்கொலை செய்யப் போய்விட்டா. நிறைய நித்திரைக்குளிசைகளைப் போட்டுவிட்டா. அவா கனநேரமாக எழும்பவில்லை. அதுக்குப் பிறகு நான் சித்திக்குப் போன் எடுத்த பிறகு சித்தி வந்து அம்மாவை அம்புலன்சில் ஆஸ்பத்திரிக்குக் கொண்டு போனாங்கள். அம்மா தப்பிவிட்டா. என்னில விருப்பம் எண்டும் எனக்காகத்தான் தான் வாழ்வதாகவும் தானே அம்மா சொன்னவா. பிறகு எதுக்குச் செத்துப்போக நினைச்சவா? அப்போ நான் ஏதாவது தப்புச் செய்து போட்டேனா? என்னாலேதான் அவா செத்துப் போக நினைத்தவாவா? எனக்கு எதுவும் புரியவில்லை. ஆனால் அழுகை அழுகையாக வருகுது" எனக் கூறி மீண்டும் அழுதாள். பெற்றவரின் பிரிவுக்கும் தாயின் தற்கெலை முயற்சிக்கும் தான் தான் பொறுப்போ என அக் குழந்தை மனம் கலங்கித் தவித்தது.

"அம்மா உனக்காகச் செத்துப் போக நினைக்கவில்லை. அவாவின் மன அழுத்தம் என்ற உளநோய்தான் இதற்குக் காரணம். அம்மா மருந்து எடுத்துக் கொண்டால் சுகமாகி வந்திடுவா" என நான்

ஆறுதல் சொன்னேன்.

இப்படி எத்தனை எத்தனையோ குழந்தைகள் மன நலம் பாதிக்கப்பட்ட பெற்றவர்களிடம் வளரும் பொழுது தமது குழந்தைப் பருவ மகிழ்ச்சிகளையும் பெற்றவரின் அரவணைப்பையும் இழந்து வாழ் கின்றனர். பெற்றவர்களின் புறக்கணிப்பினால் அவர்களுக்குக் கிடைக்க வேண்டிய உளவியல், பொருளாதார, சமூக ரீதியான பாதுகாப்புக்கள் கிடைக்காது போகின்றன. இத்தகைய பாதுகாப்பான ஆரோக்கியமான வாழ்க்கை குழந்தைகளுக்குத் தேவை என்பதனால் அரசாங்கம் புறக் கணிக்கப்படும் பிள்ளைகளுக்கு ஆதரவு கொடுத்து அவர்களைத் தானே தத்து எடுக்கின்றது.

பூமணியக்காவின் பேரப்பிள்ளைகள் இப்பொழுது ஒரு டெனிஷ் குடும்பத்தினரால் பராமரிக்கப் படுகின்றனர். என்ன இருந்தாலும் பூமணியக்காவின் கண்ணீரை யாராலும் துடைக்க முடியவில்லை.

நேற்று பூமணியக்காவும் நானும் நடந்து போய்க் கொண்டிருந்த பொழுது என்னுடன் வேலை செய்த என் பழைய டெனிஷ் தோழியைச் சந்தித்தேன். அவளுக்கு ஒரே ஒரு மகள். மகளுக்கு இரண்டு பிள்ளைகள்.

கண்டு கன காலமாச்சுது என இருவரும் நலம் விசாரித்துக் கொண்டோம். நாங்கள் நின்று கொண்டு கதைத்த பொழுது பூமணியக்கா கால் வலிக்குது என்று சொல்லிப் போட்டுத் தெருவில் இருந்த ஒரு வாங்கிலில் இருந்தார்.

கதைத்து முடிந்து என் தோழி புறப்பட்டதும் பூமணியக்காவும் நானும் தொடர்ந்து நடக்கத் தொடங்கினோம்.

“பூமணியக்கா! என்ர தோழியின் கதையைக் கேட்டால் நீங்கள் என்னோடும் இனிமேல் கதைக்கமாட்டியள் என்று நான் சொன்னேன்.

என்னடி புதிர் போடுகிறாய் என அவா கேட்டா..

“அக்கா இவா இப்ப தன்ர மகளைப் பாக்க ஆஸ்பத்திரிக்குப் போகின்றா. இவாட மகளுக்குப் புற்றுநோய் வந்திருக்கு. மருமகன் ஆமியில இருந்தவர். அவர் போன வருசம் உக்கிரையின் யுத்தத்தில செத்துப் போனார். இவாட மகள் வருத்தம் வந்து ஆஸ்பத்திரிக்குப் போன பிறகு பிள்ளையள் பேத்தியோட அதாவது என்ர தோழியுடன் தான் இருந்தவர்கள். ஆனால் தன்னால தன்ர பேரப்பிள்ளைகளைப் பார்க்க முடியாது என்றும் அவர்களை அரசாங்கம் பொறுப்பெடுக்க வேண்டும் என்றும் இவா நகர சபைக்குப் போன் அடிச்சுச் சொல்லிப் போட்டாவாம்”

என்று நான் சொன்னேன்.

“இது என்னடி இழவாய்கிடக்குது. இந்தப் பேத்தியே பிள்ளபிடிகாறி போல இருக்கிறாள்.” எனப் பூமணியக்கா புலம்பினார்.

“அக்கா நீங்க நினைப்பது போலத்தான் நானும் நினைத்தேன். ஆனால் எனக்கு இப்ப அவா செய்தது சரி என்றே படுகின்றது.”

“எனக்கு வயசாகியவிட்டது. பாசம் எண்ட பேரில அதுகளை நான் வளர்க்க வெளிக்கிட்டாலும் அது சரிப்படாது. பிள்ளைகளுக்கும் பருவவயது வந்திட்டுது. இரவில தங்கட கூட்டாளியளோட கொண்டாட்டங்களுக்குப் போவீனம். குடிப்பழக்கம் போதைப்பழக்கங்கள் எண்டு பல கெட்ட பழக்கங்கள் பழகிற வயசு இது. என்னால எல்லாத்தையும் கவனிக்க முடியேல்ல .பிள்ளைகள் வழிதவறிப் போய்விடுவார்களோ என எனக்குப் பயமாக இருந்தது. ஏதும் ஏறுமாறாக நடந்தால் நான் எத்தினை பேருக்கு மறுமொழி சொல்ல வேண்டும். அதனாலதான் அரசாங்கப் பொறுப்பில் விட்டுவிட்டேன்.” இப்பிடித்தான் அந்தப் பேத்திக்காறி சொல்லிப் போட்டுப் போறாளக்கா.

“கலி முத்திப் போச்சு நான் என்டால் என்ர பேரக்குஞ்சுகளைப் பிள்ளை பிடிகாரரிட்ட விடமாட்டேன்.” என மிக ஆணித்தரமாகப் பூமணியக்கா சொன்னா.

“பூமணியக்கா, உங்கட பேரப்பிள்ளைகளை நீங்கள் தான் பார்த்து வளர்க்க வேண்டும் என நினைக்கிறியள். ஆனால் அந்தப் பேத்திக்காறி பிள்ளையள் எங்க இருந்தாலும் பாதுகாப்பாக வளர்க்கப்பட வேண்டும் என நினைக்கிறா. நம்மட நினைப்பில்தான் இன்பமும் துன்பமும் தங்கியிருக்குது.” என்று நான் சொன்னேன்.

அதுவும் சரி தான்டி பிள்ளை. நான் ஊரில படிக்கிற காலத்தில பள்ளிக்கூட விடுதியில் இருந்து படித்தேன். பிறகு கல்யாணமாகிப் புகுந்த வீட்டுக்குப் போனேன். இவை எல்லாம்கூட இப்படிப்பட்ட ஒருவித புலம்பெயர்வுதானே. பூமணியக்கா யோசித்து யோசித்துக் கதைத்தா.

“ஓமக்கா நீங்க சொல்லிறதைக் கேட்டால் சிரிப்பதா அல்லது அழுவதா எனப் புரியவில்லை. உதாரணமாக வேரோடு பிடுங்கி வேற இடத்தில நடப்படும் மரங்களாக எல்லாப் பெண்பிள்ளைகளும் வாழ்ந்து விட்டோம். பிறந்த வீட்டு உறவுகளும் நினைப்புக்களும் நமக்கு மறுக்கப் பட்டனவாக அல்லது மறைக்கப்பட்டனவாகத் தானே இருந்தன. எந்த ஒரு ஆண்பிள்ளையும் தமது பெற்றவரை விட்டுப் பிரிந்ததில்லை.

ஆண்பிள்ளை குடும்பத்தின் அழியாச் சொத்துப் போலவும் பெண்பிள்ளை குடும்பத்தின் பாவச் சொத்தாகவும் பாவிக்கப்பட்டு வந்துள்ளது.” நான் உணர்ச்சிவயப்பட்டுக் கூறினேன்.

“உண்மை தான் பிள்ளை” பூமணியக்கா புன்னகைத்தார். ஆனாலும் அது ஒரு துக்கமான புன்னகையாகவே புறப்பட்டு வந்தது.

“என்ர பிள்ளை என்ர பிள்ளை என்ற மகாமந்திரம் பெரும்பாலும் ஆண்பிள்ளைகள் பெற்ற அம்மாக்களால் ஓதப்படுவதே நமது சமுதாயத்தில் வழமையாக உள்ளது. ஆனால் பெண்பிள்ளை பெற்றவர்கள் தமது பிள்ளை வேறு குடும்பத்தில் வாழப் போகின்றது என்ற நினைப்பில் பிள்ளைகளைப் பிரிவதை வளர்ச்சியின் ஒரு கட்டமாகப் பார்த்து மகிழத் தொடங்கி விடுகின்றனர்.

“தனது பிள்ளை தனது சொத்து அல்ல என்ற நினைப்பைப் பெண்ணைப் பெற்றவர்கள் மனதில் கொண்டே பெண் பிள்ளைகளை வளர்க்கின்றனர். இன்று நேற்று அல்ல காலங்காலமாக இது தான் நடந்தது. சீதையைப் பெற்ற ஜனக மகாரா, பாஞ்சாலியைப் பெற்ற துருபத மன்னன், கண்ணகியைப் பெற்ற மாசாத்துவான் எல்லோரும் தம் பிள்ளைகளைத் தத்துக் கொடுத்த நிலையிலேயே இருந்தார்கள். இவர்களும் இவர்களது மனைவிமார்களும் செய்த தியாகங்களிலே தான் இதிகாச இலக்கியங்கள் கட்டி எழுப்பப்பட்டன. “ நான் சொல்லிக் கொண்டே இருந்தேன்.

“பிள்ள நீ சொல்லிறது சரி தான். ஆனாலும் இப்பிடிச் சொன்னால் நம்ம சனம் உனக்கும் எனக்கும் அடிக்கத்தான் வருங்கள்.

வானமும் இருட்டிக் கொண்டு வருகுது வீட்ட போவம் பிள்ளை” எனப் பூமணியக்கா கூற இருவருமாக அவரவர் வீடுகளை நோக்கி நடக்கத் தொடங்கினோம்.

# அத்தியாயம் - 12

## சொர்க்க வாசலும் நரக வாசலும்

2015ஆம் ஆண்டு அம்மாவைப் பார்க்க நான் டென்மார்க்கிலிருந்து இலங்கைக்குப் போயிருந்தேன்.

“நீ என்னுடன் இருக்க வேண்டும் என்று நினைக்காதே. நீ எப்பொழுது ஜீவாவிடமும் பிள்ளைகளிடமும் போய்ச் சேர்கின்றாயோ அப்பொழுது தான் நான் நின்மதியாகவும் மகிழ்வாகவும் இருப்பேன்”

இந்த வார்த்தை என் அம்மா வயோதிபத்தின் இறுதிக்கட்டத்தில் இருந்தபோது கூறிய வார்த்தைகள். டென்மார்க்கிற்கும் இலங்கைக்கும் இடையிலான தூரம் என்பதோ தன்னுடன் தன் பிள்ளை இருக்க வேண்டும் என்பதோ அம்மா மனதில் பிரச்சனையாக இருக்கவில்லை.மாறாகத் தன் பிள்ளை தன் குடும்பத்துடன் பாதுகாப்பாகவும் மகிழ்வாகவும் இருக்க வேண்டும் என்பதே அவாவின் இறுதி ஆசையாக இருந்தது.

ஆம் நாம் இவ்வுலகை விட்டுப் போகும் போது நம்முடையது என்று கூறிய எதையும் எடுத்துப் போகமுடியாது. நான் என்ற ஆணவம் எனது என்ற பற்று எல்லாமும் காற்றோடு காற்றாகிக் காணாமல் போய்விடுகின்றது. எனது வீடு, எனது காணி, எனது கார், எனது பட்டம் பதவி எனது குடும்பம், எனது பிள்ளை, எனது சாதி, எனது மதம், எனப் பலப்பல விதமாகத் தலையெடுத்து நின்ற எனது என்ற எல்லாமும் எனது இல்லை என்று போகும் போது நமக்கு ஒரு விழிப்பு நிலை உருவாகின்றது. அடடா வாழ்கையில் இந்த எனது என்ற ஒரு நினைப்பு என்னை எப்படி எல்லாம் பாடாய் படுத்தியது என்று எண்ணத் தோன்றுகின்றது. நான் என்ற நினைப்பும் எனது என்ற பற்றும் இல்லாதிருந்தால் வாழ்வில் பல சிக்கல்களைத் தவிர்த்திருக்கலாம் என எண்ணத் தோன்றுகின்றது.

ஆம்! இந்த இடத்தில்தான் நான் கூற முற்பட்ட உங்கள் குழந்தைகள் உங்கள் குழந்தைகள் இல்லை என்ற கருத்து உருவகம் பெறுகின்றது. ஒருமுறை கண்ணை மூடி நம் கடந்த காலங்களை

நினைத்துப் பார்த்தால் இந்த உண்மை நமக்குப் புலனாகும். நம் குழந்தைகள் மீது நாம் அளவற்ற அன்புடையவர்களாகவே இருக் கின்றோம்.ஆனால் நமது கண்ணோட்டங்கள் தவறுதலாக இருக்கு மிடத்தில் அந்த அன்பானது கடலில் கொட்டப்பட்ட சர்க்கரை போன்று காணாமல் போய் விடுகின்றது. சொர்க்கமாக இருக்க வேண்டிய வீடு நமது நடவடிக்கைகளினால் நரகமாக மாறிவிடுகின்றது.

ஒட்டு மொத்தமாக இந்த நூலில் இது வரை கூறியவற்றை ஒரு மீள்பார்வை பார்க்கலாம் என நினைக்கின்றேன்.

1.பிள்ளைகளை நமது சொத்துக்கள் என்ற ரீதியில் பார்க்காது அவர்களைத் தனிப்பட்ட உடல் உள்ளம் கொண்ட மனிதர்களாகப் பார்க்க வேண்டும்.

2.குழந்தை வளர்ப்புப் பற்றிய உளவியல் விஞ்ஞான ரீதியிலான புரிதல் பெற்றவர்களுக்கு அவசியம். காலமாற்றமும் கலாசார மாற்றமும் குழந்தை வளர்ப்பில் கருத்தில் கொள்ளப்பட வேண்டும்.

3.பிள்ளைகளுடனான கருத்துப் பரிமாற்றம் நல்ல மொழியில் அமைதல் வேண்டும். பிள்ளைகளை அடிப்பதும் வன்முறைகளைக் கடைப்பிடிப்பதும் கூட ஒருவிதமான கருத்துப் பரிமாற்றமே. வன்முறைகள் தவிர்க்கப்படவேண்டும்.

4.கட்டுப்பாடு என்பது குழந்தை வளர்ப்பில் முதுகெலும்பு போன்றது. அன்பும் அரவணைப்பும் சுவாசம் போன்றது.

5.பெற்றவர்கள் விழிப்புணர்வு மிக்கவர்களாக இருக்க வேண்டும். பெற்றவர்களின் சிறுபராயத்து அனுபவப் பதிவுகள் அவர்களின் ஆழ் மனதில் பதிந்து அவர்களையும் அறியாது அவர்களை ஆட்டிப்படைக்கும். அப்பெழுது விழிப்புணர்வுடன் குழந்தைகளை வளர்ப்பது அவசியம்.

6.புலம்பெயர் தேசங்களில் ஏற்படும் அடையாளச் சிக்கல்களைப் பெற்றவர்களும் பிள்ளைகளும் புரிந்து கொள்ள வேண்டும்.

7. பெற்றவர்கள் பெற்றவர்களாக இயங்கமுடியாத போது அரசாங்கம் குழந்தைகளை சட்டப்படி பெற்றவரிடமிருந்து பிரிக்கும் என்பதைப் பெற்றவர்கள் கவனத்தில் கொள்ள வேண்டும்.

பெற்றவர்களின் அன்பானது மலையிலிருந்து வரும் அருவி போன்றது. அது எந்த எதிர்பார்ப்பையும் கொண்டதல்ல. சுயநலமற்ற அந்த அன்பானது மனிதர்களாகிய நம் அனைவரிடமும் உள்ளது. “மலையானது

நீ என்னிடம் இருந்து தானே பிறந்தாய். அதுபடியால் நீ மீண்டும் என்னிடம் வா” என நதியைக் கேட்பதில்லை. காடு கரம்பை நாடு என எல்லைகளைக் கடந்து நதி ஓடுகின்றது. ஒரு இடத்தில் மட்டும் தேங்கிவிட்டால் அது குளமாயும் குட்டையாகவும் மாறிவிடும். அவ்வாறே நாம் நமது குழந்தைகள் மீது வைக்கும் அன்பு எதிர்பாப்புடையதாக இருந்தால் அது நமக்குத் துக்கத்தையே பரிசாகக் கொடுக்கும். நம் அப்பா அம்மாவிடம் பெற்ற அன்பை நாம் நமது குழந்தைகளுக்குக் கொடுக்கின்றோம். அவர்கள் அதைத் தமது பிள்ளைகளுக்குக் கொடுப்பார்கள்.அவர்கள் அதை அடுத்த சந்ததிக்குக் கொடுப்பார்கள். சுற்றம் சூழல் நகரம் நாடு எனப் பல எல்லைகளைக் கடந்து அது உலகம் எங்கும் பரவும்.

அம்மா அப்பா தள்ளாத வயதிலும் தம் பிள்ளைகள் நலமாக இருப்பதையே விரும்புவார்கள். மாறாக நீ என்ன செய்தாய் எனத் திட்ட மாட்டார்கள். சாபம் போட மாட்டார்கள். அப்படிப்பட்ட தூய அன்பானானது தப்பான புரிதல்களுக்கு உட்படப்படாது என்ற சிந்தனையே நான் இந்த நூலை எழுதுவதற்கு உந்துதலாக இருந்தது.

பட்டாம் பூச்சியானது பறக்க வேண்டியது. அதை நாம் பிடித்துக் கைகளில் பொத்தி வைத்தால் அது நசுங்கி இறந்துவிடும். ரோசாப்பூ அழகானது என்பதற்காக அதைத் தொட்டுத் தொட்டு கசக்கினால் அது வாடிவிடும். அவ்வாறே நம் குழந்தைகளையும் நாம் அளவுக்கதிகமாக உரிமை கொண்டாடினால் அவர்களுக்கும் நமக்குமான உறவு அழிவுப் பாதையை நோக்கியே செல்லும். நம்மிடம் காணி, பூமி, வீடு வாசல் , கார் போன்ற சொத்துக்கள் உள்ளபோது அவற்றின் மீது முழு அதிகாரமும் பற்றும் வைக்கின்றோம். நமது குழந்தைகளை நாம் அப்படிப்பட்ட சொத்துக்கள் போன்று நினைக்காது அவர்களுக்கும் உணர்வும் உயிரும் உண்டு . அவை நமது உணர்விலிருந்தும் உயிரில் இருந்தும் வேறுபட்வை என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

நாம் இறந்தபின்பும் அவர்கள் வாழத்தான் போகின்றனர். தொப்பிள் கொடி அறுபட்டதால்தான் குழந்தை பிறந்தது என்பதை நாம் மறந்து விடுகின்றோம். இயற்கை என்ன சொல்கின்றது. பிரித்துவிட்டால் தான் ஒன்று இரண்டாகும் என்கின்றது. பிறந்த குழந்தை வளர்ந்து வரவேண்டுமானால் இந்த இடைவெளி அவசியமே. நாற்றைப் பிடுங்கி வேறு இடத்தில் நட்டால்தான் நெல் நன்றாக வளர்கின்றது. விதை தன்னை விடுவித்த பின்புதான் மரம் முளைக்கின்றது. அந்தமரம் எப்படிக் கிளைவிட

வேண்டும் என விதை தீர்மானிக்க முடியாது. அந்த மரம் வளர்ந்து வருவது அதனுடைய தனிப்பட்ட சக்தியில் தங்கியுள்ளது. கீழே விழுந்த விதையானது மீண்டும் தான் பெற்றெடுத்த மரத்துக்குப் பசளையாகி மண்ணோடு மண்ணாகி மரம் வேர்விட உதவுகின்றது. அவ்வாறே பெற்றவர்களது அன்பையும் பிள்ளைகள் புரிந்து கொள்வார்கள்.

நம்மால் இவ்வுலகிற்கு வந்தவர்கள் நம் பிள்ளைகள். ஆனால் அவர்கள் வேறு வேறு தன்மைகள் கொண்ட ஆத்மாக்கள்.

பிள்ளையைத் தன் வயிற்றில் கொண்டு திரியும் கங்காருவும் வளர்ந்த தன் பிள்ளையை தன் வயிற்றுப் பையில் வைப்பதில்லை வைக்கவும் முடியாது.

நாம் இவ்வுலகை விட்டுச் செல்லும் பெழுது நமது அன்பையும் அறிவையும் மட்டுமே நம் குழந்களுக்காக விட்டுச் செல்ல முடியும். காரணமற்ற அந்த அன்பானது நமக்கும்சரி நம் பிள்ளைகளுக்கும்சரி சொர்க்கமும் நரகமும் நமது கைகளிலேதான் இருக்கின்றது என்பதை உணர்த்துகின்றது. இந்த வகையில் பெற்றவருக்கும் பிள்ளைகளுக்கும் புரிதலை உண்டாக்கும் ஒரு பாலமாக இந்த நூல் அமையும் என நினைக்கின்றேன்.

## துணை நூல்கள் ( டெனிஷ் மொழி நூல்கள்.)


1.Udviklingspsykologiske teorier

Redigeret og skrevet af Espen Jerlang i samarbejde med

Sonja Egeberg , John Halse,Ann Joy Jonassen,Suzanne Ringsted,Birthe wedel- Brandt.

2.SE dit barn som det er. Dansk udgave 1999.

Original titel Giving the love that healls.

Harville Hendrix og Helen Hunt

Oversat af Asta Smith- Hansen.

3.Identitet og udvikling . Leif Mousten

Leif Moustens Forlag 1986.

4.De kære børn .Anna Wahlgren .Gyldendal 1984

5.Hvad børn ikke ved ....Har de ondt af..Karen glistrup..Hans Retzels forlag 2014

6.Pædagogisk arbejde med tosprogede børn. Redaktion .Peter Mikkelsen,Dafolo forlag 2010

7.Mødre der udsætter deres børn for alvoligt omsorgssvigt

Birgitte Brun og Åse wintlev . Psykologisk forlag 2009.

8.Børn i Alkoholfamiler ,Anna Furbo Rewitz,Børns vilkår 2009.

9.Hele hjernen Hele barnet ,Daniel Siegel og Tina Payne Bryson,

Forlaget Klim 2019

10.Pædagogisk arbejde med tosproged børn Redaktion Peter Mikkelsen Dafolo forlag 2010

11.Sidste Udvej ( om at Anbringe og blive anbragt på sikret institution.) Ann-karina Henriksen og Rikke cecille Bjerrum Refsgård .Akademisk Forlag 2020.

12.Når børn lever sammen med psykisk forældre .psykiatrifonden 2003.

13.Børn og skilsmisse ,Anja Marschall ,samfundslitteratur 2017.

14.Lad børnene være i fred . sigrid Riis , Gyldendals Bogkluber 2001.

15.Grænser eller ej? Erik Sigsgård og Ole Varming. Hans Reitzels Forlag 1996.

16.Hvorfor er børn så besværlig? Lotte Heise. Lindhardt og Ringhof.

| File | QR Code |
|---|---|
| Audio 1 (Preface) | |
| Audio 2 | |
| | |

| | |
|---|---|
| Audio 3 | |
| Audio 4 | |

| | |
|---|---|
| Audio 5 | |
| Audio 6 | |

| | |
|---|---|
| Audio 7 | |
| Audio 8 | |

| | |
|---|---|
| Audio 9 | |
| Audio 10 | |

| | |
|---|---|
| Audio 11 | |
| Audio 12 | |

| | |
|---|---|
| Audio 13 | |

## நூலாசிரியரின் பிற நூல்கள்

கலாநிதி ஜீவகுமாரன் அவர்கள் தனித்துவமான சிந்தனைப் பேராற்றல் கொண்ட பெண்மணி. சமூகத்திற்கு பயன்படக்கூடிய வகையில் நூல்களைப் படைக்க வேண்டும் என்ற எண்ணத் தோடு தன் படைப்புச் செயற்பாட்டை மேற் கொண்டு வருபவர். 'இப்படிக்கு அன்புள்ள அம்மா' என்ற அருமையான சமூகப் பயன்பாடான உளவியற் சிந்தனை மிகுந்த நூலை ஏற்கெனவே நம் சமூகத்திற்கு தந்துள்ளார். தற்போது 'உங்கள் குழந்தைகள் உங்கள் குழந்தைகள் அல்ல' என்னும் நூலினூ டாக சமூகத்திற்கு பயன்பாடான ஒரு குழந்தையாக குழந்தைகள் வளர்க்கப் பட வேண்டும் என்ற கருப்பட, குழந்தைகள் பற்றிய பல்வேறு விடயங் களை தெரிவித்துள்ளார். உளவியல் சிந்தனைகள் நிறைந்த நூலாக இந்நூல் காணப்படுகின்றது. சிறந்த பிள்ளை வளர்ப்பை மேற்கொள்ள விரும்பும் பெற்றோர்களுக்கு வழிகாட்டி யாக இந்நூல் அமையவல்லது.

– க.பரணீதரன்



ISBN 955524963-6